முனைவர் அ. இருதயராஜ்   நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ்

நறுந்தமிழ்

பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Narunthamizh

முனைவர் அ. இருதயராஜ்

All's square Publication,
Madha Koil Street, periyapattu, Silambimangalam (po),
Bhuvanagiri Tk, Cuddalore Dt, Tamil Nadu 608801.

நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ் -1

பதிப்பாசிரியர்

முனைவர் அ.இருதயராஜ்

All's square Publication,

Madha Koil Street, periyapattu, Silambimangalam (po),

Bhuvanagiri Tk, Cuddalore Dt, Tamil Nadu 608801.

நூல் குறிப்பு

நூலின் பெயர்	: **நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ்-1**
ஆசிரியர்	: **முனைவர் அ.இருதயராஜ் (பதிப்பு)**
பதிப்பு	: மார்ச் -2026
அளவு	: டெம்மி
பதிப்புரிமை	: ஆசிரியருக்கு
பக்கங்கள்	: 194
அச்சு	: 12 புள்ளிகள்
அட்டைக்கட்டு	: சாதா அட்டை
வெளியீடு	: **All's squire Publication**
விலை	: 45-ரூபாய்
ISBN	: 978-93-5912-109-3
தொடர்புக்கு	: 9786864409.

எங்களை பற்றி

அன்புள்ளங்களுக்கு வணக்கம்.

பழமைவாய்ந்த தமிழ் மக்கள் வாழும் தமிழக மண்ணிலிருந்து வெளிவரும் நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ் உலக மக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறது. நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ் சனவரி 2026ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இவ்விதழ் ஆண்டுக்கு நான்கு முறை சனவரி, ஏப்ரல், ஜீலை, அக்டோபர் ஆகிய திங்களில் வெளிவரும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழர் இனம் உலகில் தொன்மை வரலாறு பெற்ற இனங்களுள் ஒன்று. இதற்குத் தெளிவான சான்றுகள் பல உண்டு. தமிழக வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்மொழி வரலாறு என இன்று வரை பல அறிஞர் பெருமக்களால் பலவாறு ஆய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகள் வெளிவந்துள்ளன. இந்த ஆய்வுகளுக்குத் தமிழக வரலாற்று மூலங்களான இலக்கியங்கள், இலக்கணங்கள், உரைகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், அகழ்வாராய்ச்சிப் பொருட்கள், நாணயங்கள், கலைகள், வெளி நாட்டார்க் குறிப்புகள், ஆவணக்குறிப்புகள், மொழி ஆகியன சான்றாக அமைகின்றன. இவற்றுள் பல மூலங்கள் இன்னும் முழுமையாக ஆராயப்படாத நிலையிலும் உள்ளன. கிடைத்த மூலங்கள் இன்னும் பலக் கோணப்பார்வையில் ஆராயப்பட வேண்டியதும் இன்றியமையாததாகும்.

தற்போது உலக அளவில் நமது மொழியினை கொண்டு செல்ல தமிழ் மொழியைப் பற்றியும் தமிழர்களைப் பற்றியும் பல ஆய்வுகள் வெவ்வேறு ஆய்வுக் கோணங்களில் முறையான, நடுநிலையான ஆய்வுகள் தேவைப்படுகின்றன. இன்று தோன்றியுள்ள பலவகையானத் துறைகளோடு இணைந்து ஆராயப்பட வேண்டியதும் கட்டாயமாகிறது. அதற்கான சிறு முயற்சியில் உங்களையும் பங்கெடுத்துக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் தமிழ் ஆய்வோடு பிற துறைகளையும் ஒப்பீட்டு பார்த்து தொடர்புபடுத்தி எழுதும் அனைத்து ஆய்வுகளையும் நறுந்தமிழ் பாதுகாப்பு களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படும். உங்களது ஆய்வுக்கட்டுரைகளால் தமிழின் உண்மை நிலையினைத் தக்க சான்றுகளோடு உலகறிய முன்னெடுப்போம். நமது தமிழ் மொழியின் உயர்வை உலகிற்கு உரக்கச் சொல்ல நமக்கான களம் இது. அன்புடன் இணையுங்கள்.

Title	: International Journal Of Narunthamizh
Variant Title	: நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ்
starting year	: 2016
Frequency	: Quarterly (January, April, July, October)
Format Of Publication	: online
Subject,	Multidisciplinary Subjects
Language	Multiple Language (Tamil, English)
Editor in Chief	: Dr. A.Irudhayaraj
Publisher	: Narunthamizh Ilakkiyapozhil (All's squire Publication)

நோக்கமும் வரையரையும்

- நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ்; மொழி, இனம், பண்பாட்டுக் கலாச்சாரம், சமயம், பொருளாதாரம், அரசியல், வணிகம், கல்வி தத்துவம், மருத்துவம், உளவியல் போன்றவைகளின் தொடர்புடைய சிக்கல்களுக்கான ஆய்வுத் தரத்தை மேம்படுத்தும் நடைமுறை அணுகுமுறைத் தளத்திற்கான ஒரு முன்னோடி ஆய்விதழாக உருவாவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உயர்தரம் மிக்க ஆய்வுகளைப் பதிப்பித்து அதனைப் பரந்த அளவிலான வாசகர்களுக்குக் கொண்டு சேர்ப்பதே இவ்வாய்விதழின் முதன்மை நோக்கமாகும். ஆய்விதழ் பதிப்புத் துறையில் உயர் அடைவை முன்னிருத்திப் பொறுப்புடனும் தொழில்முறை அணுகுமுறையுடனும் அதனை நிலைநிறுத்துதல்

எண்	பொருளடக்கம்	பக்கம்
1.	**பாரதியின் பெண் விடுதலைக் கவிதைமொழி** முனைவர் பெ.மோகன்	7
2.	**ஐம்பூதக் கொள்கையின் அடிப்படையில் மனித உடலும் உலகமும்** முனைவர் அ.இருதயராஜ்	19
3.	**வள்ளுவர் ஒரு உழவியல் விஞ்ஞானி** முனைவர் ச.அனிதா சோபியா மார்கிரேட்	27
4.	**இன்குலாப் கவிதை வெளிப்படுத்தும் மனிதம்** லூ.இக்னேசியஸ் சேசுராஜா, முனைவர் க.கமலா	34
5.	**பாரதிதாசன் உணர்த்திய தாய்மொழி வழிக்கல்வி** வெ.கவிதா, முனைவர் அ.இருதயரர்ஜ்	42
6.	**தமிழர்களின் தாவர உணவுகள்** முனைவர் பொ,குபேந்திரன்	48
7.	**உவமையில் சிறந்தவன் கம்பன்** முனைவர் ச. பிரியா	55
8.	Redefining Boundaries: Emerging New Media Artists in India and the Rise of Digital Expression in 2025 Kalaiselvan. S	69
9.	The Art of Storyboarding: A Research Perspective Mr.A.Kalimuthu. MFA (PhD)	74
10.	**நாககுமாரான் காவியத்தில் பஞ்சமி கதைகள்** இர.சண்முகலட்சுமி, முனைவர். ககமலா	80
11.	**சீவக சிந்தாமணியில் சீவகனின் குடும்ப உறவுகள்** (இ.எழிலரசி, முனைவர்நா. தீபாராணி)	85
12.	**மாணிக்கம் நாவல் காட்டும் பெண்ணியம்**	93

	(ரா.ஸ்டெல்லா தீபா, முனைவர் நா. தீபாராணி)	
13.	**ஆண்டாள் பாசுரங்களில் உருக்காட்சிகள்** முனைவர் யு.துர்காதேவி	104
14.	**திரையிசைப் பாடல்களில் நிலையாமை** (பா கௌசல்யா தேவி, யு.துர்கா தேவி,)	110
15.	**திணைக்கோட்பாட்டில் உரிப்பொருள் வளர்ச்சி சமூதாயம்** து.தீபா, முனைவர் அ.இருதயராஜ்	119
16.	**சங்க இலக்கியத்தில் ஓரையாடுதல் (விளையாட்டு)** (முனைவர் பொ.குபேந்திரேன்)	131
17.	**கலிங்கத்துப்பரணியில் தொல்காப்பிய வண்ணம்** (பா.சங்கீதா, முனைவர் யு.துர்காதேவி)	138
18.	**வள்ளலார் காட்டும் அரசியல் அறங்கள்** (திருமதி. S. அனுராதா, முனைவர் பொ. குபேந்திரன்)	151
19.	**பாத அழுத்த சிகிச்சையின் வழியில் சிறுநீரகக் கற்களை அகற்றுதல்** (முனைவர் அ.இருதயராஜ்)	158
20.	**பாரதிதாசனும் திராவிட இயக்கக் கொள்கைகளும்** (முனைவர் ச.பிரியா)	166
21.	**திருப்பாவை பாசுரங்களில் வெளிப்படும் இறைச்சிந்தனை** (சு. பத்மா, முனைவர் யு.துர்கா தேவி)	174
22.	**செல்லாதபணம் நாவல் உணர்த்தும் பாத்திரங்களின் இயல்புகள்** (தா.பார்வதி, முனைவர் யு.துர்கா தேவி)	183

பாரதியின் பெண் விடுதலைக் கவிதைமொழி

முனைவர் பெ.மோகன், இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை - மொழிகள் புலம், வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600117.

கவிதையைப் படைக்காத, படிக்காத சமூகம் காட்டுமிராண்டிச் சமூகம் எனலாம். கவிதையை, கலை இலக்கியங்களைக் கொண்டாடும் சமூகமே பண்பாட்டில் வளர்ச்சியடைந்த சமூகமாகும். நாகரிகத்தில் எவ்வளவு மெச்சத்தக்க வளர்ச்சியைப் பெற்றிருந்தாலும், பண்பாட்டுடன் கூடிய வளர்ச்சியைப் பெற்ற சமூகமே முழுமையான வளர்ச்சியைப் பெற்றச் சமூகம் என்பர்.

கவிதை காலத்தால் முந்திய இலக்கிய வகையாகும். கவிதை மொழியாலான இலக்கியமாகும். மற்ற இலக்கியங்களைக் காட்டிலும் கவிதை மனத்திற்கு நெருக்கமான இலக்கியமாகும். அதற்கானக் காரணங்களில் ஒன்று, பண்டைக் காலந் தொட்டே மனித குலத்துடன் அது கொண்டுள்ள நெருக்கமான உறவாகும். மற்றது, கவிதையில் பயன்படுத்தப்படும் மொழியாகும். கவிதையின் மொழி, கூட்டுணர்வின் மொழியாகும். மனத்தை எழுச்சி கொள்ளச் செய்யும், எழுச்சியின் மொழியாகும். மன உணர்வைத் உருவாக்கும் எழில்மிகு மொழியாகும்.

கவிதை மொழி

ஒரு சாதாரண, சராசரி மனிதனின் பேச்சு மொழியின் உயரிய வடிவமே கவிதையின் மொழியாகும். அதனால் கவிதையின் மொழி உணர்வுகளைப் புலப்படுத்தும், உணர்வுகளைத் தூண்டிவிடும், உணர்வுகளின் உறவுகளை முன்னிறுத்தி எழுதப்படும் அகம் சார்ந்த மொழியாகும். கவிதைப் புரிந்துகொள்வதற்காக எழுதப்படுவதில்லை. கவிஞன் உணர்ந்தவற்றை நாமும் உணர்ந்து கொள்ளும் நோக்கத்துடனே கவிதை எழுதப்படுகிறது.

“கவிஞன் புலி வேட்டைக்குச் செல்லும்போது

வாசகன் தூண்டிலோடு வந்துவிடக் கூடாது”

(வைரமுத்து. இரா,கேள்விகளால் ஒரு வேள்வி, முன்னுரை) என்னும் வரிகளின் மூலம், கவிஞன் உணர்ந்தவற்றையே, வாசகனும் உணர வேண்டும் என்று இரா.வைரமுத்து வலியுறுத்துகின்றார்.

கவிதையில் வரும் சொற்களைக் காதுகளால் கேட்டு, நம் கண்களை மூடி, அரை மயக்க நிலையில் ஐம்புலன்களால் உணர வேண்டும். கவிதையின் மொழியைப் பகுத்தறிவுடன் பொருள் கொள்ளக் கூடாது. முதன் முதலாக யானையைக் கண்ட குழந்தையைப் போல், கைத் தட்டி பரவசம் அடைய வேண்டும். கவிதை வரிகளைப் படிக்கத் தொடங்கிய அடுத்தக் கணமே ஒரு குழந்தையாய் நம்மை மாற்றிக் கொண்டுத் துள்ளாட்டம் போட வேண்டும். ஏனெனில், கவிதையின் மொழி கொண்டாட்டத்தின் மொழியாகும்.

“செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்ப

தேன் வந்து பாயுது காதினிலே” (செந்தமிழ் நாடு)

என்னும் கவிதை வரிகளைக் காதுகளால் கேட்டு, செந்தமிழ் நாட்டின் பெருமையை மனத்தால் உள்வாங்கி, உணர்வுகளால் ஒருங்கிணைத்து, அதன் இன்பத்தை நாவினால் இனிமையாக உணர வேண்டும். கூடுவிட்டுக் கூடுபாய்வதைப் போல, புலன் விட்டுப் புலன் மாறும் வித்தையை அறிந்தால்தான் கவிதையை உணர்ந்து கொள்ள முடியும். இதனை அறிந்தவர்கள் கவிதைத் தரும் இன்பத்துடன், அதன் பயனையும் முழுமையாகப் பெற முடியும்.

“எங்கள்

தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு

சக்தி பிறக்குது மூச்சினிலே” (செந்தமிழ் நாடு)

என்னும் கவிதை வரிகள் கண்ணின் வழியாகவோ அல்லது காதின் வழியாகவோ நம்முள் சென்று, நம் ரத்த நாளங்களைத் தட்டி எழுப்பி, நம் உடல் சோர்வையும் மனச் சோர்வையும் அடித்து விரட்டிவிட்டு நம்மைச் சக்தி வாய்ந்த மனிதராய் எழுச்சி கொள்ளச் செய்வதை உணர முடியும்.

இவ்வாறாகக் கவிதையின் ஒவ்வொரு வரியையும் உள்வாங்கி, உய்த்துணர்ந்து, கூட்டுணர்வால் படைக்கப்பட்டுள்ள கவிதையின் உணர்வுலகத்தில் சஞ்சரிக்கும் போதுதான், கவிதைக் கொண்டாட்டமாக மாறுகிறது. பகுத்தறிவை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அக உணர்வுகளால் எழுச்சி கொள்ளும் போதுதான், கவிதைச் சுக அனுபவத்தைத் தருகிறது.

கவிதையும் அக உணர்வும்

படிக்கத் தெரிந்தால் போதும். புத்தகங்களில் உள்ளவற்றைப் படித்துப் புரிந்துகொள்ள முடியும். கவிதையைக் கண நேரத்தில் புரிந்து கொள்ள இயலும். என்றெல்லாம் படித்தவர்கள் மத்தியில் பரவலாகக் கருத்து உள்ளது. ஆனால், இது முற்றிலும் உண்மையல்ல. புற உலக உண்மைகளைப் புரிந்துகொள்வதற்கு மொழி ஓரளவு உதவும். ஏனெனில், புரிந்துகொள்ளுதல் என்பது புற உலகைப் பற்றியது. ஆனால், அக உணர்வுகளை மொழியின் மூலம் எளிமையாகப் புலப்படுத்த இயலாது. மேலும், அக உணர்வுகள் புரிந்துகொள்வதற்கானவை அல்ல, உணர்ந்து கொள்வதற்கானவை. ஆகையால் சராசரி மனிதர்களுக்கு அது இயலாமல் போகிறது.

“அவள்
என்னைப்
பார்க்கும் போது மட்டும்
காதல் நடை நடக்கிறாள்”
(கவிஞர் சி. சுந்தரமூர்த்தி)
என்னும் புதுக்கவதையாக இருந்தாலும்,
“மயிற்கண் அன்ன மாமுடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉம் காணலானே”

(குறுந்தொகை. 184)

என்னும் சங்க இலக்கியச் செய்யுளாக இருந்தாலும், புறநிலை உண்மைகளைக் கொண்டு புரிந்தகொள்ள இயலாது. “காதல் நடை”

என்ற சொல்லுக்கு எந்த அகராதியிலும் பொருள் இருக்காது. “கண்ணால் வலை வீச்சு” என்னும் சொல்லுக்கும் இதே நிலைதான் என்பதை விளக்க வேண்டியதில்லை. இவை அக உணர்வுகளைப் புலப்படுத்தும் கவிதைமொழி எனலாம்.

“பிறருக்கு இன்னதென்று விளக்க இயலாதவற்றையே அகம் என்பர்” என்று உரையாசிரியர்களும் விளக்கம் அளிக்கத் திணருவதைக் காண்கிறோம். கவிஞர்கள் மற்றும் கலைஞர்கள் புலப்படுத்த விழைவது அக நிலைப்பட்ட உணர்வுலகமாகும். அவர்கள் புலன்களால் அறிந்த புற உலகைத் தங்களின் உணர்ச்சியினாலும், உணர்வினாலும் ஒருங்கிணைத்து உருவாக்கி வைத்திருக்கும் உணர்வுலகமாகும். “மொழிபெயர்க்க இயலாத கவிதைகளே சிறந்த கவிதைகள்” என மொழிபெயர்ப்பாளர்கள் குறிப்பிடுவற்கு இதுவே காரணமாகும். அகம் சார்ந்த உணர்வுகளை மொழியின் வாயிலாக புலப்படுத்துதே மிகுந்த சிரமத்திற்குரியது என்பதனால், மொழிபெயர்க்க இயலா நிலை உள்ளது.

கவிஞர்களும் மொழியும்

அகம் சார்ந்த உணர்வுலகமானது, ஒரு மொழியைப் பேசும் சமூகத்தினால் அவர்களுக்கு மட்டுமே புலப்படும்படிக் கட்டமைந்துள்ள “உணர்வகளின் ஒருங்கிணைப்பு” ஆகும். இதனைக் கவிஞர்களும் கலைஞர்களும் புலப்படுத்த விழைகின்றனர். அதனைப் புலப்படுத்துவதற்காக மொழியின் இலக்கணங்களைக் கவிஞர்கள் மீறுகின்றனர். மொழியிலுள்ளச் சொற்களைத் தங்களின் தேவைக்கு ஏற்ப பயன்படுத்துகின்றனர். குயவர்கள் தாங்கள் செய்ய விரும்பும் பொம்மைகளுக்கு ஏற்றவாறு களிமண்ணைப் பிசைந்துப் பக்குவப்படுத்துவதுவர். அதைப்போல, கவிஞர்களும் உணர்த்த விழையும் கருத்திற்கேற்பப் புதுச் சொற்களைப் படைத்தளிக்கின்றனர். ஏற்கனவே சமூகத்தில் புழகத்தில் உள்ள பழைய சொற்களுக்கு புதிய பரிமாணம் அளிக்கின்றனர். ஏட்டில் இடம்பெறாத, சாதாரண மக்களின்

வழக்குச் சொற்களைப் பயன்படுத்தி அறிவுலகத்தை அதிர்ச்சியில் ஆழ்த்துகின்றனர். பழையச் சொற்களை மீட்டுறுவாக்கம் செய்கின்றனர்.
உலகத்தில் தலைசிறந்த கவிஞர்களும் படைப்பாளிகளும் எண்ணற்றப் புதிய சொற்களை உருவாக்கி, தங்கள் மொழிச் சொற்தொகுதியை மேம்படுத்துகின்றனர். சொற்களஞ்சியத்தை வளம்பெறச் செய்கின்றனர். இதனைக் கெட்டிதட்டிப் போன அறிவுலகம் தொடக்கத்தில் ஏற்பதில்லை, பின்னர் வேறு வழியின்றி பணிந்துவிடுகிறது. "கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" என்று தொல்காப்பியர் தீர்க்க தரிசனத்துடன் குறிப்பிட்டிருந்தாலும், அறிஞர் பெருமக்களுக்குப் புரிவதில்லை. ஆனால், கவிஞர்களும் கலைஞர்களும் தங்களின் உணர்வெழுச்சியால் அதனைச் சிக்கெனப் பிடித்து விடுகின்றனர்.

பாரதியின் கவிதை மொழி

"அக்கினிக் குஞ்சு" என்னும் சொல் பாரதி படைத்த புதுமைச் சொல்லாகும். இந்தச் சொல்லுக்குரிய பொருளை அகராதியில் தேடினால் கிடைக்காது. அப்படிக் கிடைத்தாலும், அது பாரதி நினைத்தப் பொருளாக இருக்காது. இங்குள்ள "அக்கினி" என்பது நெருப்பைக் குறிக்கவில்லை. "குஞ்சு" என்பது பறவையின் குஞ்சையும் குறிப்பிடவில்லை. புரட்சிகரமான எண்ணத்தின், செயல்பாட்டின் குறியீடாகக் கவித்துவத்துடன் பாரதியால் படைத்தளிக்கப்பட்டுள்ளது.
"நடிப்புச் சுதேசிகள்" என்னும் சொல்லும் மிகவும் நுட்பமானச் சொல்லாகும். இது எள்ளிநகையாடும் மெய்ப்பாட்டுடன் பிரயோகம் செய்யப்படுகிறது. "கண்ணம்மா என் காதலி" என்னும் தொடர், பக்தி இலக்கியங்களில் காணக்கிடைக்கும், "நாயகன் நாயகி பாவம்" என்பதன் தொடர்ச்சி எனலாம்.

தமிழிலக்கிய உலகில் புதுமையின் நாயகனாகத் திகழ்பவர் பாரதி. சமூக உள்ளடக்கங்களைக் கவிதையின் பாடுபொருள்களாக்கியது, அதனை எளிய மக்களுக்கும் புரியக்கூடியத் தமிழில் எழுதியது போன்றவை பாரதி செய்த புதுமைகளில் முக்கியமானவை. எளிய மக்களிடமிருந்த இசை

வடிவங்கள், மெட்டுகள், கலைக் கூறுகள், குடுகுடுப்பைக்காரன் பாட்டு போன்றவற்றை ஏட்டிலக்கியத்திற்கு ஏற்ற வகையில் மேம்படுத்தித் தந்தவர் பாரதி. இது போன்ற முயற்சிகள் ஏற்கனவே தமிழ் இலக்கிய மரபில் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும், வெகுமக்களுக்குப் புரியும் மொழியில் படைத்தது பாரதி செய்த புதுமையாகும்.

புதிய உள்ளடக்கங்கள் மட்டுமல்ல, பழைய இலக்கியத்தை மீள் படைப்புச் செய்யும் போதும், பாரதி புதுமைக் கவிஞராகத் திகழ்கிறார். மகாபாரதக் காப்பியக் கதையை அடிப்படையாகக் கொண்டு “பாஞ்சாலி சபதம்” எழுதப்பட்டிருந்தாலும், அதிலிருந்து வேறுபட்ட புதிதான ஒரு புதுமைக் காப்பியமாகத்தான் திகழ்கிறது. பாஞ்சாலி சபதம் காப்பியத்தின் முன்னுறையில் பாரதி பின்வருமாறு எழுதுகிறார், "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்". இதுதான் பாரதி செய்த புதுமையின் அடிநாதமாகும். இவற்றுடன், சமகாலச் சமூகத் தேவைக்கு ஏற்ப உள்ளடக்கத்தில் சில மேம்பாடுகளையும், சமகாலச் சமூக உணர்களைத் தூண்டும் சொல்லாட்சிகளையும் சேர்த்ததனால், விடுதலைக்கானக் காப்பியமாகப் புது அவதாரம் கொண்டுள்ளது.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தில், தருமன் நாட்டையும் தம்பிகளையும் பாஞ்சாலியையும் சூதில் தோற்றுவிடுகிறார். அதைத் தொடர்ந்து, துரியோதனின் அரண்மனைக்கு வருமாறு, சூதில் தோற்ற பாஞ்சாலியைச் துச்சாதனன் அழைக்கின்றான். பாஞ்சாலி வர மறுக்கின்றாள். அவளின் கூந்தலினைப் பிடித்துத் தரதரவென துச்சாதனன் இழுத்துச் செல்கின்றான். இக் காட்சியை நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் வேடிக்கைப் பார்க்கின்றனர். ஒருவரும் துச்சாதனனைத் தடுக்கவில்லை. இக் காட்சியைப் பின்வருமாறு பாரதி கவிதையாக்குகிறார்,

“நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.

பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ”

(பாஞ்சாலி சபதம்)

இங்கு குறிப்பிடப்படும் “நெட்டை மரங்கள்”, பெட்டைப் புலம்பல்” ஆகியவை மகாபாரதக் காலத்து மக்களின் நிலையல்ல. ஆங்கிலேயரின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு, அடிமைகளாய், விடுதலை உணர்வின்றிக் கிடக்கும் இந்திய மக்களின் நிலையாகும். இவ்வாறுதான் விடுதலைப் போராட்டக் காலத்தில் உணரப்பட்டது. மகாபாரதக் காப்பிய மரபின் வழிநின்று, நடப்புச் சமூக நிகழ்வின் மேல் ஒளியைப் பாய்ச்சுவது பாரதியின் கவிதை ஆளுமையாகும். அதனால், இது மகாபாரதக் காட்சி என்னும் நிலை கடந்து, விடுதலை வேட்கையைத் தூண்டும் காப்பியமாக உணர்ந்துகொள்ளப்பட்டது.

“நெட்டை மரங்கள்”, பெட்டைப் புலம்பல்” என்னும் சொற்கள் உழைக்கும் மக்களின் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் சாதாரணச் சொற்களாகும். இவற்றை, வெகுமக்கள் விடுதலை உணர்வெழுச்சியைப் பெறுவதற்கான ஆயுதமாக்குவது பாரதியின் கவிதை நுட்பமாகும். வெகுமக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் காப்பியம் எழுதப்பட்டதால், வெகுமக்களின் சொல்லாட்சியே கவிதையில் கோலாச்சுகிறது. ஆனால், இந்த வரிகள் போற்றப்பட்டுள்ள அளவிற்குத் தூற்றப்பட்டுள்ளதையும் காண்கிறோம். ஆராய்ச்சி என்ற பெயரில் அவதூற்றுச் சகதியால் மாசுபடுத்தப்பட்ட கவிதை வரிகளில் இவையும் குறிப்பிடத்தக்கவை. பெண் விடுதலையைப் பாடிய கவிஞனைப் பிற்போக்குக் கவிஞன் என்றும் பெண் இனத்தை இழிவுபடுத்திவிட்டார் என்றும் “பெட்டைப் புலம்பல்” என்னும் வரிக்குத் தவறான விளக்கங்கள் அளிப்பதன் மூலம் பாரதிக்கு எதிரான ஆயுதமாகவும் இச்சொல் மாற்றப்பட்டுள்ளது.

கவிதையை இயந்திர கதியில் புரிந்துகொள்வதனாலும், பாரதியின் மேலுள்ள மலிவானக் காழ்ப்புணர்ச்சி அரசியல் காரணமாகவும்

இதுபோன்ற விளக்கங்கள் உருவாக்கப்படுகின்றன. புதுமையின் மேல் நாட்டம் கொண்ட இளைஞர்களும் இளம் அறிவாளிகளும் இவை போன்ற விட்டில் பூச்சி விமர்சனங்களுக்கு பலியாகின்றனர்.

பெண் விடுதலை

பாரதியின் சம காலத்திலும், அதற்கு முன்னும் பின்னும் பெண் விடுதலைக் குறித்து பலர் பேசி வந்தாலும், பாரதியின் அணுகுமுறை வேறுபட்டது; ஆக்கப்பூர்வமானது. அனைத்து வகையான அடிமைத் தளைகளில் இருந்தும் பெண்கள் விடுதலைப் பெற வேண்டும் என்னும் வேட்கையே பாரதியின் கவிதைகளில் காணக் கிடைக்கின்றன.

மனித இனம் விடுதலைப் பெறுவதற்கான முதல் ஆயுதம் கல்வி கற்றலாகும். ஆகையால்,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!
வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்,
வேண்டி வந்தோம் என்று கும்மியடி!"

(பெண்கள் விடுதலைக் கும்மி)

என்று கல்வி கற்றலின் தேவையை வலியுறுத்துகின்றார். கல்வியைக் கற்பதன் மூலம் மட்டும்தான் பெண்கள் உண்மையானச் சமூக உயர்வை அடைய முடியும் என்று பாரதி வலியுறுத்திக் கூறுகின்றார். அதாவது, அறிவினில் ஆணுக்கு நிகராகத் திகழ்வது, அனைத்துச் சமூகத் துறைகளிலும் பணியாற்றுவது, பொருளாதாரத் தேவைகளுக்கு ஆண்களைச் சாராதிருப்பது, பெண்கள் தங்களின் சுயசார்பு ஆளுமையை வளர்த்துக் கொள்வது என்னும் சமூக உயர்வுகளை அடைய முடியும் என்கிறார். இந்தக் கருத்துகளை வலியுறுத்த, பாரதி கையாண்ட கவிதைமொழியும் அதன் சந்தமும் மிகவும் சிறப்புக்குரியவை. இதனை,

"கும்மியடி! தமிழ் நாடு முழுவதும்

குலுங்கிடக் கைக்கொட்டி கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோம் என்று கும்மியடி!"

(பெண்கள் விடுதலைக் கும்மி)

என்னும் கவிதை வரிகளில் காணலாம். பெண் விடுதலைக் கருத்துகளை வலியுறுத்த, பெண்களின் ஆட்டப் பாடல் வடிவமான "கும்மிப் பாடல்" வடிவத்தைப் பாரதி தேர்வு செய்துள்ளார்.

கும்மிப் பாடல் வடிவம், பெண்களின் மன உலகத்தில் அல்லது உணர்வு உலகத்தில் மிகவும் நெருக்கமானப் பிணைப்பைக் கொண்டுள்ளது. காலம் காலமாகத் திருவிழாக் காலங்களில், கோயில்களின் அருகில் கைகளால் கும்மியடித்து, எழுச்சியுடன் பாடும் மரபைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எழுச்சிமிகு பெண் விடுதலைக் கவிதை என்னும் புதிய உள்ளடக்கத்திற்கு மரபான வடிவத்தைப் பயன்படுத்துகிறார். கோயில்களில் கும்மியடித்தது போதும், உங்கள் விடுதலைக்காகக் கும்மியடியுங்கள் என்கிறார் பாரதி. கும்மியடிக்கும் சத்தத்தில் "தமிழகமே குலங்க வேண்டும்" என்று கூறும் போது, கவிதையின் உணர்ச்சி உச்ச நிலைக்குச் செல்கிறது. பெண்களைப் பிடித்திருக்கும் பிசாசுகள் எல்லாம் தலைதெரிக்க ஓடுகிறது.

கற்பினைக் காரணம் காட்டி, காலம் காலமாகப் பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டி வைத்திருந்தனர். இனி அவ்வாறு பூட்டிவைக்க முடியாது என்று பாரதி கூறுகிறார். அவ்வாறு செய்பவர் விந்தை மனிதர் என்றும் உரைக்கின்றார். மேலும்,

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

(பெண்கள் விடுதலைக் கும்மி)

என்று கூறி, ஒட்டுமொத்த பிற்போக்குவாதிகளை மட்டுமல்ல, ஆண் இனத்தையே கூட கோபத்தில் ஆழ்த்துகிறார். கற்பு என்றால் என்ன? அது இருக்கிறாதா? இல்லையா? என்கின்ற விவாதத்திற்குள் பாரதி

செல்லவில்லை. அதற்குப் பதிலாக, அது உண்டென்றால், ஆண்களும் அதைப் பின்பற்ற வேண்டும் என்கிறார். இது பாரதியின் கருத்துத் தெளிவையும், கவிதைச் சொல்லாட்சியையும் ஒரு சேர மெய்ப்பித்துள்ளது.

பெண்கள் தரையைப் பார்த்தபடி நடக்க வேண்டும், அதுதான் கற்புடையப் பெண்டிற்கழகு, போன்றவற்றையும் பாரதி ஏற்கவில்லை.

“நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெரிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும்” (புதுமைப் பெண்)

என்னும் பாரதியின் மிடுக்கானக் கவிதை வரிகளைப் போல, பெண்களும் திகழ வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

மரபு என்னும் போர்வையில், அடிப்படைவாதக் கருத்துகள் பெண்களை அடிமைப்படுத்தி வருகின்றன. சமூக நடைமுறை என்ற பெயரில், காலம் காலமாக இது நிகழ்ந்துவருகிறது. கவிதை என்னும் அணுகுண்டு கொண்டு அவற்றைத் தகர்த்தெரிய முயல்கிறார் பாரதி. இதனை,

“நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;
ஞான நல்லறம் வீர சுதந்திரம்;
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்”
(புதுமைப் பெண்)

என்னும் கவிதை வரிகளில் காணலாம். இது புதுமைப் பெண்களின் குரலாகக் கவிதையில் ஒலித்தாலும், சிவசக்தியின் குரல் என்றே பாரதி உரைக்கின்றார். பெண்களைத் தெய்வம் என்றும் போற்றுகின்றார். இதனை,

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்
பூரண நல்லறத்தோடு இங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்”

(புதுமைப் பெண்)

என்னும் கவிதை வரிகள் சான்று பகிர்கின்றன.

எமக்குத் தொழில் கவிதை என்றவர் பாரதி. கவிதைக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளியின்றித் திகழ்ந்தவர். அனைத்து வகையான அடிமைத்தனத்தில் இருந்தும் சமூகம் விடுதலை பெற வேண்டும் என்னும் வேட்கையைக் கவிதையில் விதைத்தவர். இவ்வகையில் பெண் விடுதலையைப் போற்றியவர்

“மாதர்க்கு உண்டு சுதந்திரம் என்று நின்
வண் மலர்த் திருவாயின் மொழிந்த சொல்
நாதந் தானது நாரதர் வீணையோ?
நம்பிரான் கண்ணன் வேய்ங்குழல் இன்பமோ?”

(புதுமைப் பெண்)

பெண்கள் விடுதலைப் பெற்றுவிட்டனர் என்ற செய்தியைக் கேட்ட பொழுதில், தான் அடையும் இன்பத்தை மேற்கண்டவாறு பாடியுள்ளார் பாரதி. நாரதர் மீட்டும் வீணை இசையின் நாதமாகவும், கண்ணன் இசைக்கும் புல்லாங்குழலின் இன்னிசையாகவும் தன் காதுகளில் அச்செய்தி ஒலித்தது என்கிறார். மேற்கொண்ட கவிதை வரிகளை உணர்ந்துகொள்ள இயலுமாயின், பாரதியின் பெண் விடுதலைக்கான வேட்கையையும் புரிந்துகொள்ள இயலும்.

பாரதியின் பெண் விடுதலை என்பது, அனைத்து வகையானச் சமூகக் கட்டுகளில் இருந்தும் பெண்கள் விடுதலைப் பெற வேண்டும் என்னும் வேட்கையை விதைப்பது, நவீனத் தமிழ்ச் சமூக உருவாக்கத்திற்கு ஏற்ற வகையில் பெண் ஆளுமையைப் படைப்பது, அதற்கானச் செயல்திட்ட முன்வரைவுகளைக் கவிதையின் வழிக் காட்சிகளாக்குவது என்னும் நிலையில் அமைந்திருக்கின்றன.

முடிவுரை

பாரதியின் கவிதைமொழியைப் புரிந்துகொள்வதன் மூலம், கவிதைக்குள் இருக்கும் உணர்வைப் பெறலாம், அதன் அரசியலை அறியலாம்.

கவிதைமொழியை அறியாதவர்கள் தங்களின் அரசியல் சாயத்தை மட்டுமே பாரதியின் மேல் பூசு இயலும். பாரதியின் கவிதையை என்றுமே உணர முடியாது

சான்றாதார நூல்கள்

1. சுந்தரமூர்த்தி.சி, கவிதைகள் (கையெழுத்துப் பிரதி)
2. குறுந்தொகை
3. பாரதியார், பாரதியார் கவிதைகள்
4. தொல்காப்பியம்
5. வைரமுத்து. இரா.,கேள்விகளால் ஒரு வேள்வி.

ஐம்பூதக் கொள்கையின் அடிப்படையில் மனித உடலும் உலகமும்

முனைவர் அ.இருதயராஜ், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

ஆய்வுச்சுருக்கம்

நலமுடன் வாழ்தல் என்பது இன்றைய காலக்கட்த்தில் முயல்கொம்பாக உள்ளது. ஆனால் பண்டைய தமிழ்ர்கள்நலமுடனும் பலத்துடனும் வாழ்ந்தார்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. அதற்கான காரணம் அவர்கள் இயற்கையுடன் இயந்த வாழ்வு வாழ்ந்தார்கள். இவ்வாழ்க்கைமுறைகளில் ஒன்று ஐம்பூதக் கோட்பாட்டின் நெறியில் பண்டைய தமிழர்கள் எவ்வாறு வாழ்ந்து வந்தார்கள் என்பதை தமிழ் இலக்கியங்களின் வழி பகுப்புமுறை ஆய்வு தொகுப்பு முறை ஆய்வு விளக்கமுறை ஆகிய ஆய்வு முறைகளைப் பின்பற்றி விளக்கப்பெறுகின்றன.

திறவு சொல் நிலம், நீர், ஆகாயம், தீ, காற்று, உடல், உலகம்,

முன்னுரை

இலக்கியங்கள் மக்களின் நாகரிக மேம்பாட்டையும், வாழ்வியல் சார்ந்த கொள்கைகளையும் வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. சங்க இலக்கியப் பாடல்கள் புலப்படுத்தும் ஐவகை நில அமைப்புக் கூறுகள், அந்நிலம் சார்ந்த வாழ்வியல் முறைகள், நல்ல ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் பராமரிப்பதற்கான ஒரு வழிமுறையைப் பண்டையத் தமிழரர்இயற்கையுடன் இயந்து வாழ்ந்தால் கண்டறிந்தனர். அவர்களின் நலமான வாழ்விற்கு அடிப்படையான காரணம் ஐம்பூதக் கொள்கை ஆகம். இக்கொள்கையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஐம்பெரும் பூதங்கள்

நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகிய ஐம்பெரும் பூதங்களின்

ஆகாயம் (விண்வெளி)

'ஆகாயம்' (விண்வெளி) எனும் பூதம் 'ஒலி' எனும் ஒரே குணத்துடன் தோன்றியது. ஆகாயம் மற்ற நான்கு பூதங்களான காற்று, தீ, நீர் மற்றும் மண் ஆகியவைகள் தோன்றக் காரணமாக உள்ளது. ஆகாயம் குளிர், வெப்பம், உலர்தல், மணம் போன்ற குணங்கள் அற்றது. ஆகாயம் என்பது வெற்றிடம் ஆகும்.

காற்று (வாயு)

'காற்று' எனும் பூதம், 'தொடு உணர்வு' எனும் குணத்துடனும், ஆகாயத்தின் சொந்த குணமாக ஒலி எனும் குணத்துடனும் தோன்றியது. எனவே காற்று தன் சொந்த குணமான தொடு உணர்வுடன், ஆகாயத்தின் ஒலி எனும் குணத்துடன் இரண்டு குணங்கள் கொண்டுள்ளது. காற்று எனும் பூதத்தின் இயல்பு ஒரு பொருளை உலர்த்தும் சக்தி படைத்தது. காற்றில் பிராணன் எனும் பிராணவாயு ஒரு உயிரை காப்பதால்,

நெருப்பு (அக்னி)

'தீ' எனும் பூதம் 'உருவம்' (ரூபம்) எனும் குணத்துடன் தோன்றியது. அத்துடன் ஆகாயம் மற்றும் காற்றின் குணங்களான ஒலி மற்றும் தொடு உணர்வு குணங்களுடன் தன் சொந்த குணமான உருவம் எனும் குணத்துடன் 'தீ' எனும் பூதம் மூன்று குணங்கள் கொண்டுள்ளது.

நீர்

'நீர்' எனும் பூதம் 'சுவை' எனும் குணத்துடன் உண்டானது. அத்துடன் ஆகாயம், காற்று, தீ எனும் பூதங்களின் குணங்களான ஒலி, தொடு உணர்வு மற்றும் உருவம் (ரூபம்) எனும் மூன்று குணங்களுடன் தன் சொந்த குணமான சுவை எனும் குணத்துடன், நான்கு குணங்களுடன் நீர் எனும் பூதம் விளங்குகிறது.

நிலம் (பிருதிவி)

'நிலம்' எனும் பூதம் 'வாசனை' எனும் குணத்துடன் தோன்றியது. அத்துடன் ஆகாயம், காற்று, தீ, நீர் எனும் நான்கு பூதங்களின் குணங்களான ஒலி, தொடு உணர்வு, உருவம், சுவை எனும் நான்கு

குணங்களுடன், தன் சொந்த குணமான வாசனை எனும் குணத்துடன் ஐந்து குணங்களைக் கொண்டது மண் எனும் பூதம்.

உலகப்பொருட்கள்

பேரண்டம் எவ்வாறு தோன்றியது என்ற கேள்விக்கு இன்றைய அறிவியல் "பெருவெடிப்பு கொள்கை" (Big Bang Theory) மூலம் விளக்கம் அளிக்கிறது. இதனை முன்வைத்தவர் Fred Hoyle. தமிழ் இலக்கியங்களிலும் உலகத் தோற்றம் குறித்த சிந்தனைகள் காணப்படுகின்றன.

இந்த உலகம் ஐம்பெரும் பூதங்கள் கலந்த மயக்கம் என்பது உலகினையும் உலகிலுள்ள பொருள்களையும் குறிக்கும். உலகமாவது, முத்தும் மணியும் கலந்தாற் போல நிலம்' தீ, நீர்' வளி, ஆகாயம் என விரவி நிற்கும். உலகினுள் பொருள் பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றானாற் போல வேற்றுமைப் படாது நிற்கும். அவ்விரண்டினையும் உலகம் உடையதாகலின் கலந்த மயக்கம் என்பதை,

"நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

சங்க காலம் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்ட காலம். மக்கள் வாழ்கின்ற உலகம் நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பூதங்களால் படைக்கப்பட்டது. முத்தும் மணியும் கலந்தாற்போல, உலகமும் பொன் வெள்ளி, செம்பு ஆகியவை உருக்கினாற் போல உலகிலுள்ள பொருள்களும் அமையும் என்று புறத்தே உள்ள பூதங்களையும் அகத்தே உள்ள பூதங்களையும் வேறுபடுத்திக் காட்டினார் என்க. அணுச் செறிந்த நிலனும், அந்நிலத்தின் ஓங்கிய ஆகாயமும், அவ்வாகாயத்தைத் தடவி வரும் காற்றும் அக்காற்றின் கண் தலைப்பட்ட தீயும், அத்தீயோடு மாறுபட்ட நீருமென ஐவகைப் பெரிய பூதத்தினது தன்மை போல என்று ஐம்பெரும் பூதத்தைப்

பற்றிப் புறநானூறு குறிப்பிடக் காணலாம். இதனைஇவ்வைம் பூதங்களின் தன்மையும் மனித உடலிலும் உள்ளன. இதனை புறநானூறு,

“மண்டிணிந்த நிலனும் நிலனேந்திய
விசும்பும் விசும்புதைவரு வளியும் வளித்தலைஇய
தீயும் தீமுரணிய நீரு மென்றாங்கு ஐம்பெரும்
பூதத் தியற்கை போல"

என்ற பாடல் விளக்குகின்றன.

மனித உடலும் ஐம்பூதங்களும்

உடலில் காற்றின் தன்மை கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும். உடலில் சூடு கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும். உடலில் நீரின் அளவு கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் என்று கூறப்படுவதிலிருந்து ஐம்பூதங்களில் காற்று, தீ, நீர் ஆகியவற்றின் அளவு நீராக இருக்கவேண்டும். அவற்றின் அள்வு கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும். இதனை,

“மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று”

என்ற வள்ளுவர் குறள் தெளிவுப்படுத்துகின்றன.

இந்த ஐம்பெரும் பூதங்கள் தொடக்கமாக கொண்டு, சுவை முதலான புலன்களும், அவற்றை நுகரும் பொறிகளும் உண்டாகின்றன என்று பரிபாடல் உரைக்கிறது. இதனை,

"சுவைமை யிசைமை தோற்ற நாற்ற மூ
றவையு நீயே யடு போ ரண்ணால்
அவையவை கொள்ளுங் கருவியு நீயே
முந்தியாங் கூறிய வைந்த னுள்ளும்
ஒன்றனிற் போற்றிய விசும்பும் நீயே
இரண்டி னுணரும் வளியு நீயே
மூன்றி னுணருந் தீயு நீயே
நான்கி னுணருந் நீரு நீயே

ஐந்துடன் முற்றிய நிலனு நீயே"

என்ற பாடலில் ஐம்பூதங்களும் அவற்றின் குணங்களுமான ஓசை, ஊறு, ஒளி' சுவை, நாற்றம் என்னும் குணங்களால் பூதங்கள் உணரப்படுகின்றன.

உடலை வைத்துத்தான் இந்த உலகத்தில் நமக்கு இருப்பிடம். இதை எல்லோரும் உணர வேண்டும். ஒருவரின் லட்சியங்கள் எவ்வளவு உயர்ந்ததாக வேண்டுமானலும் இருக்கலாம். ஆனால் உடல் நலம் ஒத்துழைக்கவில்லை என்றால், பாதிக்கிணறு தாண்டிய கதைதான். எனவே, உடலைப் பாதுகாத்து, நோயில்லா நெறியை நமக்கு நாமே உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

உடல் என்பது, எலும்புகளை கை கால்களைப் போட்டு நீட்டி வைத்து, அவற்றின் 'இருப்பிடம்' மாறிவிடாமல் இருக்க நுண்ணிய துவரங்களால் இணைத்து, நரம்புகளால் இழுத்துக் கட்டி, தோலால் மூடி, அவற்றுக்கு இடையே தசைகளைச் சேர்த்து, ரத்தத்தை ஊற்றி, உள்ளே வாயு எனப்படும் பிராணனை உள்ளடக்கி, உடல் என்ற ஓர் உருவம் உருவாக்கப்பட்டிருப்பதாக சித்தர் பாடல் நமக்கு விவரிக்கிறது. இதனை,

'கூறுவேன் தேகமது என்னவென்றால்
குருபரனே எலும்புதனைக் காலாய் நாட்டி
மாறுபடா எலும்புக்குத் துவாரமிட்டு
வன்மையுடன் நரம்பினால் வலித்துக் கட்டி
தேறுதலாய் இரத்தமதை உள்ளே ஊற்றி
தேற்றமுடன் அதன் மேலே தோலை மூடி
ஆறுதலாய் வாய்வுதனை உள்ளடக்கி
அப்பனே தேகமென்ற கூறுண்டாச்சே'

என்ற பாடலில் மனித உடலில் ரகசியத்தைச் சொல்லும் இந்த எட்டு வரி பாடலில் மனிதனுடைய உடலைப் பற்றிய சித்தர்களின் நுண்ணறிவு துல்லியமாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், உடல் கட்டமைப்பை,

எலும்புதனை – எலும்பு மண்டலம்

நரம்பினால் – நரம்பு மண்டலம்

இரத்தமதை -ரத்த ஓட்ட மண்டலம்

தோலை மூடி -தசை மண்டலம்

வாய்வுதலை – மூச்சு மண்டலம்

அதாவது, இந்த ஐந்து மண்டலங்களால்தான் தேகம் என்ற உடல், கடமையின் பொருட்டு இந்த உலகில் நடமாடுவதாக சித்தர்கள் கூறுகின்றனர். இந்த மண்டலங்கள் ஒவ்வொன்றும் தமது பணியைச் சரிவர செய்துவந்தால்தான், நாம் உயிரோடு இருக்கிறோம் என்பதை நாமே உணர முடியும்.

ஐந்து மூலதத்துக்கள் – ஐந்து முக்கிய உறுப்புகள்

பஞ்சபூதக் கொள்கைப்படி:

நுரையீரல் – காற்று

கல்லீரல் – விண்

மண்ணீரல்– நிலம்

இருதயம் – நெருப்பு

சிறுநீரகம் – நீர்

இந்த உறுப்புகள் உடலின் முக்கிய உயிர் ஆற்றலை உள்ளிழுக்கும் மையங்களாகக் கருதப்படுகின்றன. மேலும், பஞ்சபூதக் கருத்து மன உணர்வுகளையும் உடல் உறுப்புகளையும் இணைக்கிறது:

கோபம், டென்ஷன் – கல்லீரல்

கவலை – மண்ணீரல்

துக்கம் – நுரையீரல்

பயம் – சிறுநீரகம்

பொறாமை, பெருமை – இருதயம்

நவீன மருத்துவமும் மனஅழுத்தம் (stress), நீண்டகால கவலை, துக்கம் போன்றவை உடல் நலத்தில் தாக்கம் ஏற்படுத்தும் என்பதை ஏற்கிறது.

உடலும் உலகமும்

அண்டத்துக்கு வேறு, பிண்டத்துக்கு வேறு என்னும் பாகுபாடு இயற்கை நியதியில் இல்லை என்பதை சைவத் திருக்கோயில்களில் காணப்படுவதைப் போல வேறிடங்களில் காணப்பெறவில்லை என்பதால், பஞ்சபூதக் கொள்கை தமிழகத்துக்கு மட்டுமே உரியதெனலாம். இதனை,

"அண்டத்தி லுள்ளதே பிண்டம்
பிண்டத்தி லுள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்துதான் பார்க்கும் போதே"

என்று சட்டமுனிஞானம் உரைக்கக் காணலாம்.

பூமியின் மேற்பரப்பில் சுமார் 71% பகுதி நீரால் சூழப்பட்டுள்ளது. அதில் பெரும்பாலானவை பனிக்கட்டிகளாக (Glaciers) உள்ளன. மனித உடலில் பொதுவாக 50% முதல் 75% வரை தண்ணீர் உள்ளது, இது வயது மற்றும் பாலினத்தைப் பொறுத்து மாறுபடும். சராசரியாக, வயது வந்த மனித உடலில் 60% தண்ணீர் காணப்படுகிறது, இது உடல் வெப்பநிலை, மூட்டு உயவு மற்றும் நச்சுக்களை நீக்குதல் போன்ற அத்தியாவசிய செயல்பாடுகளுக்கு அவசியம்.உலகத்திலில் நான்கில் மூன்று பகுதி நீரால் அமைந்துள்ளது மனித உடலும் அவ்வாவே அமைந்துள்ளது

முடிவுரை

இயற்கையோடு இயைந்து வாழ்வதே மனிதனின் கடமை என வலியுறுத்துகின்றனர். ஐம்பெரும் பூதங்கள் – நிலம், நீர், தீ, வளி, விசும்பு – ஆகியவற்றின் தன்மைகள் பிண்டம் (உடல்) மற்றும் பேரண்டம் (பிரபஞ்சம்) ஆகியவற்றின் இயக்கு சக்திகளாக இருப்பதை அவர்கள் அறிந்திருந்தனர். இவ்வுலகில் மிகினும் குறையினும் நோயும் பேரிடரும் ஏற்படும் என்பதை உணர்ந்தனர்.

துணைநின்றவை

1. 1தொல்காப்பியம் பொருளதிகாரம், சுந்தரமூர்த்தி. கு (ப.ஆ), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர். மு.ப. 1985.

2. சட்டமுனிஞானம் இ, சித்தர் பாடல், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

3. பரிபாடல் மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை

4. புறநானூறு மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

5. WWW. செய்திதளம்

6. WWW. மனித உடலில் நீரின் அளவு சதவீதம்

வள்ளுவர் ஒரு உழவியல் விஞ்ஞானி

முனைவர் ச.அனிதா சோபியா மார்கிரேட் உதவிப்பேராசிரியர்

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

முன்னுரை :

உலக மொழிகளில் முதன்மையான மொழி தமிழ் மொழியாகும். தமிழ்மொழி மிகத் தொன்மையான மொழி என்பர். இத்தொன்மையான மொழி இலக்கணம், இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு சிறப்பிடம் பெற்றுள்ளது. இவற்றுள் பல்வேறு அறிஞர்கள் பன்முக நோக்கில் ஆராயப்படும் திருக்குறள் தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியங்களுள் ஒன்றாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உணவு. உணவிற்கு அடிப்படையானது உழவுத்தொழில். ஆகையால் உழவர்கள் பற்றியும், உழவுத் தொழில் பற்றியும் குறளில் இடம் பெறும் உழவு குறித்த செய்திகளை அறிய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வள்ளுவர் முதற்றே அறிவு :

வள்ளுவத்தில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது. வள்ளுவம் "தமிழனுக்குரியது" என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவருக்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதி,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

எனப் புகழ்ந்துரைத்தார். வள்ளுவ பொருட் சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ் நாகனார் "எல்லாப் பொருளும் இதன் பால் உள" என்று தெளிந்துரைத்துள்ளார்.இவை வள்ளுவத்தின் காலமும் எல்லையும் கடந்து நுண்பொருட்ச் சிறப்பை உணர்த்துவன. தமிழ் நாடு செய்த தவப்பயனாய் தோன்றிய வள்ளுவர் தந்த தமிழ் மறையாம் திருக்குறள் உலகப்பொதுமறை என்று போற்றப்படுகிறது. ஒன்றே முக்கால் அடியில்

ஒருங்கிணைந்த கருத்துக்களை ஓசையுடன் சொன்னதால்தான், திருவள்ளுவனாரின் திருக்குறளைத் திறனாய்வு செய்த இடைக்காடர் என்னும் புலவர்,

“கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி
குறுகத் தரித்த குறள்”

எனக் கூறியுள்ளார். மிகவும் சிறிதளவு என்பதற்குக் கடுகளவு எனக் கூறும் மரபு உண்டு. ஒரு சிறிய கடுகைத் துளைத்து அதனுள் ஏழு கடலைப் புகுத்தமுடியுமா? முடியாது. ஆனால், அந்த அரிய செயலைத்தான் திருவள்ளுவர் தம் ஒவ்வொரு குறட்பாவிலும் ஆற்றியுள்ளதாக இடைக்காடர் இயம்பியுள்ளார். ஔவையார் என்னும் புலவர் பெருமாட்டியோ,

“அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்”

என்று பாடியுள்ளார். அணு என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் Atom என்பது. இந்த Atom என்பதற்குப் பிளக்க முடியாதது என்பது பொருள். ஆனால், இருபதாம் நூற்றாண்டில் அணு பிள்க்கப்பட்டதை உலகு அறியும். அணுவைப் பிளத்தல் - துளைத்தல் என்ற ஒரு குறிப்பைப் பல நூற்றாண்டுகட்கு முன்பே ஔவையார் அறிவித்துள்ளார். பிளக்க முடியாத - துளைக்க முடியாத அணுவையும் துளைத்து அதனுள் ஏழுகடலைப் புகுத்துவது போன்ற அரிய பெரிய செயலைத் திருவள்ளுவனார் செய்துள்ளாராம். அதாவது ஒவ்வொரு குறளிலும், அரிய பெரிய - ஆழ்ந்த உயர்ந்த - பரந்து விரிந்த கருத்துக்கள் உள்ளன என்பது இதன் பொருளாகும். எனவே, திருக்குறள் நூலை ஒரு மாபெரும் கடல் என்று கூறலாம். கடலிலே முத்துக்கள் இருக்கும். திருக்குறளாகிய மாபெருங்கடலில் ஆயிரத்து முந்நூற்று முப்பது முத்துக்கலுள் வேளாண்மையின் சிறப்புக் குறித்துப் பாடிய “உழவு” என்ற அதிகாரத்தில் உள்ள பத்துப் குறட்பாக்களும் உழவின் சிறப்பை எடுத்துரைக்கின்றன.

திருவள்ளுவர் பல்துறை வள்ளுநர், உழவைத் தொழிலாகவும் கொண்ட உழவர் எனவும் கூறலாம்.

விருந்தோம்பல் :

விருந்தினரை உபசரிக்கும் ‘விருந்தோம்பல்’ அதிகாரத்தில்

“இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு” (குறள்-81)

இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம் மனைவியோடும் வனத்தில் செல்லாது இல்லின்கண் இருந்து பொருள்களைப் போற்றி வாழும் செய்கை எல்லாம் விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு விருந்தினரைப் பேணி அவர்க்கு உபகாரம் செய்தற் பொருட்டு வேளாண்மை செய்யாவழி இல்லின்கண் இருத்தலும், பொருள் செய்தலும் காரணமாக வரும் துன்பச் செய்கைகளுக்கு எல்லாம் பயன் இல்லை என்பதாம்.

கைமாறு கருதாது, பிறருக்கு உதவி செய்யும் பொருளில் ‘ஒப்புரவு அறிதல் ’ அதிகாரத்தில்,

“ தாளாற்றித் தந்த பொருள்ளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு” (குறள்-212)

பிறர்க்கு உதவாதார் போலத் தாமே உண்டன் பொருட்டும் வைத்து இழத்தற் பொருட்டும் அன்று என்பதாயிற்று. விடாமுயற்சியும் உடல் முயற்சியும் உடையவனாக இருக்க வேண்டும் என்று கூறும் ‘ஆள்வினையுடைமை’ அதிகாரத்தில்,

“ தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு” (குறள்-613)
“தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வேளாண்மை போலக் கெடும்” (குரல்-614)

என்ற குறட்பாக்களில் வேளாண்மை என்பது உதவி செய்தல் உபகாரம் செய்தல் என்று கூறப்பட்டது.

உழவுத் தொழிலே சிறந்தது:

உழவுத் தொழிலின் இன்றியமையாத தன்மையையும் சிறப்பையையும் இத்தொழிலில் உழவர்கள் கடைபிடிக்க வேண்டிய செயல்களையும் கூறுவதுதான் ‘உழவு’ என்ற அதிகாரத்தின் சிறப்பு உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலைப் பின்பற்றியே நிற்கும். அதனால் எவ்வளவு துன்பமானாலும் உழவே சிறந்த தொழிலாகும் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இதனை,

“ உழுவார் உலகத்தார்க்கு ஆணி” - (குரல்-1031)

“ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்” - (குரல்-1033)

உழவுத்தொழில் நின்றுவிட்டால் உலகத்தில் இல்லறமும் நடக்காது துறவறமும் நடக்காது இந்த பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு வருகிறது என்ற உண்மையை,

“ சுழன்றும் ஏர்ப் பின்ன துலகம் அதனால்

உழந்தும் உழவே தலைக்கு – (குரல்-1031)

என்ற குறளின் மூலம் உழவே தலை என்றும் கூறினார்.

“உழுவார் உலகத்தார்க் காணியஃதாற்றா

தொழுவாரை எல்லாம் பொறுத்து” (குறள்-1032)

காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு என்றாற் போல உழுவார் என்றது உழுவிப் பார்மேலும் செல்லும் உலகத்தார் என்றது ஈண்டு இவரையொழிந்தாரை, கலங்காமல் நிறுத்தற்கண் ஆணி போறலின் ஆணி என்றார்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் :

உழவு செய்து வாழ்வாரே உரிமையோடு வாழ்வார், மற்றவர் பிறரைத் தொழுது அவர் பின் சென்று வாழ்வர். இதனை,

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்” (குறள்-133)

என்ற குறள் வெளிப்படுத்துகிறது.

உழுது நெல்லை உற்பத்தி செய்யும் உழவர்கள் பல வேந்தரின் நிலங்களையும் தம் வேந்தரின் நிலங்களையும் தம் வேந்தரின் குடைகீழ் கொண்டு வருவார்கள் என்பதை,

"பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்" (குரல்-1034)

என்ற குறள் வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் நான்கு வருணத்தார்களில் (அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்) இரண்டு வருணத்தாரான அரசரும், வேளாளரும் இருந்த செய்தியை அறியமுடிகிறது.

உழவர்கள் யாசிக்க மாட்டார்கள்:

கையினால் தொழில் செய்து உழைத்து உண்ணும் தொழிலாளர் பிறரிடம் சென்று யாசிக்க மாட்டார். வெள்ளத்திலும் வறட்சியிலும் தம்மை யாசித்தவருக்கு மறைக்காமல் கொடுப்பர். இதனை,

" இரவார் இறப்பார்க்குஒன்று ஈவார் கரவாது
கைசெய்துஊண் மாலை யவர்" (குறள்-1035)

என்ற குறளின் வழி வெளிப்படுகிறது.

வேளாண்மையின் அடிப்படைத் தத்துவம் உழவு :

உழவில் தலையாய செயல் ஏர் கொண்டு உழுதல்.

" தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்" (குறள்-1037)

பெரும் கட்டிகளாக இருக்கின்ற வயல்மண் மிகச் சிறு கட்டிகளாக உடையும் வரை உழ வேண்டும். அஃதாவது புழுதியாகும் வரை உழ வேண்டும் என்கிறார் வள்ளுவர். ஒவ்வொரு சால் உழும் போதும் ஆழம் அதிகமாகிக் கொண்டே செல்லும் இவ்வாறு நன்கு உழுத மண்ணை உனக்கு (பொடிப் பொடியாக உதிரும் வண்ணம் நன்கு காய விடுதல்) வேண்டும். அவ்வாறு புழுதியான மண் காய்வதினால் காற்று உள்ளே புக ஏதுவாகும். பயிருக்கு நன்மை செய்யும் நுண்ணுயிரிகள் இதன் மூலம் புத்துயிர் பெறும். அதிகச் சத்துள்ள அடி மண் மேல் நோக்கி வருவதால்

விதை விதைத்த உடன் வளரும். வெப்பத்தின் மூலமும் பறவையினங்கள் மூலமும் பயிருக்குத் தீங்கு செய்யும் பூச்சி வகைகளின் முட்டைகளும் கூட்டுப் புழுக்களும் கட்டுப்படுத்தப்படுகின்றன.

உழவனின் இலக்கணம் :

ஒரு நல்ல உழவன் தன் நிலத்திலிருந்து கிடைக்கும் வைக்கோலைச் சேர்த்து வைத்திருப்பான் நாள்தோறும் உழுது ஏரைப் போற்றுவான் புன்செய் நிலத்தையும் திருத்துவான் எருவிடுவான் கலப்பையால் நிலத்தைப் பண்படுத்துவான். உழவுத்தொழிலின் முக்கியக் கூறுகளை வள்ளுவர்,

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

உழுவதைக் காட்டிலும் எருவிடுதல் தலையாயது இந்த இரண்டும் செய்த பின் களை நீக்க வேண்டும், களை நீக்கிய பின்னர் நீர் பாய்ச்ச வேண்டும். இவை அனைத்தையும் செய்த பின் எக்காலத்திலும் பயிரைக் காப்பது மிகவும் இன்றியமையாதது. ஒரு மிகப்பெரிய இலக்கை அடைவதற்கு அதைச் சிறு இலக்குகளாகப் பிரித்து ஒவ்வொரு சிறு இலக்கையும் செம்மையாக மேற்கொண்டால் மலைப்புத் தெரியாமல் பயணம் எளிதாக இருக்கும். அந்த மேலாண்மை தத்துவத்தையே வள்ளுவர் கையாண்டுள்ளார்.

எருவிடுதல் பற்றிய முரண்பட்ட கருத்துக்களை மேற்கண்ட இரண்டு குரல்களிலும் காணலாம் ஆனால், இந்த முரண்பாட்டிற்குள் ஒரு அறிவியல் உண்மை ஒளிந்துள்ளது அனைத்து வகை நிலங்களிலும் ஒரே மாதிரியான வேளாண்மை செய்வது இல்லை. காடுகள் நிறைந்த புன்செய் நிலமான முல்லை நிலத்தில் செய்யும் வேளாண் முறையும், வயற்பரப்புகள் நிறைந்த நன்செய் நிலமான மருத நிலத்தில் செய்யும் வேளாண் முறையும் வேறுபடும்.

புழுதி பறக்க உழுதால் ஒரு பிடி எருகூடத் தேவையில்லை என்று கூறியது முல்லை நிலத்திற்கும். உழுவதை விட எருவிடுதல் நன்று என்று கூறியது மருத நிலத்திற்கும் பொருந்தும்.

முடிவுரை :

இன்றையநிலை, இந்தியாவில் இருக்கும் தமிழகத்தில் இன்றளவும் உழவுத் தொழில் சிறந்ததாக காணப்படுகிறது. இத்தகைய உழவுத் தொழிலின் மூலம் விளையும் பொருட்களை இன்றளவும் உட்கொண்டு மக்கள் உயிர் வாழ்கின்றனர். செயற்கை உரம் தரும் சீரழிவை தவிர்க்க வேண்டும்.

மேலும் தரமான விலைப் பொருளுக்கு, நியாயமான எடை, மறைமுக ஏலம் மூலம் சரியான விலை கிடைக்க ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலமாக விற்பனை செய்யவும். கண்காணிக்கவும் அக்மார்க் தர நிர்ணயம் செய்யவும் வேளாண்மை விற்பனைத்துறை தனியாகச் செயல்படுகிறது.

துணைநூற்பட்டியல் :

1. திருக்குறள் வேளாண்மை – இல. செ. கந்தசாமி
2. பாலசுந்தரம்.ச, திருக்குறள் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம் சென்னை. 2000
3. பத்மதேவன், தமிழ்ப்பிரியன் (உ.ஆ), நீதிநூல் களஞ்சியம், கொற்றவை வெளியீடு, 2014

இன்குலாப் கவிதை வெளிப்படுத்தும் மனிதம்

லூா.இக்னேசியஸ் சேசுராஜா,, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
முனைவர் க.கமலா, (நெறியாளர்)பேராசிரியர்,
தமிழ்த்துறை, மொழிகள் புலம், வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

Abstract:

Imagination is not the only reason for a creator to compose pomes, facts also roam around the poets soul .It is natural for the poet to not spread his wings towards the sky but to roam in the real earth in which we live. That is why the thought of the country becomes inevitable for the poet. The poets realized that life without country and languages is only moving and not successful. That is why poets from the Sangam period till today thought about the country very much.

“To meet a social need in the best possible way you must be at the head of your class and engage in the struggle with that class on all fronts.You must shatter the myth that art is apolitical” - Mayakovsky

There are many paths leading to human liberation. The philosophies that underpin each of them are beliefs, arts, and literature. All the philosophies leading to liberation can be divided into two categories, one is life-supporting and the other is life-denying.

Keywords படைப்பாளன்,கவிதைகள் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், மனிதம்

முன்னுரை

ஒரு படைப்பாளன்,கவிதைகள் புனைவதற்குக் கற்பனைகள் மட்டும் காரணமாக இருப்பதில்லை உண்மைகளும் கவிஞர்களின் உள்ளத்தைச் சுற்றி உலா வருகின்றன.

ஆகாயத்தை நோக்கி மட்டும் தன் சிறகுகளை விரிக்காமல் நாம் வாழுகின்ற உண்மையான மண்ணில் புரள்வதும் கவிஞனுக்கு இயல்பாகிறது.அதனால் தான் நாட்டைப் பற்றிய சிந்தனை கவிஞனுக்குத் தவிர்க்க முடியாதாகிறது. நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் இல்லாத வாழ்வு நகருமே தவிர வெற்றியைத் தராது என்பதை கவிஞர்கள் உணர்ந்திருந்தனர். அதனால்தான் சங்ககாலந்தொட்டு இன்றுவரை கவிஞர்களிடத்து நாட்டைப் பற்றிய சிந்தனை மிகுந்திருந்தது.

"ஒரு சமூகத் தேவையைச் சிறந்த முறையில் சந்திப்பதற்கு உனது வர்க்கத்தின் தலைமையில் நீ இருக்கவேண்டும்; அப்படி இருந்துகொண்டு அந்த வர்க்கத்தினரோடு எல்லா முனைகளிலும் போராட்டத்தில் ஈடுபடவேண்டும். அரசியலற்ற கலை என்ற கூட்டுக்கதையைத் தூள்தூளாக நொறுக்கிவிட வேண்டும்"(1) என்றான் மாயாகோவ்ஸ்கி

(ஆ.செகந்நாதன், புதிய கவிதைகளில் மார்க்கீயம் ப 68

மனித விடுதலைக்கு இட்டுச் செல்லும் வழிகள் எத்தனையோ இருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் தாங்கும் தத்துவங்களாக நம்பிக்கைகள் அவற்றைச் சேர்ந்த கலைகள், இலக்கியங்கள் எல்லாம் இருக்கின்றன. விடுதலைக்கு வழி சொல்லும் தத்துவங்களை எல்லாம் இரண்டு வகையாகப் பிரித்துவிடலாம் ஒன்று வாழ்க்கையை ஏற்பவை. மற்றொன்று வாழ்க்கையை மறுப்பவை

மனிதவாழ்வு

மனித வாழ்வு உயர்வானது, உன்னதமானது, வளர்ச்சியடைந்த பொறிகள் கொண்ட மனிதனால் வாழ்க்கையிலிருந்து எவ்வளவோ அனுபவங்களைப் பெறமுடிகிறது. அந்த அனுபவங்களை ஆராயவும் அவற்றினூடே ஒளிரும் உண்மைகளைத் தொகுத்துக் கொள்ளவும் அவனால் முடிகிறது. இந்த வாழ்க்கையில் அழகுகள் கொட்டிக்கிடக்கின்றன. வாழ்க்கையை எதிர் கொள்வதும் அதன் உயர்வையும் தாழ்வையும் ஆராய்வதும் பேரனுபவங்களுக்கு ஆளாவதும் வாழ்க்கை சார்ந்த உண்மைகளைக் கண்டடைவதற்கான வழியைத்

திறக்க உதவுவதாகும். இவ்வழியில் நீண்ட பயணத்தை மேற்கொள்வது மனிதப் பிறவிக்கே கிடைத்த பெரும் வாய்ப்பாகும்.

கவிஞன் ஒருவன் தன் வாழ்க்கை அனுபவத்தில் கற்றதை தன்னுணர்ச்சி பாடல் மூலமே வெளிப்படுத்த அதிகம் விரும்புவான் அதுதான் அவன் கொண்ட உணர்ச்சியின் முழுமையையும் ஏற்றுக்கொள்ளும் கொள்கலமாக இருக்கிறது. அதுவே, மிகத் தூய்மையான கவிதையின் வடிவம் ஆகிறது. அதுமட்டுமின்றிக் கவிஞன் என்பவன், காலத்தின் கோலங்களைக் கருத்துமிக்க செயல்பாடுளை, வரலாற்று எண்ணங்களைச் சிந்தனையும் கற்பனையும் கலந்து உலகிற்கு வரையறுத்துக்காட்டும் 'கண்ணாடி' போன்றவன். மேலும் தான் வாழும் காலநிலை அறிந்து உணர்ந்து தேவைக்கேற்ப மரபு மாறாமல் பண்பாட்டிற்கு இழுக்கு வராமல் பா வடிக்க முயல்கிறான்.

இலக்கியத்தில் மனிதம்

“மனிதனை நேசிக்கிற எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டுகிற உன்னதமான வாழ்க்கை நெறியே மனிதம்" ஆகும். இது சங்க இலக்கியத்தில் பரவலாகக் காணப்படுகிறது. தன்னைப் பிரிந்து சென்ற காதலனை நினைத்து வாடும் காதலியை நோக்கி, மழைக் காலம் வந்துவிட்டது விரைவில் காதலன் வருவான் என்று ஆறுதல் கூறுகிறதோழி,

“பூத்த பொங்கர் துணையொடு வதிந்த
தாதுண் பறவைபேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்தமாண் வினைத்தேரன்
உவக் காண்தோன்றும் குறும்பொறை நாடன்”(2)

(பா.வீரமணி, பட்டுக்கோட்டையின் பாட்டுத்திறம் ப-84)

என்று பாடுகிறான். காதலன், பூங்காவில் பூத்திருக்கும் மலர்களில் தேன் குடிக்கும் வண்டுகள் பயப்பட்டு அஞ்சுமே என்று கருணையோடு தன் தேரில் கட்டப்பட்டுள்ள மணியின் நாவை ஒலிக்காத வண்ணம் கட்டித்தேரை ஓட்டுவானாம். பல நாட்கள் பிரிந்து சென்று திரும்பும்

வேளையிலும் வண்டினங்கள் மகிழ்வைச் சிதைக்கக் கூடாது என்று நினைத்த காதலனின் உள்ளம் சங்ககாலச் சமுதாயப் பண்பை உணர்த்துகிறது.

மனிதம் என்பது என்ன?

மனிதனுள் சுயநலம் வளர்ந்த போதே பொது நலமும் வளர்ந்துள்ளது; மனித காயங்கள் பெருகும் போதே மனித நேயங்களும் பெருகி வந்துள்ளன, அவை ஒன்றுக்கொன்று தொடர்பானவை, ஆனால் முரண்பாடானவை, மதத்தின் தேவை இல்லாமல் மனித குலத்தின் ஆற்றலினாலேயே மகிழ்ச்சியையும் தேவையையும் அடைய முடியும் என்று உறுதியாக நம்பும் தத்துவமே மனிதம். கருக்கமாகச் சொன்னால் "எப்பொழுதும் பிறர்க்குத் துன்பம் தராத நிலையே மனிதம் எனலாம்." இத்தகு மனிதம் சார்ந்த கூறுகளை தமிழ் இலக்கிய வரலாறு காட்டும் மனிதநேயப் படைப்பாளர்கள் வரிசையில் கவிஞர் இன்குலாபின் படைப்புகளின் வழிக் காணலாம்.

மனிதம் என்பதை கவிஞர் இன்குலாப்,

"அன்புசெய்க! அன்பு என்பது செயல்...
அல்லல்படும் மக்களுக்கு
எதுதேவையோ அதை நிறைவு செய்வது அன்பு..
அது வெற்றுச் சொல் அல்ல.
பசி தீர்த்தல் துன்பம் துடைத்தல்" (3)

(இன்குலாப்,மணிமேகலை,ப-126)

என்கிறார். உலக உயிர்களுக்கு முதல் தேவை உணவு அதை உலகத்திற்குக் கொடுப்பதில் தான் மனிதம் உண்டு அதைச் செய்ய பெருந்துணை அன்பு என்கிறார் கவிஞர்.

இதே கருத்தை பாரதி,

“வயிற்றுக்கு சோறிடவேண்டும் – இங்கு
வாழும் உயிர்க்கு எல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை

உயர்த்திடவேண்டும்"(4)

(பாரதியார் கவிதைகள் ப.86)

என்று வாழும் உயிர்க்கு எல்லாம் சோறிடவேண்டும் என்கிறார். உடன் அதை கற்பிக்கவும் வேண்டும் என்கிறார் கல்வி என்பது அறியாமையைப் போக்கும் மருந்து உணவிற்குப் பின் அதனைக் கொடுக்கவேண்டும் என்கிறார்.

மனிதமும் கலையும்

கலை என்பது கருத்தை நிலை நிறுத்தி மனித சமுதாயத்தின் அமைதிக்கும் வாழ்விற்கும் வழி அமைப்பது ஆகும். கலையில் மனிதம் நிலைபெற்றால் மட்டுமே அது நெடுநாள் வாழும் தகுதியைப் பெறுகிறது. அதனைக் கவிஞர் இன்குலாப்,

"கபிலரை மனிதன் என்பேன் மனிதத்தின்
உணர்வுகளை அந்த
அந்தச் சூழல்களில் நிறுத்திப் படைப்பது தான் கலை.
கபிலரும் இந்த உணர்வுப்பட்டவரே!"(7)

(இன்குலாப், குறிஞ்சிப் பாட்டு ப-24)

கலையில் மனிதத்தின் உணர்வுகள் நிலை பெறவேண்டும் என்கிறார். இயற்கையின் படைப்பில் கலைஞன் வேறெந்த படைப்பும் செய்யாத செயலை மனிதன் மனிதனுக்குப் படைக்கிறாள்.

வெய்யிலிடம் வேண்டுகோள்

உழைப்பாளர்களையும் உழவர்களையும் சூத்திரர் என முத்திரை குத்தியவர்களை விலங்குகளாக எண்ணிய போக்கு உண்டு. ஆனால் அக்காலத்திலேயே 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்றும் சுழன்றும் ஏர்ப் பின்னது உலகு என்றும், "இரவார் இரப்பார்க்கு கொன்று ஈவார்" என்றும் உழைப்பாளர்களான உழவர்களைச் சமுதாயத்துத் தலைமக்களாக்கியப் பெருமை திருவள்ளுவர்க்கு உண்டு.

"இலபென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்."(8)

(மு.வ.உரை,திருக்குறள் ப.104)

என்று கூறி மக்களாகப் பிறந்த ஒவ்வொரு வரும் சோம்பித் திரியாமல் உழைக்க வேண்டும் என எச்சரிக்கிறார் வள்ளுவர்.

மானுடத்தைப் போற்றிய மறுமலர்ச்சிக் கவிஞல் ஷெல்லி, இங்கிலாந்து மக்களுக்கு' எனும் கவிதையில்,

"இங்கிலாந்து மக்களே! உழைத்து உழைத்து
முனகுபவர்களே!
உங்களுக்குச் சொந்தமில்லாத அறுவடைகளை
அறுப்பவர்களே!
உங்களை அடக்கி ஆள்பவர்களுக்கு ஆடை
அணிகளை நெய்து
கொடுத்துவிட்டு, உங்களுக்கோ கொடிய குளிர்
வாடையையே
போர்த்திக் கொள்பவர்களே! உங்களைத்தான்!
கதகதப்பான
வீடு கட்டுபவர்களே நீங்களெல்லாம் அவர்களை
தொட்டில் முதல்
கடுகாடு வரை பேணிப் பாதுகாக்கிறீர்களே!
தம்மிடமுள்ள
எல்லாவற்றையும் அவர்களுக்கு வழங்கிவிடும்
கடவுளர்களைப்
போல் நீங்கள் இருக்கிறீர்கள்"(9)

(பா.வீரமணி, பட்டுக்கோட்டையின் பாட்டுத்திறம் ப-84)

என்று தொழிலாளர்கள் கடவுளைப் போன்றவர்கள் என்றே கூறுகிறான். ஷெல்லியின் தாசனாகக் காலம் முழுதும் விளங்கிய பாரதியாருக்கு மேற் கண்ட கவிதையின் தாக்கம் மிகுந்திருந்தது எனலாம். பாரதியார் கடவுள் நம்பிக்கை உள்ளவர் மனிதர்களைக் கடவுள் நிலைக்கு உயர்த்த முடியும் என்று நம்பியவர்.

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே

யந்திரங்கள் வருந்திடுவீரே

கரும்பைச்சாறு பிழிந்திடுவீரே

கடலில் மூழ்கி நன்முத்தெடுப்பீரே!

அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல்

ஆயிரம் தொழில் தெய்திடுவீரே

பெரும்புகழ் நமக்கே இசைக்கின்றேன்

பிரமதேவன் கலையிங்கு நீரே!"(10)

(பாரதியார் கவிதைகள்,ப.458)

என்று படைப்புக் கடவுளின் கலையாகவே பாட்டாளியைக் கண்டார். தேடிச் சென்றும் காணமுடியாத கடவுளைப் போல் அல்லாமல் கண் முன்னே நடமாடும் சுடவுளாக பாரதியார் காண்கிறார். இதே போல பாரதிதாசனும்,

------------------------செந்தோட்

புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்

புதுநடையில் பூரித்தாள்விளைந்த நன்செய்

நிறத்தினிலே என்விழியை நிறுத்தினாள் என்

நெஞ்சத்தில்குடியேறி மகிழ்ச்சி செய்தாள்(11)

(பாரதிதாசன் கவிதைகள் (அழகின் சிரிப்பு)

என்று அழகு என்பவள் உழவனிடத்தும் கலைப் பையிலும் காட்சி தந்தாள் என தான் மகிழக் காரணமான உழைப்பைப் பாராட்டுகிறார்.

கவிஞர் இன்குலாப் மனிதத்தின் தன்மை உணர்த்துவதாக,

"கரண்டிக் கொழுப்பவர்கள் உள்

சூட்டில் பொசுங்கவில்லை

சுரண்டப் படுபவர் தாம் – உள்

சூட்டில்பொசுங்குகிறார்

ஆகையினால் வெயிலே – ஏழை

ஆவி பிரிந்த உடல்

வேகையில் மட்டும்சுடு –அதுவரை

வீணில் பொசுக்காதே!"(12)

(இன்குலாப் ஒவ்வொரு புல்லையும் ப-270)

என்று வெய்யிலிடம் வேண்டுகிறார். உழைத்து உடல் வருந்துபவர்கள் உழைப்பாளிகள். அவர்கள் உழைப்பாலே இவ்வுலகம் இயங்குகிறது. யார் அவரவர்கள் உழைப்பால் உயர்கிறார்களோ அவர்கள் வாழ்வு மிகவும் சொகுசாக உள்ளது. எனவே வெயிலே நீ தயவுசெய்து பாட்டாளிகளைப் பொசுக்காதே அவர்கள் இறந்த பிறகு மட்டுமே பொசுக்கு என்று வெயிலிடம் முறையிடுகிறார். இக்கவிதை, கவிஞரின் மனிதநேய உணர்வை வெளிப்படுத்துகிறது.

தொகுப்புரை

சமுதாயத்தில் மனிதநேயத்திற்கு எதிராகச் சுமத்தப்படு அத்தனையும் எதிர்க்கப் படவேண்டும் என்கிறார்.

பாரதிதாசன் உணர்த்திய தாய்மொழி வழிக்கல்வி

வி. கவிதா, முனைவர்பட்ட ஆய்வாளர்,
முனைவர் அ.இருதயராஜ், உதவிப் பேராசிரியர், (நெறியாளர்)
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

பழமையை அறிந்து போற்றவும். புதுமையை உணர்ந்து ஏற்கவும் துணை செய்வது தாய்மொழி அறிவு. ஒருவனை உலகிற்கு வெளிப்படுத்திக்காட்டவும் தனிமனித வளர்ச்சிக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் காரணமாய் அமைந்தது அவன் தன் மொழி மீது கொண்ட பற்றே, தன்னை உலகிற்குப் புதிய பரிமாணங்களில் ஒளிரச் செய்து, சுயமரியாதையோடு வாழவைக்கும் தமிழ்வழிக் கல்வியின் சிறப்புகளைப் பாரதிதாசன் தன் பாடல்களில் எவ்வாறு எடுத்துரைக்கின்றார் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்ச் சமுதாயம்

தமிழக மக்களின் அடிமை எண்ணத்திற்குக் காரணம் அவர்களின் நெஞ்சில் மண்டிக்கிடக்கும் சாதி வெறியே, எல்லாத் தமிழரும் சாதியையொழித்து இன்பத் தமிழகத்தை எய்துங்கள் என்கிறார். எழிலான தமிழகத்தையும் நல்வாழ்வையும் அடையத் தடைக்கல்லாக இருப்பது சாதி என்கிறார் பாவேந்தர். அதனால், "ஒழியாச சாதி ஒழிய வேண்டும்" என்கிறார். சாதியொழிந்தால் நாம் எல்லாத் துறைகளிலும் எதிர்பார்க்கும் முன்னேற்றம் அடைந்துவிடுவோம் ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் ஊறு விளைவிப்பது சாதியும் மதமுமே என்பது பாவேந்தரின் முடிந்த எண்ணமாக உள்ளது.

சாதி ஒழித்திடல் ஒன்று நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று

பாதியை நாடு மறந்தால் - மற்றப்

பாதி துலங்குவதில்லை

சாதிகளைத் திட்ட ஏரி நல்ல

தண்டமிழ் நீரினை ஏற்கும்

சாதிப் பிணிப்பற்றதோளே நல்ல

தண்டமிழ் வாளினைத் தூக்கும்!

என்று பாரதியார் தனக்கு உரைத்திட்ட கருத்துக்களை மனதில் ஏற்றி பாரதிதாசன் தாம் படைத்த கருத்தோவியங்களில் எங்கெல்லாம் சாதி ஒழிப்பு கருத்துக்களைக் கூற முடியுமோ எனச் சிந்தித்து அங்கெல்லாம் பல பாடல் பாடியுள்ளார்.

தாய்மொழி வழிக்கல்வி

உலகின் செவ்வியல் மொழிகளில் ஒன்றாகத் திகழும் தமிழ்மொழி, செம்மாந்த இலக்கிய, இலக்கண வளங்களைப் பெற்ற சிறப்புக்குரிய மொழியாகத் திகழ்கின்றது. வளமார்ந்த தமிழர்களின் வாழ்வியல், பண்பாடு, நாகரிகம், அரசியல், வரலாறு, அறிவியல் முதலானவை இடம்பெற்றுள்ள தமிழ் இனத்துக்கும் தமிழ் நிலத்துக்கும் தமிழ் மொழிக்கும் பெருமைசேர்க்கும் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவி தமிழ் வழியில் பாடங்களை நடத்ததேவண்டும் என்பதை,

தமிழ்க் கல்விக் கழகம் நிறுவி

- - - - - - - - - -

தமிழ்ப் பேச்சால் தமிழ் எழுத்தால்

நடத்தல் வேண்டும்

என்று சுட்டுகிறார். தாய்மொழியாம் தமிழ்வழிக் கல்வி கற்பிக்க வேண்டும் என்பதை,

செந்தமிழ்ப் பள்ளி புகுத்தி

தமிழ்க் கல்வி கட்டாயம்

என்ற கவிதை உணர்த்துகின்றது. தமிழ் வழியில் கற்பதால் தாழ்வுமனப்பான்மை நமக்கு தேவையில்லை. கவிஞர்கள் பலருக்கு வாழ்வுக் கொடுக்கக் கூடியது எனப்தை,

தமிழ் மொழியில் தமிழ்ப்பாடல்
மிகவுண்டு தமிழ்க் கவிஞர்
பல்லோர் உள்ளார்
உமைத்தாழ்வு படுத்தாதீர்

என்றும். மேலும், தமிழ்மொழி கீழான நிலைக்குச் செல்ல அனுமதிக்க மாட்டேடன். தன் உயிர் இருக்கும் வரைக்கும் அவற்றைக் காப்பேன் என்று கூறுகின்றார் பாரதிதாசன். இதனை,

நாயினும் கீழாய்ச் செந்தமிழ்
நலிவதை நான் கண்டு
ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி
ஊழைத்திட நான் தவறேன்

என்ற பாடல் மூலம் உணரலாம்.

தமிழ் மரபை உணர்த்தும் கல்வி

தமிழ் வழியில் கற்கும் மாணவர்களுக்கு தமிழ்பண்பாட்டு மரபான காதலும் வீரமும் உண்டாகும். அவர்கள உள்ளத்தில் இன்பம் பெருகும், துன்பங்கள் நீங்கி மனதில் தூய்மை உண்டாகும் என்று கூறுகின்றார். இதனை,

இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் -
துன்பங்கள் நீங்கும் , சுகம்வரும் நெஞ்சினில்
தூய்மையுண்டாகிவிடும், வீரம் வரும்

என்று கூறித் தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்பினைப் போற்றுகிறார்.

பிறமொழி மூலம் கட்டாயப்பதடுத்தி கற்க்கும் பொது தாய்மொழியின் வளர்ச்சி குன்றிவிடும் என்பதை,

தமிழகத்தில் இந்தி திணிக்கச்

சுட்டம் செய்தார் அவரே

சாரும் குட்டையில் எருமை மாட்டை

தள்ளுகின்றார் அவரே

என்ற கவிதை உணர்த்துகின்றது.

இன உயர்வை அளிக்கும் மொழி

தமிழ்ன் உயரவேண்டும் என்றால் தமிழ் உயர வேண்டும் என்ற சிந்தைனையை முன் வைக்கிறார். புhரதிதாசன். இதனை,

தமிழுயர்ந்தால் தான் தமிழன் உயர்வான்

தமிழ்ப் பகையாளனும் தானே பெயவாள்

தமிழுயர்ந்தால் தான்!

என்றும். மேலும், உயர்வையும் உணர்வுள்ள மனதனாகவும் ஆக்குவது தமிழ் மொழி என்பதை,

உயர்வுற்ற தமிழ்மக்கள் உணர்வுற்ற நால்வாழ்வு

கருவுற்ற செந்தமிழ்ச் சொல் - ஒரு

கதியற்றறுப் போனதுண்டோ அடடா அந்த

என்று குறிப்பிடுகிறார். தமிழ் மொழியின் சிறப்பினை உலகிற்கு உணர்த்திட பெண்களே வரும் கொண்டு எழுந்து வாருங்கள் எண்னு மொழியுரைமக்கு குரல் கொடுக்கின்றார் பாரதிதாசன். இதனை,

ஒருவானில் பன்னிலவாய்

உயர்தமிழ்ப் பெண்களெலாம்

எழுக! ஊங்கள்

திருவான செந்தமிழின்

சிறுமையினைத் தீர்ப்பதென

எழுக! நீவிர்

என்று குறிப்பிடுகிறார். தமிழ்த் தொண்டு என்று வந்துவிட்டால் முதியவரும் இளமையோடு செயல்படுவார் என்பதை,

தண்டூன்றும் முதியோரே!

துமிழ்த் தொண்டென்றால் இளமை

துனை எய் தீரோ?

என்று குறிப்பிடுகிறார். தமிழ் நாட்டில் காணப்படும் வணிக நிறுவனங்களுக்கு தமிழ்ப் பெயர் பலகை அமைக்க வேண்டும் என்று அரசு கட்டளைளிடவேண்டும் என்கிறார். இதனை,

தமிழில் பெயர்பலகை
வாணிகர் தம் முகவரியை
வரைகின்ற பலகையில் ஆங்
கிலமா வேண்டும்?
மாணுயர்ந்த செந்தமிழால்
வரைக என அன்னவர்க்குச்
சொல்ல வேண்டும்

என்ற கவிதை வழி உணர்த்துகின்றார். பிறமொழியை கற்றாலும் இனிய செந்தமிழ் மொழியை உயிராக நினைத்து வாழவேண்டும் என்பதை,

ஆங்கிலத்தைக் கற்கையிலும்
ஆயல்மொழியைக் கற்கையிலும்
ஏந்த நாளும்
தீங்கனியைச் செந்தமிழைத்
தென்னாட்டின் பொன்னேட்டை
உயிராய்க் கொள்வீர்

என்ற கவிதை வழி உணர்த்துகின்றார். பாவேந்தர் தம்முடைய ஆத்திசூடியில் மதமான பேய் என்பதொன்றிருப்பதல்லது பேய் என்று வேறு ஒன்று கிடையாது என்னும் பொருளில் பேயி(ல்)லை மதம(ல்)லால் என்று கூறுகின்றார். இந்தக் கருத்தையே தொடர்ந்து வலியுறுத்தும் பாவேந்தர்

ஒரு மதமும் வேண்டாம் - தம்பி
உண்மையுடை யோர்க்கே
பெருமதங்கள் என்னும் - அந்தப்
பேய் பிடிக்க வேண்டா

என்கிறார். மதத்தின் பெயரால் மக்களின் அறிவு மழுங்கடிக்கப் படுகிறது; அவர்களின் பொருள்கள் பாழக்கப்படுகின்றன. ஏராளமான சமூகத் தீங்குகள் மதத்தால் விளைகின்றன என்கிறார் பாவேந்தர்.

முடிவுரை

மக்கள் நெஞ்சில் மண்டிக்கிடக்கின்ற சாதியை அழித்திது தமிழ் சமுதாயத்தைத் தழைத்து வளரச் செய்வதும்; தமிழர்களின் வாழ்வியலில் பண்பாடு, மரபு, அரசியல் வரலாறு, அறிவியல் ஆகியவை சிறந்து விளங்கவும் தாழ்வுமனப்பான்மை நீங்கவும் தமிழ் மரபை நிலைநிறுத்தவும் தமிழி வழி கற்றல் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. எனவே பல்கலைக்கழகங்களை நிறுவி தமிழ் வழியில் கற்பிக்கவேண்டும் அப்படி கற்பித்தால் தமிழ்ச் சமுதாயமும் தமிழ் மொழியும் செழித்து வளரும்

துணைநின்றவை

1. பாரதியார், பாரதியார் கவிதைகள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ப) லிட், சென்னை.
2. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் தொகுதி தொகுதி 1, நர்மதா பதிப்பகம் , சென்னை.
3. பாரதிதாசன், தமிழியக்கம், நர்மதா பதிப்பகம் , சென்னை.
4. பாரதிதாசன், தாயின் உள்ளம் மகிழ்கிறது, நர்மதா பதிப்பகம் , சென்னை.
5. பாரதிதாசன், வேங்கையே எழுக, நர்மதா பதிப்பகம் , சென்னை

தமிழர்களின் தாவர உணவுகள்

முனைவர் பொ,குபேந்திரன், உதவிப் பேராசிரியர் – தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை - 600 117

ஆய்வுச் சுருக்கம்

உணவின்றி உயிர்வாழவே முடியாது. எனவே மனிதனின் முதல் தேடல் முயற்சியாக உணவவே இருந்தது. பழங்கள், காய்கறிகளைத் தொடக்க காலத்தில் உண்ட மனிதன் படிப்படியாக உணவைச் சமைக்கவும் அதனைப் பயன்படுத்தவும் கற்றிருக்கலாம். எனவே மனிதன் உயிர்வாழ அவசியமானது உணவு. உணவு இல்லையேல் உயிர்கள் வாழ முடியாது. இந்த உணவின் தன்மை இடத்திற்கேற்பவும், சூழலுக்கேற்பவும் மாறுகிறது. அனைவரும் ஒரே மாதிரியான உணவை உண்பதில்லை. மக்கள் அவர்களுக்கு எளிதில் கிடைக்கும் உணவுப்பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை அதிகம் உண்கின்றனர். அந்த வகையில் சங்க காலத்தில் மக்கள் அதிகம் தாவர உணவுகளைச் பயன்படுத்தி உண்டனர் விளக்கமுறை ஆய்வுக்கொண்டு விரிவாக விளக்கப்படுகின்றன.

முன்னுரை

உண்-உணா-உணவு என்பதில் உண் என்பது அடிச்சொல்லாக அமைகிறது. அடிச்சொல்லின் அடிப்படையில் உண்ணப்படுவது அனைத்தும் உணவு என கருதத் தோன்றும். உடல் நலம் உள்ளவனுக்கு உணவாக பயன்படும் கஞ்சி நோயற்றவனுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. எனவே உண்ணப்படுவதெல்லாம் உணவாகும் என்பதை எளிதில் உணரலாம். உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆற்றலை தரும் பொருளை உணவென்று கூறுவர் .எனவே வாய் வழியாக உட்கொள்ளப்பட்டு உயிர் வாழ்வதற்கும் உடல்நலத்திற்கும் தீங்கு

விளைவிக்காத இன்றியமையாத உணவுகளைச் சமைத்து உண்டவன் தமிழன் .

கிளறித் திருத்திப் பயன்படுத்துவதாகும் என்கிறார் சித்பவானந்த.(சையத் ஜாகீர் ஹசன், நீதி நூல்களில் கல்வி,ப.3)

காய் வகைகளை காம்பு கலைந்து சீவியும் கழுவியும் மீதமுள்ளவற்றை அவித்தும் மஞ்சள், மிளகு அல்லது மிளகாய் வற்றல், சீரகம், கொத்தமல்லி, தேங்காய் முதலியவற்றை மை போல அரைத்தும் கலைந்தும் இஞ்சி வெங்காயம் வெள்ளைப்பூண்டு பெருங்காயம் கராம்பூ ,கருவாப்பட்டை, ஏலம், சோம்பு முதலியவற்றை மீண்டும் அளவு சேர்த்தும் வெந்தபின் புளிஅல்லது எலுமிச்சை சாறு விட்டும் கடுகு, கருவேப்பிலை முதலென தூவியும் ஆவின் நெய்யில் தாளித்தும் முதன் முதலில் குழம்பைக்கொதிக்க வைத்து உண்டவன் தமிழன் தான் என்பதை அறிவியல் களஞ்சியத்தின் வழி அறியலாம். இப்படி உணவையே மருந்தாக உட்கொண்ட தமிழர்களிடம் தாவரங்கள் எவ்வாறு மருந்தாக பயன்பட்டன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்..

தாவரங்கள்

சங்கப் புலவர்கள் பெரிதும் தாவரங்களின் மலர்களைப் பற்றி குறிப்பிடுகின்றனர். ஆயினும் அவற்றின் தண்டு இலை முதலியவற்றை பற்றி கூறும் புலவர்களும் இருந்துள்ளனர். சான்றாக கூடல் கொன்றை பற்றி கணிமேதாவியாரும், புன்னையைப் பற்றி விளைச்சநாரும் வரகு பற்றி கபிலரும் மிகச் சிறப்பாகப் பாடியுள்ளனர்.நெய்தல்,குளவி,பாலை முதலிய தாவரங்களின் பெயர்களைக் கண்டுபிடிக்க புலவர்களின் பாடல்கள் துணை செய்கின்றனர்.

தாவரங்களின் பயன்கள்

தமிழ் இலக்கியங்களில் தாவரங்கள் பற்றி பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன. பழந்தமிழர் தம் வாழ்வில் மருத்துவத்திற்காகத் தாவரங்களை பயன்படுத்தியுள்ளனர் . தமிழக மக்களின் அகவாழ்விலும் புற வாழ்விலும் தாவரங்களின் பயன்பாடு பின்னிப் பிணைந்துள்ளது

என்பதனை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இத்தகைய இயற்கை வாழ்வை மக்கள் தொண்றுத்தொட்டு இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அத்துடன் தாவரங்கள் பலவித நோய்களைக் குணப்படுத்தும் மூலிகைகளாக பயன்படுகின்றன .தாவரங்களில் பல வைட்டமின் சத்துக்கள் உள்ளன. வீட்டுக்கு தேவையான பொருள்கள் செய்யவும் விளையாட்டுப் பொருள்கள் செய்யவும் பயன்படுகின்றன. மேலும் தாவரங்களின் பயன்பாடு மிக முக்கியமானதாகத் தமிழர்களின் வாழ்வில் இருந்துள்ளது.

உணவிற்காக பயன்படும் தாவரங்கள்

தமிழகத்தில் பெரும்பாலும் மலைப்பகுதிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் வாழுகின்ற மக்கள் தங்கள் பகுதியில் கிடைக்கின்ற தாவரங்களையே பெரிதும் நம்பி வாழ்கின்றனர். காடுகளில் மனிதன் தனியாக உதவி இன்றி வாழும் காலங்களில் தாவரங்களையே உணவாக பயன்படுத்தி உள்ளான். மனிதர்கள் காடுகளில் கிடைக்கும் பச்சை காய்கறிகள் பசுங்கீரைகள் பூக்கள் பழங்கள் விதைகள் கிழங்குகள் மற்றும் வேர்களையே உணவாக உண்டு வாழ்ந்து வருகின்றனர் உணவாகும் இந்தத் தாவரங்களை முற்றிலும் அழியா வண்ணம் பயன்படுத்தியும் பாதுகாத்தும் வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான தாவரங்களை நன்றாக அறிந்திருப்பதும் அவற்றின் சுவையையும் இவர்கள் நன்கு அறிந்துள்ளனர். இந்த தாவரங்களில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள் தங்களுக்கு நீண்ட ஆயுளையும் வீரியமிக்க ஆரோக்கியமான வாழ்வையும் அளிப்பதாக பெரிதும் நம்புகின்றனர் .இவற்றில் சாமை, திணை, வரகு போன்ற உணவு தானியங்களை உண்பதால் அதீத ஆற்றல் பெறுவதாகவும் மனிதர்கள் நம்புகின்றனர் .மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு வேண்டிய அத்தனை உணவு பொருட்களையும் தாவரங்கள் தருகின்றன. உயிரினங்கள் எல்லாவற்றிலும் முற்பட்ட பிறப்பு தாவர இனத்தைச்

சார்ந்தது ஆகும். பாசிகளும் புல் பூண்டுகளும் தான் பல கோடி உயிரினங்களாக இன்று கிளைத்திருக்கின்றன. இவ்வாறு தாவர வகைகளுள் ஒன்றான கீரை வகைகளை மனிதன் எவ்வாறு பயன்படுத்தி உள்ளான்.

கீரை வகைகள்

கீரை வகைகளில் எண்ணற்ற வகைகள் இருந்த போதிலும் அவற்றை பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தலாம்..

குத்துச்செடி வகை கீரை

செடி வகைக் கீரை

கொடி வகைக் கீரை

மனமுள்ள இலை வகைக் கீரை

கிழங்கினைக் கீரை

மரவகைக் கீரை

குத்துச்செடி வகை கீரை

இவ்வகைக் கீரைச் செடிகள் நிலத்தில் சிறிது உயரம் மட்டுமே வளரக்கூடியது அல்லது உயரம் மிக குறைவாக வளர்ந்து அதிகமான கிளைகளுடன் காணப்படும் இதனை மிகச்சிறு செடிகள் அல்லது குத்துச்செடிகள் என்று குறிப்பிடுகின்றோம் .அரைக்கீரை, சிறுகீரை ,வட்டசாரணை முதலியன இவ்வகை இனத்தைச் சார்ந்தவயாகும்.

செடி வகைக் கீரை

இவ்வகைக் கீரைகள் பொதுவாக ஓரடி முதல் மூன்று அடி வரை வளரக்கூடியவை. மூன்று அடிக்கு மேலும் சில வகைகள் வளர்கின்றன .பொதுவாக இவ்வகைச் செடிகளில் இலைகளை மட்டும் பறித்து கீரையை உணவாக பயன்படுத்துகிறோம் .மூக்கிரட்டைக் கீரை ,வேளைக் கீரை, துத்திக் கீரை முதலியன இவ்வகை செடிகளுக்கு உதாரணமாக இருக்கின்றன.

கொடி வகைக் கீரை

இவ்வகை கீரைகள் பொதுவாக வேளியின் மீது கொடியாகப் படர்கின்றன. சில வகைக் கீரைகள் நிலத்தில் சிறிது உயரம் வளர்ந்து பிறகு நிலத்திலே படர்பவை செடி வகைக் கீரைகளைப் போலவே இவற்றை பறித்து உணவாக பயன்படுத்துகின்றோம். முடக்கத்தான் கீரை, கோவைக்கீரை, கொடி பாலைக்கீரை, வட்டச்சாரணை முதலியன இவ்வகையைச் சார்ந்த கீரை வகைகள் ஆகும்.

மணம் உள்ள இலைவகைக் கீரைகள்

இந்த வகை கீரைகள் உணவுக்கு மணமூட்டுவதாக விளங்குகின்றன. கீரையாக மட்டுமின்றி உணவுக்கு மணமூட்டும் பொருள்களாக பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகை கீரைகளில் மனம் கொடுக்கும் எண்ணெய் சத்துக்கள் நிறைந்து இருக்கின்றன. கொத்தமல்லி, சதக்குப்பை, புதினாக்கீரை போன்றவை இவ்வகைகளைச் சார்ந்ததாக அறிஞர்களால் சுட்டப்படுகின்றன..

கிழங்கினை வகைக்கீரைகள்

கீரைகள் கிழங்கிலிருந்து பெறப்படுபவை இவைகளில் கிழங்குகள் உணவாக பயன்படுத்தப்படுவதோடு இலைகளும் கீரை உணவாக பயன்படுத்தப்படுகின்றன. முள்ளங்கிக் கீரை ,சேப்பங்கிழங்கு கீரை ,பீட்ரூட் கீரை, டர்ப்பணிக்கீரை போன்றவை இவ்வகை இனத்திற்கு சான்றாக அமைகின்றன.

மரவகைக் கீரைகள்

மரவகை கீரைகள் என்றும் நிலத்தில் இருந்து ஆண்டு முழுவதும் பலன் கொடுத்து நிலைத்து பல ஆண்டுகள் பூமியிலேயே வாழக்கூடியவை. முருங்கைக்கீரை அகத்திக்கீரை, இலச்சுகா கொட்டைக்கீரை ,கறிவேப்பிலைக்கீரை போன்றவற்றை இவ்வயில் அடக்கலம்.

உணவில் பயன்படுத்தும் முறை

கீரை வகைகள் சமைத்து சாப்பிடப்படுகிறது.உடம்பில் தசை நார்களை மென்மைப்படுத்தும் ஆற்றல் பெற்றது .இத்துடன் தோல்

முதலியவற்றிற்கு மென்மைத் தன்மையையும் அழகும் பளபளக்கும் கொடுப்பதற்கு உணவோடு சேர்த்து சங்ககால மனிதர்களால் உண்ணப்பட்டுள்ளது.

பாசிப்பயிறு, தட்டப் பயிறு ,கொள்ளு ,முதலியவற்றுடன் இந்தக் கீரை வகைகளைச் சேர்த்து வேக வைத்து சமைத்துள்ளனர். இவ்வாறு வேகவைத்து கீரையை உண்பதனால் கீரையில் புதைந்துள்ள சத்துக்கள் அனைத்தும் பயிர்கள் மூலமாகவும் பெறப்படுகிறது என்பதை சங்ககால மக்கள் உணர்ந்துள்ளனர்.

இதன் மூலம் மக்கள் தனது உடல் சூட்டை தணித்து பசியைத் தூண்டி உணவை ஏற்கும் தன்மை உடையதாக உடலை மாற்றுகின்றது என்பதையும் மருத்துவத்திலும் உணர்ந்து கூறப்பட்டுள்ளது அதனால் சங்க கால மக்கள் கீரையை அதிகம் பயன்படுத்தி உள்ளனர்.

இப்படி கீரைகள் மருத்துவ குணம் உள்ள கீரைகள் என பல வகை கீரைகளை நம்மால் சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது குறிப்பாக வேலைக்கீரை, கரிசலாங்கண்ணி கீரை அரைக்கீரை, கருவேப்பிலை போன்றவை உணவில் மிக முக்கிய பங்கு வகித்துள்ளன.

முடிவுரை

மண்ணில் விளைந்த கீரை வகைகளை நம் முற்கால மனிதர்கள் மிக அழகாக உணவில் பயன்படுத்தி நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தனர். என்பதனை இக்கட்டுரை வழி நம்மால் அறிய முடிகின்றது..

துணைநூற்பட்டியல்

11. ஆனந்தம் வி.வி.வி., தாவர உணவும் இயற்கை நல வாழ்வும், வித்யா பப்ளிகேஷன், சென்னை 1990.

2. ராஜகோபால். ஈணு.பெ.மு, தமிழ் மருத்துவப் பாடப் பயிற்சி நூல், மதுரை சித்த மருத்துவர் குருகுலம், மதுரை, 1970.

3. கணேசன் சே , இலக்கியத்தில் மருத்துவம், கவிதா பப்ளிகேஷன், சென்னை 2009.

4. கிருஷ்ணன் .பெ, தீராத நோய்களும் சித்த மருத்துவம், அன்பரசு பதிப்பவன், திருத்தணி, 1994 .

5. கோவிந்தன். த, பண்டைய மருத்துவமும் பயன் தரும் மூலிகைகளும், திருமகள் நிலையம், சென்னை 1989.

உவமையில் சிறந்தவன் கம்பன்

முனைவர் ச. பிரியா உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை – 117

முன்னுரை : கம்ப ராமாயணம் ஒரு தேன் கூடு என்றால் அது மிகையாகாது; தேன் கூட்டைப் பிழியப் பிழிய வரும் தேன் போல மனித வாழ்வியலின் நுட்பங்களையெல்லாம் தம் கை வண்ணத்தால் பக்தி சிறப்பிலும் , கதைச் சிறப்பிலும் சிறந்து விளங்குகின்ற இராம காதையில் அமைத்து , அழகுக்கு அழகு செய்தாற் போல விருத்தம் என்னும் பா வகையில் சொல் நயம், பொருள் நயம், உவமை நயம் , பிற அணி வகைகள் ,கற்பனை வளம் ஆகியன பொருந்தி வரும்படி, சந்தத்தோடு இயைந்து கம்பர் பாடியதால் தான் ஏனைய மொழி இராமாயணங்களை விடவும் இக்காவியம் சிறந்து விளங்குகிறது எனலாம் ; சந்தனத்தைத் தொட தொட கை மணப்பது போல கம்பராமாயணத்தைப் பயிலுந்தோறும் நெஞ்சமும் இனிக்கவே செய்கிறது.

அவ்வகையில் இந்நூலில் பயின்று வந்துள்ள உவமைகள், கம்பனின் இலக்கண உத்தி முறையையும் அவனது ஆழ்ந்து அகன்ற அறிவின் நுண்மான்நுழைப் புலத்தையும் எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த வாயில்களாகத் திகழ்கின்றன ; " உவமையில் சிறந்தவன் கம்பன்" என்னும் கருத்தின் அடிப்படையில் இந்நூலில் கையாளப்பட்டுள்ள உவமையின் சிறப்பும் அதன் ஆளுமையின் திறம் குறித்தும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரையின் களம் அமைகின்றது.

உவமை : புலவர்கள் தாம் படைக்கும் பொருளினை எடுத்துரைக்க பொருள் விளக்கத்திற்காகவும் சிறப்புக்காகவும் இழிவுக்காகவும் உவமைகளைப் பயன்படுத்தியுள்ளனர் ; அதனடிப்படையில் "உவமவியல் " என தனி இயல் அமைத்து அதன் வழி நான்கு வகையான உவமைகளில் முப்பத்தாறு

உவம உருபுகளை இனங் கண்டிருக்கும் தொல்காப்பியரின் உவமவியல் சார்ந்த அறிவினைக் கம்பரின் படைப்பிலும் காண முடிகின்றது . இதனைத் தொடர்ந்து பிற அணி இலக்கண நூல்கள் கூறும் அணி வகைகளையும் இந்நூலில் ஒப்பிட்டு பார்க்க இடமளிக்கிறது . பிற்கால அணிகளுக்கெல்லாம் தாயணியாக இருக்கக்கூடிய உவமையணி பற்றி மட்டுமே விளக்கயுரைப்பதாகவும் அவற்றுள் ஒரு சில உவமைகளை மட்டும் இக்கட்டுரையில் எடுத்துக் காட்டவும் முற்பட்டுள்ளேன்.

கம்பன் மிகச் சிறந்த ஆய்வாளன் – பண்பாளன் :

கம்பன் தனக்கு முன் தோன்றிய வால்மீகியின் வடமொழி இராமாயணத்தைத் தழுவி இந்நூலைப் படைத்திருந்தாலும் இது தழுவல் இலக்கியமல்ல , சங்க இலக்கியம் போல திருக்குறள் போல தமிழ் மொழியில் படைக்கப்பட்ட மூல நூல் போலவே கம்ப ராமாயணமும் திகழ்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது ; தமிழ் பண்பாட்டினை உணர்த்தி தமிழ் மொழியிலேயே மூழ்கி ஆய்ந்து தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து படைக்கப்பட்ட தமிழரின் பண்பாட்டு பெட்டகமாக கம்பராமாயணம் படிப்பவரை நினைக்க வைக்கிறது . இவ்வகையில் கம்பனை மிகச் சிறந்த ஆய்வாளனாகவும் மொழி பெயர்பாளனாகவும் உணரச் செய்கிறது ;

செருக்கு ஏதுமின்றி தன்னை சிறுமையாளனாக சிறுப் பிள்ளையாக எத்தனாக பித்தனாக இகழ்ந்துக் கூறிக் கொள்ளும் நிலையிலும், தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலின் புகழைப் பாடி பாடி நன்றிச் செலுத்துவதால் சிறந்த பண்பாளனாகவும், சந்த நயத்தில் கற்பனை என்னும் தேனைச் சேர்த்து சொல்லின்பத்தில் நம்மை யெல்லாம் மூழ்கச் செய்த மிகச் சிறந்த கவிஞனாகவும் , பொருள் நயத்தை உணர்த்த உவமை நயத்தால் படிப்பவரின் உள்ளத்தையெல்லாம் கொள்ளையடிக்கச் செய்த கம்பன் மிகச் சிறந்த உவமையாளனாகவும் கல்வியாளனாகவும் காட்சி அளிக்கின்றான் ; கம்பனின் புலமையை

எண்ணியெண்ணி மகிழவே ஒரு பிறவி போதாது என்னும் உண்மையைக் கம்பனைக் கற்குந் தோறும் உணர வைக்கிறான் .

நாட்டுப் பழமொழிகள், நாடக வழக்கு , உலக வழக்கு , உலகத்து மக்களின் பயன்பாட்டுப் பொருட்கள் ,செடி கொடிகள், பறவைகள் மற்றும் விலங்குகள் இவற்றின் குணங்களை மனிதனின் இயல்போடு ஒப்பீடு செய்ததில் மிகச் சிறந்த உளவியலாளராகவும், இவற்றையெல்லாம் உவமானமாக பயன்படுத்திய அறிவு நிலையில் ஒப்பீட்டுத் தன்மையில் சிறந்த படைப்பாளனாகவும் நம் நெஞ்சினில் என்றும் வாசம் செய்கிறான். ”கல்வியில் பெரியவன் கம்பன்” என்னும் வாக்கிற்கு தலை வணங்கி நிற்க செய்கிறான்.

போர்க்களக் காட்சியைச் சித்தரித்துக் காட்டுவதில் நாடகக் கலைஞனாகவும், பல காட்சியமைப்புகளை ஓவியக் கூடமாகச் சித்தரித்துக் காட்டுவதில் சிறந்த ஓவியனாகவும், கற்போரைப் பக்தி வெள்ளத்தில் மூழ்கடிக்கச் செய்யும் போது மிகச் சிறந்த இராம பக்தனாகவும், அறநெறியினை உணர்த்தும் பொழுது மிகச் சிறந்த அறநெறியாளனாகவும் காட்சி தருகின்றான்; சொற்களைக் கையாள்வதில் ஆகச் சிறந்த கலைக் களஞ்சியமாகவும் காட்சி தருகிறான்

இவ்வாறாக கம்ப ராமாயண நூலினைக் கற்குந் தோறும் கம்பனின் பல்வேறு திறன்களால் நம்மையெல்லாம் கட்டிப் போட்டாலும் அவனது உவமைத் திறனைக் கண்டு வியந்து , “கம்பன் ஓர் உவமையாளன்” என்னும் தலைப்பில் கட்டுரை அளிக்க முயன்ற போது அவனது உவமை நயங்களையெல்லாம் கண்டு உள்ளம் சிலிர்த்து வியந்தும் போனேன் என்று சொன்னால் அது மிகையாகாது. கம்ப ராமாயணம் முழுமையும் பொருள் புலப்பாட்டுக்காக கற்பனைச் சிறகை விரிக்கச் செய்து மிகச் சிறந்த உவமைகளைக் கம்பர் கையாண்டுள்ளார் ; தொல்காப்பியர் கூறுவது போல உலகத்தார் ஏற்கும் வகையில் உவமைகள் கையாளப்பட்டிருப்பது சிறப்புடையதாக இருக்கின்றது.

நூலின் தொடக்கம் முதற்கொண்டு நூலின் இறுதிவரையிலும் கம்பரின் உவமை நயங்கள் கொட்டிக் கிடக்கின்றன . அவற்றுள் இயற்கையழகினை வர்ணிப்பதிலும், கதாபாத்திரங்களின் தன்மையையும் அதன் சிறப்பையும் எடுத்துக் காட்டும் உத்தி முறையிலும் அழகிய நுணுக்கமான உவமைகளைக் கம்பர் கையாண்டுள்ளார். அவற்றுள் சில ,

பாற்கடலும் பூனையும் : கம்பர் அறநெறியில் மாறுதலின்றி வெற்றி வாகைச் சூடிய இராம பிரானுடைய திருவரலாற்றினை அதிலுள்ள ஆசை காரணமாக நான் மொழிகிறேன் ; இதில் இராமனின் பெருமை , புகழ், சிறப்பு, இராம நாமத்தை உச்சரிப்போர் அடையும் பெரும்பேறு என யாவற்றையும் அடக்கிக் கூறி விட முடியாது . குற்றமில்லாத இராமனை பாற்கடலோடு ஒப்பிட்ட கம்பர் , கடல் அளவு பெருமையுள்ள இராமனின் பெருமையினை விளக்க முனைவதென்பது , ஒரு பூனையானது பாற்கடல் முழுமையும் சுவைத்துப் பருக வேண்டும் என்னும் ஆசையைப் போன்று இது விளங்கும் என்று கம்பர் தன்னை சிறு விலங்காகிய பூனையோடு (பூசை) ஒப்பிட்டுக் காட்டுகின்றார் . அவையடக்கப் பாடலிலேயே தன்னை தாழ்த்திக் கொண்டு இராமனின் பாதம் தொட்டு வணங்கி நூலைப் படைப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

"ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன் மற்றிக்
காசில் கொற்றத்து இராமன் கதை யரோ"
-(கம்ப.அவையடக்கப் பாடல் :4)

என்பதால் கல்வியில் பெரியவனாகப் போற்றப்படும் கம்பரின் தன்னடக்கம் ஒவ்வொரு மனிதர்க்கும் வேண்டப்படுகிறது.

நொய்ய சொல்லன் : வடமொழியில் இராமாயணம் இயற்றிய வால்மீகியின் சொல்லாற்றலின் ஏற்றமும் பெருமையும் கூறி தன் சொல்லை 'நொய்ய சொல்' (நொய் – எளிமை ; எளிய சொல்) என்று தன்னடக்கத்தோடு கூறுகிறார் ; தவ முனிவர்கள் சொல்லும் சினச்சொல்

தவறாது தாக்குதல் போன்று பெருமையுடைய இராமனின் வரலாற்றை உரைத்த தவ முனிவனான வால்மீகியின் சொல் 'தவன் சொல்' (தவன் – உயர்ந்த ; உயர்ந்த சொல்) என்றும், அவரைத் தழுவி தான் படைக்கயிருக்கும் இராம காதை எளிய சொற்களால் படைக்கப்பட்டுள்ளது என்று 'விருத்தமென்னும் ஒண்பாவிற்கோர் கம்பன் ' தன்னை பணிவாக எடுத்துக் காட்டியிருப்பது கற்றவர்க்கேயுரிய ஒழுக்கத்தைக் காட்டுகிறது. இதனை, "நொய்தின் நொய்ய சொல் நூற்கலுற் றேன் எனை" (கம்ப.அவையடக்க பாடல்.5)என்னும் பாடலடியால் அறியலாம். மேலும், இலக்கண அறிஞர்கள் பலரும் தான் படைக்கும் இப்படைப்பில் பிழை இருந்தால் தன்னை மன்னிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றார்.

"துறை யடுத்த விருத்தத் தொகைக் கவிக்கு
உறை யடுத்த செவிகளுக் கோதில் யாழ்
நறை யடுத்த அசுணநன் மாச் செவிப்
பறை யடுத்தது போலும் என் பா அரோ"-

(மேலது.பாடல்.7)

பல விகற்பங்களையுடைய விருத்தப் பாடல்களைக் கேட்டு மகிழும் அறிஞர்களுடைய செவிகள் இனிய யாழிசைக் கேட்டு மகிழும் 'அசுணம்' (பறவை/ விலங்கு) என்னும் உயர்ந்த விலங்குக்கு (மாச் செவி என்பதால் , இங்கே அசுணம் என்னும் உயிரினத்தை விலங்காகக் கொள்ளலாம். மா – விலங்கு) நிகராகும் என்கிறார். அத்தகைய விலங்குக்குத் துன்பம் நேருமாறு மிகுந்த பறையொலி கேட்பது போல என்னுடைய பாடல்கள் இருக்குமோ? என்று தன் பாடல்கள் உயரிய சந்தத்தில் அமையாமல் போகுமோ? என்று அச்சம் கொண்டு கேட்கிறார் ; மேலும், அவ்வாறு பிழைகள் இருப்பின் பித்தனும் பேதையரும் சொல்லும் வார்த்தைகளை ஆராயாமல் பக்தி பரவசத்தால் இராமன் மீது கொண்ட பக்தியால் , நான் உரைக்கும் இவ் விருத்தப்பாக்களை ஆராயாமல் முத்தமிழ் அறிஞர்கள்

ஏற்றுக் கொள்ள வேண்டுமென பணிவுடன் கேட்டுக் கொள்ளும் திறத்தை,

”முத்த மிழ்த் துறை யின் முறை போகிய
உத்த மக்கவி கட்கொன்று உணர்த்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ”-

(மேலது.8)

என்னும் பாடலால் அறியலாம். மேலும் தன் படைப்பில் தவறுகள் ஏதேனுமிருப்பின் அதனைச் சிறுபிள்ளைச் செய்த செயல் போல எண்ணி, தன்னை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதை,

”அறையும் ஆடரங் கும்படப் பிள்ளைகள்
தரையிற் கீறிடில் தச்சருங் காய்வரோ
இறையு ஞானமி லாத என் புன்கவி
முறையின் நூலுணர்ந் தாரும் முனிவரோ”.-(மேலது.9)

என்னும் பாடலால் கேட்டுக் கொள்கின்றார் . விசாலமான அறைகளும் நடனம் ஆடுகின்ற அரங்குகளும் உள்ள நிலத் தரையில் சிறு பிள்ளைகள் கீற்றுக்களை வரைந்தால் சிற்ப நூலில் வல்லவர்கள் இச்சிறுவர்கள் சிற்பக் கலைக்குப் புறம்பாக வரைந்தார்கள் எனச் சீற்றம் கொள்வார்களோ? கொள்ள மாட்டார்கள். அது போலவே பேரறிஞர்களும் என்னுடைய கவிதைகளை “ஞானமில்லாது செய்தான்” என்று என் மீது சினங் கொள்ள மாட்டார்களென்று உரைப்பதால், கம்பனின் அடக்க உணர்வு சான்றோர்க்கேயுரிய அணியாகத் திகழ்வதை உணர முடிகின்றது. இதனைத் தான் வள்ளுவரும், பெருமைக்குரியவர்கள் என்றும் பணிவோடு இருப்பார்கள் என்றும் சிறுமைக்குரியவர்கள் எப்போதும் தம்மையே வியந்து புகழ்ந்து கொள்வார்கள் என்று பணிவின் சிறப்பினை,

“பணியுமாம் என்றும் பெருமை ; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து” – (குறள்.978)

என்னும் குறளில் எடுத்துக்காட்டுகின்றார். வள்ளுவர் கூறும் சான்றோரின் பெருமைக்குக் கம்பர் இலக்கணமாகத் திகழ்வதை அறிய முடிகின்றது.

மருத நிலத்தின் சிறப்புரைத்தல் : மருத நிலத்தின் சிறப்பினை உணர்த்த வந்த கம்பர், மருத நிலத்தினை அரசனாக உருவகித்து அவன் இனிது மகிழ்ச்சியுடன் வீற்றிருத்தலையும் , அவன் கொலு மண்டபத்தில் காலை ஞான்று, அரசாட்சி புரிதலையும் ஏத்தி உரைத்துள்ளார். சோலையில் மயில்கள் ஆடுதல் , மேகம் முழங்கி மழைத் துளிகளைச் சொரிய விளங்கும் கால நிலைகளை அழகுப் பட உவமித்துக் கூறியுள்ளமை இயற்கை மீது கம்பர் கொண்ட காதலை உவமித்துக் காட்டுகிறது.

"தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்துநோக்கத்
தெந்திரை எழினி காட்டத்
தேம்பிழி மகர நாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ

.-(கம்ப.நாட்டுப்.36)

பொய்கையில் விளங்கும் தாமரைத் தடாகத்தின் பக்கங்களில் விளங்கும் பசுமையான சோலைகளில் மயில்கள் அசைந்து நடனம் ஆடவும், செந்தாமரை மலர்கள் விளக்குகளை ஏந்துமா போன்று மலர்ச்சியை நல்கவும் , மேகங்கள் முழவு இயம்பவும் , குவளை மல்ர்கள் மங்கையர் விழிகளைப் போல மலர்ந்து நோக்கவும், தெளிந்த நீரலைகள் திரைச்சீலை என நயமுடன் அசைந்து காட்டவும் , இனிய தேனை ஒத்த மகர யாழின் இசை போன்று வண்டுகள் ரீங்காரம் செய்ய , மருதம் என்கிற அரசன் இனிது வீற்றிருந்தான்.

மகளிரின் அழகுக்கு ஒப்புமை : மருத நிலத்து வயல்களில் உழவுத் தொழில் செய்யும் பெண்களின் உடலுறுப்புகளை அம்மருத நிலத்தில் பூத்துள்ள பல மலர்களுக்கு ஒப்புமைப்படுத்தியுள்ள பாங்கு சிறப்புக்குரியது. அப்பாடல்,

"பண்கள் வாய் மிழற்றும் இன்சொல்
கடைசியர் பரந்து நீண்ட
கண் கைகால் முகம் வாய் ஒக்கும்
களையலாற் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர்
களைகிலாது உலாவி நிற்பார்
பெண்கள் பால் வைத்த நேயம்
பிழைப்பரோ சிறியோர் பெற்றால்". –

(கம்ப.நாட்டுப்.42)

என்பதாகும். உழவர் பெண்களின் வாயானது மெல்லப் பண்களை இசைத்து விளங்க , அவர்தம் கண்களும், கைகளும் கால்களும் முகமும், வாயும், கருங்குவளை , தாமரை, ஆம்பல் என்னும் மலர்களை ஒத்திருந்தன ; அவர்கள் மீது காதல் கொண்டவர்களாய் மதுவுண்டு மயங்கிய நிலையில் அவ் வுழவர்கள் , வயல்களின் ஊடே விளங்கும் அம்மலர்களைத் தம் காதலியர் கண்களாகவும் கை, கால் , முகம், வாய் எனவாகவும் கருதிக் களை பறிக்காது உலாவினர் . மகளிர்பால் அன்பு வைத்த இளைஞர்களின் நிலையினை மருத நிலத்து மலரோடும் அம்மலரினை வட்டமிடும் வண்டோடும் ஒப்பிட்டுக் காட்டும் கம்பரின் கவித் திறனை வியக்காதவர் தானுண்டோ .?

மகளிரும் வண்டினமும் : பருவ மங்கையர் தம் தாமரைப் போன்ற முகத்திலுள்ள மையுண்ட கண்ணைப் பெண் வண்டெனக் கருதிய ஆண் வண்டுகள், அதன்பால் காமுற்று நாள்தோறும் அம்மருத நிலத்தில் தங்கி விட்ட செய்தியினை,

" பருவ மங்கையர் பங்கய வாள்முகத்து

உருவ உண்கணை ஒண்பெடை யாம் எனக்

கருதி அன்பொடு காமுற்று வைகலும்

மருத வேலியின் வைகின வண்டரோ".

(நாட்டுப்படலம்.55)

என்னும் கலி விருத்தப்பாவால் அறியலாம்.

மகளிரும் அன்னப் பறவையும் :

"சேலுண்ட ஒண்க ணாரின்

திரிகின்ற செங்கால் அன்னம்" –(நாட்டுப்படலம்.45)

வயல்களில் உழவுத் தொழில் செய்யும் மகளிரின் நடையைக் கண்ட அன்னப் பறவை இப்பெண்களிடம் நடைப் பயில வந்ததாகவும் ,அந்த அன்னப் பறவைகளானது , தன் கன்றினை நினைத்த மாத்திரத்தில் பால் சொரியும் எருமைகளின் பாலை அருந்தி விட்டு தாமரை மலரில் உறங்கத் தொடங்க , அப்பண்ணையிலுள்ள தவளைகள் எழுப்பும் குரல் தாலாட்டுப் பாடலை இயம்புவது போல இருந்தது என்கிறார் கம்பர் .

மேகமும் எருமையும் : கம்பர் மருத நிலத்தில் கொட்டிக் கிடக்கும் இயற்கை அழகினைக் காட்சி படமாக்கி நம் கண்முன் கொண்டு வருவதில் வல்லவராக இயற்கையின் காதலராகவே நமக்கு தென்படுகிறார். வானத்திலிருந்து மழைத் தாரைகள் சொரிந்து நெற்பயிர் வளர்தலைப் போன்று , இங்கு மேகம் போன்ற கரிய நிறமுடைய எருமைகள் வெண்மையான பாலை மழைத் தாரை போல் சொரிகின்ற தன்மையை உரைக்கும் உவமை நயம் இன்புறுத்தக்கது.

"ஈர நீர்படிந்து இந்நிலத் தேசில

கார்கள் என்ன வருங்கரு மேதிகள்

ஊரில் நின்ற கன்று உள்ளிட மென்முலை

தாரை கொள்ளத் தழைப்பன சாலியே".-

(நாட்டுப்படலம்.57)

என்னும் பாடலடிகளால், கரிய மேகத்தை எருமையின் நிறத்திற்கும் மழைத் தாரைக்கு வெண்மை நிற பாலும் ஒப்புமையாயின.

தேனை நுகரும் மலர் போல : வயல்களிலுள்ள நெற்கதிர்களையும் நறுமணம் கமழும் பொழிலின் கண் மேவும் மரங்களிலுள்ள முதிர்ந்த கனிகளையும், கொல்லைப் புறங்களில் விளைவனவாகிய துவரை முதலிய பருப்பு வகைகளையும், படர்ந்து வளரும் கொடி வகைகள் தரும் பொருள்களையும் , குழித் தோண்டி நட்டுப் பயிராகும் மஞ்சள் , இஞ்சி போன்ற பொருள்களையும், இம்மள்ளர்கள் மலரிலிருந்து தேனை நுகரும் வண்டினம் போல கொள்வார்கள் என்கிறார் கம்பர்.

இதனை , ”மதுவள மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்”என்பதனால் அறியலாம். இவ்வாறாக வளங்கொழிக்கும் மருத நிலத்தை மட்டுமல்லாது பேய் உடல் போல வெடித்துச் சிதறிய பாலை நிலத்தையும் வருணிக்கும் திறன் கம்பரின் கவித் திறனுக்கு மேலும் ஒரு சான்று.

பாலை நில வருணனை : பாலை நிலமானது வெயிற் காலம் தவிர வேறு மழை முதலான காலம் எதனையும் அறியாமையால் அந்நிலத்தைக் காணும் அக்கினி தேவனின் நெஞ்சமும் சுடும் ; அந்நிலத்தைப் பார்த்த நேரத்தில் அவனது விழியும் வெந்து போகும் என்கிறார்.

”பரிதி வானவன் நிலம் பசையறப் பருகுவான்
விருது மேற் கொண்டுலாம் வேனிலே யல்லதோர்
இருது வேறு இன்மையால் எரிசுடர்க் கடவுளும்
கருதின் வேம் உள்ளமும் காணின் வேம் நயனமும்”.

- (தாடகை வதைப் படலம் : 346)

என்னும் பாடலால் பாலை நிலத்தின் தன்மையை ஒருவாறு அறிய முடிகின்றது . மேலும் பாலை நிலத்தின் கொடுமையினைப் பற்றிக் கூறும் போது , அந்த நிலப் பகுதியிலுள்ள வெப்பத்தை உரைத்தால் நாக்கு வெந்து போகும் ; உலகம் முழுமையும் மூடி மறைக்கும் இருளும் வெந்து போகும் ; வான் முகடும் வெந்து போகும்; உதயமாகும் சூரியனும் வெந்து போவான் ; அவ்விடத்தில் தோன்றும் மழை , மின்னல் , இடி போன்றவையும் வெப்ப மிகுதியால் தீய்ந்து போகும் என்கிறார் .

யானையும் பாம்பும் : வெப்ப மிகுதியால் முழக்கம் செய்கின்ற யானையானது , நிழலை நாடித் திரிந்து எங்கும் கிடைக்காமையால் கொடிய பசியோடு புரண்டும் வாயைத் திறந்து கொண்டும்ம் வாடுகின்ற பாம்பின் வாய்க்குள் இதுவே நிழல் என்று புகும்.இதனை,

"புழுங்குவெம் பசியொடு புரளும் பேரரா
விழுங்க வந்து எழுந்து எதிர் விரித்த வாயின் வாய்"
-(மேலது.352)

என்னும் வரிகளால் அறியலாம்.

கரிய மேகமும் கரிய காகமும் : பாலை நிலத்தின் வெப்ப மிகுதியை பொறுக்கமாட்டாமல் வானின் கண் தவழும் கரிய மேகங்களும் வடவைத் தீயென வாட்டும் பெருந் தீயால் கரிந்து வீழ்ந்தன. இக்காட்சி கரிய காகங்களும் யானைகளும் கரிந்து விழுந்தன போன்று இருந்ததாக ,

"ஏகவெங் கனலரசு இருந்த காட்டினில்
காகமும் கரிகளும் கரிந்து சாம்பின
மாகவெங் கனலெனும் வடவைத் தீச்சுட
மேகமும் கரிந்து இடை வீழ்ந்த போலுமே".
(மேலது. 353)

என்னும் பாடலால் எடுத்துரைக்கின்றார். தொல்காப்பியர் குறிப்பிடும் வினையின் அடிப்படையில் உவமைகள் ஆளப்பட்டுள்ளமையும் புலனாகின்றது.

நெறியின் புறம் செலாக் கோசலம் : பால காண்டத்தின் முதற் பகுதியாகிய ஆற்றுப் படலத்தில் கோசல நாட்டிற்கு அணியாகத் திகழ்கின்ற 'சரயு நதி' பற்றியும் அந்நதியின் சிறப்புப் பற்றியும் கூற வந்த கம்பர், பல உவமைகளை அந்நதியினில் பாய்ந்தோடச் செய்துள்ளார்.

"ஆச லம்புரி ஐம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பு நெறியின் புறம் செலாக்
கோச லம்புனை யாற்றணி கூறுவாம்".

-(கம்ப.ஆற்றுப்படலம்.13)

என்கிறார். இராம பிரான் ஏகபத்தினி விரதன் என்னும் மெய் திகழ் கூற்றினையொட்டி அந்நாடாகிய கோசலமே பிறன்மனை நோக்காத பேராண்மை கொண்டு திகழ்தலை இங்கு, "நெறியின் புறம் செலாக் கோசலம்" என உணர்த்துகிறார்.

கண்ணை இமைக் காப்பது போல : விசுவாமித்திர முனிவன் தேவர்களின் பொருட்டுச் செய்த அருமையான வேள்வியானது, பிறரால் எண்ணிப் பார்ப்பதற்கும் அரியதாய் விளங்கியது. ஆறு நாட்கள் நடைப்பெற்ற இவ்வேள்வியை நிலவுலகத்தைக் காக்கும் தசரனின் மைந்தர்கள் கண்ணை இமைக் காப்பது போல் காத்தார்கள். இதனை,

"எண்ணுதற்கு ஆக்கரிது இரண்டு மூன்று நாள்
விண்ணவர்க்கு ஆக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்".

-(கம்ப.வேள்விப் படலம்.458)

என்பதால் அறியலாம். இத்தகு சிறப்புடைய வேள்வி எண்ணுதற்கும் அரியது. பிறரால் செய்வதற்கும் அரியது என்பதால், விசுவாமித்திரனை யன்றி வேறு எவராலும் செய்வதரிது என்பது தோன்ற, "எண்ணுதற்கு ஆக்க அரிது" என உரைக்கப்பட்டது.

இராமன் வேள்விச் சாலையின் நான்கு புறத்திலும் சுற்றிக் கண்டு கண்காணிப்பு செய்யவும், இலக்குவன் வேள்விச் சாலையின் முகப்பில் நின்று கொண்டு அரக்கர்களால் இடையூறு வராதபடி காவல் காத்து நின்றான் ; இராமன் வலமாகச் சுற்றி வந்து இலக்குவனைத் தட்டி எச்சரிக்கும் பாங்கு மேல் இமைக் கீழ் இமையைத் தொட்டுக் கண்ணைப் பாதுகாக்கும் தன்மையால் இராமன் மேல் இமைப் போல் அசைந்தும் உலாவியும், இலக்குமனன் கீழ் இமைப் போல் நிலைத்து ஓரிடத்தில் நின்றும் கண்ணெனும் வேள்வியைக் காத்தனர் என்கிறார் கம்பர். இவர்கள் நிலவுலகத்தைக் காக்கும் இயல்புடையவர்கள் ஆதலால்

இச்செயல் இவர்களுக்கு எளிமையும் திறலுடைமையும் ஆகும் என்பதனையும் எடுத்துரைக்கின்றார்.

படைக்கலன்கள் இராமனை அடைதல் : ஒரு பிறவியில் செய்த நற்செயலின் பயனானது அடுத்த பிறவியில் தாமாகவே வந்த டையும் என்னும் கருத்தை,

> **"ஆறிய அறிஞன் கூறி அளித்தலும் அண்ணல் தன்பால்**
> **ஊரறிய உவகை யோடும் உம்பர்தம் படைகள் எல்லாம்**
> **தேறிய மனத்தான் செய்த நல்வினைப் ப்யன்கள் எல்லாம்**
> **மாறிய பிறப்பில் தேடி வருவபோல் வந்த தன்றே".**
>
> (கம்ப.வேள்விப் படலம்.419)

என்னும் பாடல் வரிகளால் அறியலாம். காமம், குரோதம், மோகம், உலோபம், மதம், மாச்சரியம் ஆகிய ஆறு குற்றங்களும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களின் குற்றங்களும் தணிந்த விசுவாமித்திரன், மூன்று காலங்களின் செயல்களையும் அறிந்தவனாகி இராம பிரானுக்குத் தெய்வப் படைகளை உரிய மந்திரங்களுடன் ஓதி வழங்கிய அளவில், அவை தெளிந்த மனத்தியுடையவன் செய்த நல்வினைப் பயன் அடுத்த பிறவியில் தாமாகவே மாறி வருதலைப் போன்று அக்கலைகள் யாவும் இராமனை அடைந்தன என்கிறார். இங்கே வினைகளை உவமையாக்கியுள்ள திறம் போற்றுதலுக்குரியது.

> **"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
> **எழுமையும் ஏமாப்பு உடைத்து". – (குறள்.398)**

என்னும் குறளின் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

மாரீசனின் நிலை : கானகத்தில் தனியாக இருக்கும் சீதைக்கு மாயமான் காட்டி அவளை ஏமாற்ற வேண்டுமென இராவணன் மாரீசனைப் பணித்த பொழுது, மாரீசன் அடைந்த துயர நிலையினை , மீன்கள் வாழும் நஞ்சு கலந்த நீருக்கு உவமையாகக் காட்டுகின்றார். மீன்கள் வாழும் தேங்கிய நீரில்

நஞ்சு கலந்தால் மீன் இறக்க நேரிடும் ; நீர் நச்சுத் தன்மை அடைந்து விட்டது என உணர்ந்து நீரை விட்டு வெளியேறினால் நீரில்லாமல் மீன் வாழாது. அது போல அந்த மீனின் நிலையைத் தான் அடைந்ததாக மாரீசன் புலம்புவதை சிறந்த பொருத்தமான உவமை வாயிலாக கம்பர் எடுத்துக்காட்டுகின்றார். மாரீசனின் மனநிலைக்கு மீனும் , தன்னைச் சார்ந்தவரை அழிக்கும் இராவணனின் தீய குணத்திற்கு நஞ்சும் உவமைகளாயின .

"வெஞ்சுற்றம் நினைந்து உகும் வீரரை வேறு
அஞ் சுற்று மறுக்குறும் ஆழ் குழி நீர்
நஞ்சு உற்றுழி மீனின் நடுக்குறுவான்
நெஞ்சு உற்றது ஓர் பெற்றி நினைப்பு அரிதால்". _

(கம்ப. மாரீசன் வதைப் படலம்)

என்னும் பாடலால், மீன் தங்கிய நீர்நிலை நஞ்சானது என்னும் உவமை, இராவணன் மனதில் கலந்திட்ட நஞ்சினை எடுத்துக்காட்டுகிறது. நஞ்சு கலந்த நீரில் துடிக்கும் மீனின் நிலை இராவணனோடு இருக்கும் மாரீசனின் மனநிலைக்கு உவமையாயிற்று.முடிவாக,

இவ்வாறாக கம்ப ராமாயணம் நூல் முழுமையும் உவமையின் ஆளுமைகள் நிறைந்துள்ளன. அவற்றுல் ஒரு சில உவமைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தெவிட்டாத தேனடையின் ஒரு துளி தேனாகவே இக்கட்டுரை அமைகின்றது. நூல் முழுமையும் ஆளப்பட்டுள்ள உவமைகள் குறித்து பல ஆய்வுகள் செய்ய இந்நூல் இடம் தருகிறது என்றால் அது மிகையாகாது.

துணை நூல்கள் :

1.கம்ப ராமாயணம் மூலமும் உரையும், திருமகள் நிலையம் , சென்னை.முதற் பதிப்பு : மார்ச்.2008.

2.திருக்குறள் – மக்கள் உரை, முனைவர் கு. மோகனராசு, மணிவாசகர் நூலகம், சென்னை. 18 ஆம் பதிப்பு : செப்.2007.

Redefining Boundaries: Emerging New Media Artists in India and the Rise of Digital Expression in 2025

Mr.Kalaiselvan. S, HOD and Assistant Professor,
Dept. of Animation,
Vels Institute of Science Technology and Advanced Studies, Chennai-117.

Abstract

In 2025, India's contemporary art landscape is experiencing a dynamic shift driven by the rise of emerging new media artists who are redefining artistic expression through technology and innovation. Artists such as Deena Pindoria, Akshay Bhoan, and Ritika Sharma are gaining significant recognition for their cutting-edge work that blends digital tools with cultural narratives. Their practices reflect a growing trend where traditional boundaries of visual art are being challenged and expanded. Furthermore, initiatives like the Diriyah Art Futures (DAF) Emerging New Media Artists Programme are providing crucial platforms for Indian artists to engage with global digital art movements. This article explores the contributions of these pioneering figures and examines how programs like DAF are shaping the future of new media art in India.

1. Introduction

The Indian visual art scene has traditionally drawn from a rich reservoir of history, mythology, and craftsmanship. However, in the last decade, a noticeable shift has occurred as artists begin to incorporate digital tools and new technologies into their creative processes. With the increasing accessibility of virtual reality, augmented reality, artificial intelligence, and blockchain platforms, a new generation of Indian

artists is emerging—one that challenges the conventions of physical media and embraces the potential of the digital realm. In 2025, this movement has gained critical mass, marking a transformative era for contemporary Indian art.

2. Understanding New Media Art in the Indian Context

New media art is an umbrella term encompassing artworks created with or mediated through digital technologies. This includes interactive installations, video art, digital painting, AI-generated visuals, and NFT-based artworks. In India, the adoption of new media was initially slow due to limited infrastructure and access. However, recent technological advancements, affordable digital tools, and global exposure have accelerated its adoption.

Indian artists are now not only participating in international dialogues but also bringing localized, culturally rooted perspectives to global platforms.

3. Emerging Voices: Artists to Watch in 2025

Deena Pindoria

Known for her immersive digital environments, Deena Pindoria combines traditional Indian textile patterns with generative algorithms. Her installations often explore diasporic identity and the emotional residue of migration. Her recent work, "Digital Sareescape," layers AR overlays on handwoven motifs, allowing viewers to navigate between physical heritage and virtual reimaginings.

Akshay Bhoan

Akshay Bhoan’s transition from photography to digital storytelling reflects a deep engagement with social themes.

His interactive video installations use facial recognition and motion sensors to explore urban alienation and personal data ethics. His series "City.exe" presents the viewer with dynamic urban scenes that respond in real-time to audience movement, critiquing surveillance culture.

Ritika Sharma

Ritika Sharma brings a unique feminist perspective to the digital art sphere. Her VR-based installations place the viewer inside emotionally charged environments drawn from Indian domestic life. In her celebrated piece "Inside the Kitchen," viewers navigate a hyperreal domestic space that critiques gender roles through symbolic interaction with everyday objects.

4. The Role of Diriyah Art Futures and Other Initiatives

International programs like the Diriyah Art Futures (DAF) Emerging New Media Artists Programme have played a pivotal role in promoting Indian talent on global platforms. DAF, launched as a cross-cultural digital arts incubator, provides mentorship, funding, and technical training for artists working at the intersection of art and technology. Several Indian artists, including Bhoan and Sharma, have benefited from such initiatives, gaining international residencies and exposure.

Additionally, institutions like the Khoj International Artists' Association and the Serendipity Arts Foundation continue to host residencies, workshops, and festivals that encourage experimentation with new media. These platforms are helping to build a sustainable ecosystem for digital art in India.

5. Cultural Identity and Technology: A New Synthesis

What makes this new wave of Indian digital artists distinct is their ability to interweave local identities with global technologies. Rather

than abandoning tradition, these artists reinterpret Indian cultural motifs, rituals, and social issues through digital mediums. This approach offers a layered narrative—where ancestral memory coexists with digital innovation.

For instance, AI-generated visuals based on folk art patterns or sound installations using field recordings from Indian villages demonstrate how new media can deepen, rather than dilute, cultural expression.

6. Challenges and Future Directions

Despite growing visibility, challenges remain. These include limited public funding, lack of digital infrastructure in rural and semi-urban regions, and inadequate archiving of digital works. Furthermore, institutional recognition of new media art in India is still evolving, with traditional galleries often reluctant to exhibit time-based or interactive works.

However, the future is promising. With increasing collaborations between artists, technologists, and academic institutions, and the rise of blockchain-backed art markets like NFTs, new media art in India is poised for exponential growth. Government-backed digital initiatives under the "Digital India" umbrella may also indirectly benefit artists in this domain.

7. Conclusion

The year 2025 marks a significant turning point for new media art in India. Artists like Deena Pindoria, Akshay Bhoan, and Ritika Sharma exemplify how technology can be used not just as a tool, but as a medium to tell compelling, culturally nuanced stories. As platforms like the Diriyah Art Futures Programme continue to support innovation, India's digital art future looks vibrant and globally interconnected. This

convergence of technology and tradition is redefining what it means to be an Indian artist in the 21st century

REFERENCES

1. "Art and Technology in India" Author: Nalini Malani Publisher: Marg Publications

2. "Contemporary Indian Art: Other Realities" Author: Yashodhara Dalmia ,Publisher: Marg Foundation

3. “New Media Art" Author: Mark Tribe & Reena Jana, Publisher: Taschen

4. "Digital Art" Author: Christiane Paul, Publisher: Thames & Hudson

The Art of Storyboarding: A Research Perspective

Mr.A.Kalimuthu. MFA (PhD), Assistant professor , Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS), Chennai-117.

Abstract

Storyboarding is a crucial pre-production tool used across the film, animation, video game, and advertising industries. It functions as a visual blueprint that maps out the narrative flow, visual composition, timing, and transitions between scenes. This paper explores the historical development, theoretical frameworks, techniques, and contemporary practices in storyboarding. It examines the storyboard's role in bridging the gap between script and visual execution, analyzes its evolution with digital tools, and assesses its significance as both an artistic and communicative medium. Through a review of literature and case studies, the study emphasizes the storyboard's interdisciplinary value and its ongoing relevance in modern visual storytelling.

Introduction

Storyboarding is often referred to as the visual scripting of narrative media. Originating in the early 20th century with studios like Walt Disney, storyboarding has grown from a simple sequence of sketches into a sophisticated planning method used in various media industries. Storyboards serve as a communication tool between directors, cinematographers, animators, production designers, and editors. With the rise of digital tools, storyboarding has evolved into a hybrid discipline involving art, design, narrative theory, and technology. This research investigates the art and methodology of storyboarding, highlighting its foundational role in the creative process.

Discussion

Historical Evolution of Storyboarding: The practice of storyboarding began in the 1930s with Disney Studios, most notably used for planning Steamboat Willie and Snow White and the Seven Dwarfs. Early storyboards were large panels pinned on walls, reviewed and edited collaboratively. Over time, this practice became a standardized part of production pipelines in both animation and live-action filmmaking.

Artistic and Narrative Techniques: Storyboarding combines illustration, graphic design, and cinematic language. It uses shot types (close-up, medium shot, wide shot), camera movements (pan, tilt, zoom), and transitions (cuts, dissolves, wipes) to pre-visualize how a story unfolds. Artists must understand pacing, framing, spatial relationships, and emotional beats. A well-crafted storyboard balances clarity with creativity, serving both technical and aesthetic purposes.

Digital Transformation: With software like Storyboard Pro, Photoshop, and Blender, artists can create storyboards that incorporate 3D modeling, animatics, and real-time feedback. Digital tools allow for collaborative cloud-based workspaces, version tracking, and integration with post-production tools. This has increased efficiency while also expanding the creative possibilities for pre-visualization.

Interdisciplinary Applications: Beyond film and animation, storyboarding is used in UX design, instructional design, game development, and advertising. In education, storyboarding fosters visual literacy, critical thinking, and narrative skills. In business, it aids in pitch presentations and product design.

Challenges and Future Directions: One challenge is maintaining the balance between artistic vision and production constraints. Another is

adapting to rapid technological changes while retaining the core communicative power of hand-drawn or sketched visuals. The future may see greater integration of AI, VR, and interactive storyboarding platforms.

Visual Storytelling in Ancient and Prehistoric Periods

Visual storytelling is one of humanity's earliest and most universal forms of communication, emerging long before the invention of writing. In prehistoric times, humans used cave paintings, petroglyphs (rock carvings), and symbolic artifacts to convey stories, preserve knowledge, and express cultural beliefs. Iconic sites such as the Lascaux caves in France and Altamira in Spain showcase vivid depictions of animals, hunting scenes, and abstract symbols created with natural pigments. These visual narratives served practical purposes—documenting important survival information about animal behavior and seasonal patterns—as well as spiritual or ritualistic functions connected to early human belief systems.

Such prehistoric artworks acted as communal memory tools, enabling knowledge transmission across generations in societies without written language. They strengthened social bonds by sharing collective experiences and myths. For example, hunting scenes might not only record a successful hunt but also serve as a ceremonial appeal for future abundance.

As civilizations developed, visual storytelling became more sophisticated and formalized. In ancient Egypt, murals and hieroglyphics combined imagery and text to narrate religious myths, royal achievements, and funerary journeys. The walls of tombs often depicted the deceased's path through the afterlife, illustrating moral lessons and divine encounters. Similarly, Mesopotamian cylinder seals

featured intricate pictorial narratives, telling stories of gods, kings, and heroic exploits. In the Indus Valley, seal impressions combined symbols and images to communicate trade, status, or spiritual ideas.

In sum, visual storytelling in ancient and prehistoric periods was a vital tool for cultural transmission and identity formation. It bridged the gap between lived experience and memory, shaping the foundation for all subsequent narrative arts.

Conclusion

The art of storyboarding remains an indispensable element in the visual storytelling process, serving as the foundational bridge between a narrative's conceptualization and its realization on screen. Through its evolution from simple hand-drawn sketches in early animation studios to sophisticated digital tools today, storyboarding has consistently provided creators with a powerful medium to visualize, plan, and communicate complex sequences of action, emotion, and spatial relationships. It enhances collaboration across creative teams by offering a shared visual language that clarifies intentions, reduces production risks, and streamlines workflow.

Moreover, storyboarding is not limited to filmmaking but extends to various fields such as animation, video games, advertising, and UX design, demonstrating its versatility and interdisciplinary value. The blend of artistic skill, narrative understanding, and technological innovation inherent in storyboarding exemplifies its role as both an art and a science. As technology advances, integrating AI, virtual reality, and real-time collaboration, the future of storyboarding promises even greater immersion and interactivity.

Ultimately, storyboarding's enduring significance lies in its ability to translate abstract ideas into visual sequences that resonate

emotionally and intellectually with audiences. It remains a vital storytelling tool that nurtures creativity, supports efficient production, and shapes the way stories are told in a rapidly evolving media landscape.

Literature Review

1. Hart, John. The Art of the Storyboard: A Filmmaker's Introduction (Second Edition). Focal Press, 2020. This book provides a comprehensive look at traditional and digital storyboarding techniques.
2. Bateman, Connor, and Jason Mittell. Complex TV and Visual Planning. NYU Press, 2021. This book discusses how contemporary TV uses pre-visualization strategies, including advanced storyboarding.
3. Schüle, Andreas. "From Script to Screen: Pre-Visualization Techniques in the Digital Age." Journal of Visual Culture, vol. 20, no. 2, 2021, pp. 188–204.
4. Jirout, Jamie. "The Cognitive Benefits of Visual Sequencing and Storyboarding in Media Education." Media Psychology Review, 2022.
5. Online source: "The Future of Storyboarding in the Digital Age." Adobe Creative Blog, 2023. https://blog.adobe.com/en/publish/2023/05/10/storyboarding-future-of-visual-planning

References

1. Hart, John. The Art of the Storyboard: A Filmmaker's Introduction. 2nd ed., Focal Press, 2020.
2. Bateman, Connor, and Jason Mittell. Complex TV and Visual Planning. NYU Press, 2021.
3. Schüle, Andreas. "From Script to Screen: Pre-Visualization Techniques in the Digital Age." Journal of Visual Culture, vol. 20, no. 2, 2021, pp. 188–204.

4. Jirout, Jamie. “The Cognitive Benefits of Visual Sequencing and Storyboarding in Media Education.” Media Psychology Review, 2022.

5. “The Future of Storyboarding in the Digital Age.” Adobe Creative Blog, 2023.

6. https://blog.adobe.com/en/publish/2023/05/10/storyboarding-future-of-visual-planning

நாககுமாரான் காவியத்தில் பஞ்சமி கதைகள்

இர.சண்முகலட்சுமி, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
முனைவர் க.கமலா, (நெறியாளர்)பேராசிரியர்,
தமிழ்த்துறை, மொழிகள் புலம், வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

முன்னுரை

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களுள் ஒன்றோ, சிலவோ குறைந்து பெருங்காப்பிய இலக்கணத்திற்கு மாறுபட்டு வருவது சிறுகாப்பியமாகும். ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றான நாக குமார காவியம் என்னும் காப்பியத் தலைவன் நாககுமாரான் காவியத்தில் பஞ்சமி கதைகள் பற்றி வெளிப்படுத்துவது இக்கட்டுரை.

உதயணன் தெய்வ யாழை பெறுதல்

அந்நிலையில் பிரம்ம சுந்தர முனிவருக்கு தேவேந்திரனால் பரிசாக வழங்கப்பட்ட தெய்வத்தன்மை பொருந்திய கோடவதி என்னும் யாழை அம்முனிவர் உதயணனுக்கு பரிசாக வழங்கினார் யானை முதலான விலங்குகளை மயக்கும் தன்மை கொண்ட பெருமை வாய்ந்தது அந்த யாழ் ஒரு நாள் காட்டில் உதயணன் தெய்வத்தன்மை பொருந்திய யானை ஒன்றைக் கண்டான் அவன் கோடாவதியான யாழை வாசிக்க யானை அந்த இசையில் மயங்கி அவன் முன் முழங்காலிட்டு வணங்கியது அவன் யானை மீது அமர்ந்து தவப்பள்ளியை அடைந்தான்

தெய்வயானை மறைந்து போதல்:-

"மன்னிய தெய்வயானை மாயமாய் மறைந்து போகல்
மன்னனும் மனம் தளர்ந்து மணி இழந்த அரவு போலத்
துன்னிய சோக மேவித் துயர் எழுதி த் தேடுக என்றான்
பன்னரும் சேனை சென்று பாரெங்கும் தேடிட்டு அன்றே"-

உஞ்சைக்காண்டம், (ப.எண்-36)

சேதி வத்துவ என்னும் இரு நாடுகளையும் சிறப்பாக ஆட்சி நடத்தி வந்த உதயணன் ஒரு நாள் தன் மனம் மகிழும் படியாக நாடகங்களை கண்டு மெய் மறந்ததால் யானையின் நிபந்தனையை மறந்து யானைக்கு முன்பே உணவு உட்கொண்ட அதனால் தேவையான மறைந்து போயிற்று உடனே அந்த யானை தேடிக் கொண்டு வருமாறு படைவீரர்களுக்கு கட்டளையிட்டான்.

பிரச்சோதனன் சூட்சுமம்:-

"ஊனமுற்றோர் மேல் யூகிபோர்போனதும்
ஆனைபோக அரசன் இரக்கமும்
கான யானை காட்டிப் பிடிப்பதும்
மானவேலவர் மந்திரித்து ஒன்றின்"-
உஞ்சைக்காண்டம் (ப.எண்-38, 39)

இந்த நிலையில் அவந்தி நாட்டு வேந்தன் பிரச்சோதனன் என்பான் தனக்குத் திறை செலுத்தவில்லை என்ற காரணத்தால் உதயணனை சிறைபிடிக்க எண்ணினான் துன் அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்து பின்னர் அரக்கு மரம் துணி தோல் மற்றும் பிற பொருட்களால் ஆன பொய்(மாய) யானை ஒன்றை உருவாக்கினான் அந்த யானைக்குள் போர் வீரர்களையும் ஓர் கருவிகளையும் மறைத்து வைத்திருந்தான் மாயை யானையை அறிந்த உதயணன் கோடாவதி என்ற யானை இசைக்கத் தொடங்கினான் அப்போது அந்த யானை அழிந்து போர் வீரர்கள் வெளிப்பட்டனர். போருக்கு தயார் நிலையில் இருந்த உதயணன்:-

"சிலந்தி நூலில் சிறத்தர் நற்சிங்கம் போல
அலங்கல் வேலினான் பண்புடை யூகிக்கே
நலங்கொள்கையில் நின்று கொடுத்தனர்"-

உஞ்சைகாண்டம்(ப. எண் 45,46)

சிலந்தி நூலால் கட்டுண்டு நிற்கும் ஒரு சிங்கத்தைப் போன்றவன் ஆனான் மிகுந்த கோபம் கொண்ட உதயணன் பகைவர்களின் நான் படைகளையும் அழித்தான் . இருப்பினும் இறுதியில்--- அவனுடைய

கூறுவாள் ஒடிந்து போன நிலையில் அவன் படைக்கருவி ஏதேனும் இல்லாமல் நின்ற போது பகைவர்கள் அவனைச் சுற்றி வளைத்து அவன் கைகளை வெள்ளை துணியால் புறத்தே கட்டினர். கட்டுண்ட உதயணன் யூகிக்கு மட்டும் புரியும் படியான குறிப்பு மொழிகளால்" ஓர் ஓலையை" சேர்க்கும்படி கூறினான்- இந்நிலையின் சாலங்காயனும் அவனுடைய வீரர்களும் உதயணனை ஒரு தோலில் ஏற்று அவந்தி நாட்டின் தலைநகரான வஞ்சை நகருக்கு கொண்டு வந்தனர்

உதயணனை சிறையில் இருந்து மீட்டல்:-

"மன்னன் வந்து இறங்கி யூகி மரித்தனனென் வார்த்தையை
பன்னி எங்க சைம்முறைபரப்பி வையகம் தன்னில்
உன்னி யூகி கான் விலகிச் ஒன்னெரிப்படுத்தனன்"

உஞ்சைக்காண்டம்-(ப.எண்-47)

உதயணன் சிறைப்பட்டான் என்பதை ஓலை மூலம் உணர்ந்த யூகி பெரிதும் வருந்தினான் சூழ்ச்சியை சூழ்ச்சியால் தான் வெல்ல வேண்டும் என்று அவன் துணிந்தான் தகுந்த ஏற்பாடுகளை திட்டமிட்டு செய்த பின்னர் மன்னன் உதயணன் சிறைப்பட்டதால் மனம் உடைந்த யூகி இறந்துவிட்டான் என்று ஒரு பொய் செய்தியை நாடெங்கும் பரவச் செய்தான் பின்னர் தன்னை பிறர் அடையாளம் காண இயலாதவாறு மறைந்து மாறுவேடம் போட்டான் அந்நிலையில் பகை அரசர்கள் வத்துவ நாட்டைக் கைப்பற்றினர். என்பதையும் அவன் அறிந்து கொண்டான். பின்பு சிறையில் இருக்கும் உதயணனை காண அவந்தி நாட்டின் தலைநகரான வஞ்சை நகருக்குச் சென்றான் மாறுவேடத்துடன் சென்ற யூகி சிறைக் கோட்டத்தின் அருகே சென்று இளமையில் தானும் உதயணனும் பயின்ற இனிய இசையை குழல் வழி எழுப்பினான். அது கேட்ட உதயணன் யூகியின் வரவை அறிந்து மகிழ்ந்தான். பின்னர் யூகி தந்திரமாக அரண்மனைக்குள் புகுந்து நளகிரி என்ற யானைக்கு மதம் பிடிக்குமாறு செய்ய அக்களிறு கட்டுத்தறியை அறுத்துக் கொண்டு இடியென முழங்கி பெருஞ்சினம் கொண்டு வீதியில் ஓடி வெறியாட்டம்

போட்டது கலங்கித் தவித்த நகர மக்கள் அரசனிடம் முறையிட்டனர். உதயணன் ஒருவனால் மட்டுமே அந்த மத யானையை அடக்க முடியும் என்று அமைச்சர் கூறினார்

மதம் பிடித்த யானையை உதயணன் அடக்குதல்:-

" பருத்துப்பின் தொடர யானை பறவைகள் மற்றும் சூழப்
பெருந்திரு நடுவுள் தோன்றப்பீடுடைக் குமரன் தானும்
திரு வலித்தடக்கை வீணை சீருடன்பாடவோம்
மருவிற்று களிலும் கேட்டு வந்தடி பணிந்ததம்மா"-

உஞ்சைக்காண்டம்(ப.எண்-59)

கோடாவதி என்ற யாழை இசைத்தான் யானை அவனுக்கு அடிபணிந்து அடங்கி நின்றது. அவன் அந்த யானை மேல் ஏறி நகர்வலம் வர அதைக் கண்டு அரசன் பிரச்சோதனன் பெரிதும் மகிழ்ந்தான் பின்னர் மன்னன் வேண்டுகோளுக்கு இணங்க அரசனுடைய மைந்தர்களுக்கு படைக்கலப் பயிற்சியை பயிற்றுவித்தான்.

வீரத்தில் உயர்ந்த உதயணன்:-

" வந்தவர் அம்பு மாறி வள்ளல் மேல் துவத்தானும்
தந்தனுமேவிச் சாராத் தரத்தினால் விலக்கிட பின்னும்
வெந்திறல் வேடர் வில் நாண் வெந்நுனைப்பகழி வீழ
நந்திய சிதைவு வளைத்து நன் பிறை அம்பின்
எய்தவன்"

-உஞ்சைக்காண்டம்-(ப.எண்-67)

உதயணனை வேடர்கள் சூழ்ந்து கொண்டு அம்பு மாறி பொழிந்தனர்; வீரத்தில் உயர்ந்த உதயணன் அவர்களின் வில்களும் அம்புகளும் நிலத்தில் விழும் படி செய்தான் தோல்வியால் வேடர்கள் சிணந்து போயினர்.

வீரத்தால் பது மகாபதியை மணத்தல்

தரு சகனின் பகை அரசர்களை உதயணன் போரிட்டு வென்றான் அதனால் மகிழ்ந்த தருசகன் தன் தங்கை பதுமகாபதியை வேள்வி

முறையில் உதயணக்குத் திருமணம் செய்து கொடுத்தான் அவன் தன் தங்கைக்கு நிரம்பச் சீதன வழங்கி நாற்படைகளையும் பரிசாக வழங்கினான்.

வெற்றி வாகை சூடிய உதயணன்:-

"மாற்ற வன்படை முறிந்தென மன்ன வன்படை
தோற்ற மன்னன் வந்தீர்த்தனன் தூய காளை தன்
வாளினால்
மாற்றலன் தனைக் கூற்றுண வண்மையிவ்
விருந்தார்கென
ஏற்ற வகையில் இட்டனன் இலங்கு வத்தவ ராசனே".

மகத காண்டம்-(ப.எண்-90)

பெரும்படை சூழத் தருசகன் உதயணனுக்கு அன்புடன் விடை கொடுத்து அனுப்பி வைத்தான் உதயணன் அந்நாட்டு எல்லையை அடைந்தபோது படை வீரர்கள் சூழ வகை தந்து அவனை வணங்கினர். அவர்கள் அனைவரும் கௌசாம்பி நகரத்தின் புறத்தே படைவீடு அமைத்து தங்கினர் பகைவரைக் கூற்றுவனுக்கு இரையாக்கி உதயணன் வெற்றிச் சிறப்போடு பெருமை வாய்ந்த கௌசாம்பி நகருக்குள் நுழைந்தான் நகர மக்கள் பெரு மகிழ்ச்சியோடு வாழ்த்துப் பாடி அவனை வரவேற்றனர்.

முடிவுரை:-

இவ்வாறு உதயணன் வீரத்தில் சிறந்து பல வெற்றிகள் குவித்து தமிழ் மண்ணிற்கு பெருமை சேர்த்து பின்னரும் மரபினர்களும் திரும்பி பார்க்கும் வண்ணம் சிறந்து வாழ்ந்தனர் என்பதை இக்கட்டுரையின் மூலம் உணர முடிகிறது இவையே உதயணகுமார காவியத்தில் உதயணனுடைய வீரத்தை பற்றி இக்கட்டுறையில் கூறப்பட்டுள்ளது.

துணை நூற் பட்டியல்

உதயண குமார காவியம்- அப்பாண்டை ராஜன் நேமி பாஸ்கர தாஸ்

தமிழ் இலக்கிய வரலாறு- டாக்டர் பூவண்ணன், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

சீவக சிந்தாமணியில் சீவகனின் குடும்ப உறவுகள்

இ.எழிலரசி (பகுதி நேர) முனைவர் பட்ட ஆய்வாளர்,
முனைவர்நா. தீபாராணி உதவிப் பேராசிரியர் நெறியாளர்
தமிழ்த்துறை வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப மற்றும் உயர் ஆராய்ச்சி நிறுவனம் பல்லாவரம், சென்னை.

ஆய்வு சுருக்கம்

சங்க காலத் தமிழகத்தின் வரலாற்றை அறிவதற்குச் சங்க இலக்கியங்கள் தலைமை ஆதாரமாக அமைகின்றது. குடும்ப சமூக உறவினர்களின் அமைப்புகள் சங்க இலக்கியங்களில் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன. வீரயுகம் ஆகிய சங்க காலத்தின் இவ்வுறவு நிலைகளைத் தெளிவாக புரிந்து கொள்ள வேறு காலகட்டத்தைச் சார்ந்த இலக்கியங்களை நாம் காண வேண்டியது மிக முக்கியமாக அமைகின்றது.

கருவிசொற்கள்:குடும்ப உறவுகள்,சிவகன்,சமுகம்,சிவகசிந்தாமணி, ஒழுக்கம்

முன்னுரை

குடும்பம் தன்தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், மூத்தோரிடம் ஒழுகும் முறையினைப் போதிக்கிறது. அத்துடன் பிறரிடத்தில் அன்பை வெளிப்படுத்தவும் விட்டுக்கொடுத்து வாழவும் கற்றுக்கொடுக்கிறது. இன்ப துன்பங்களைப் பகிரவும் வலியுறுத்துகின்றது. அவரவர் பணிகளைச் சிறப்பாக செய்ய உதவுகிறது. இதனால் சமூகத்தின் அடிப்படை அங்கமாகவும், முதன்மை அங்கமாகவும் கருதப்படுவது குடும்பமாகும். சமூகம் சிறப்படைய வேண்டுமெனில் குடும்ப இயக்கம் நன்முறையில் இயங்க வேண்டும். பெற்றோர், குழந்தைகள், கணவன், மனைவி, சகோதரன், சகோதரி, மைத்துனன், மைந்தன், மகள் போன்ற

உறுப்பினர்களில் முழுவதுமாகவோ சிலரோ ஒவ்வொரு குடும்பத்திலும் காணப்படுவர். இத்தகைய உறவுகளால் தான் பின்னப்பட்டுள்ளது குடும்பம். இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் குடும்பம் சிறியதாகவோ பெரியதாகவோ அமையலாம். இத்தகைய குடும்பத்துக்குள் பெற்றோர், பிள்ளைகள், உடன்பிறந்தோர்,

நடந்துகொள்ளும் முறைகளையும், கணவன் மனைவி கடைபிடிக்கும் ஒழுக்கத்தையும் குடும்பம் போதிக்கிறது. இத்தகைய குடும்ப உறவுகளைப் பற்றியும் உறுப்பினர்களிடத்து ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடுகளையும் இக்கட்டுரை விளக்குகிறது.

குடும்ப உருவாக்கம்

ஒரு செயல் முழுமையடைய பல்வேறு படிநிலைகளைக் கடந்துதான் செல்ல வேண்டும். இதுவே இயற்கையின் நீதி. அதைப்போல்தான் குடும்ப அமைப்பும் என்பதை,

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்" (தொல். பொரு. 143)

என்னும் அடியில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதற்கு வலுச் சேர்க்கும் வகையில் இன்றைய குடும்ப அமைப்பு நிலை பெறுவதற்கு முன்னர், "வரன்முறையற்ற வாழ்க்கை இருந்தது என்று முதலில் விளக்கியவர் பா.கோ.பென். அவரைத் தொடர்ந்து மார்கன், அவரைத் தொடர்ந்து எங்கல்சு ஆகியோர் விளக்கினர்." இத்தகைய நிலைகளைக் கடந்தே இன்றைய குடும்பம் வளர்ச்சி நிலையை அடைந்தது உள்ளது.

குடும்பத்தின் இன்றியமையாமை

குடும்பம் என்பது புணர்ச்சியும், குழந்தைப்பேறும் மட்டுமன்று. “மனித சமூகத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாகத் திகழ்வது குடும்பம் சங்கப்பாடல்களில் இது 'கடும்பு' எனப்படுகிறத.இது மானிட வாழ்வின் தொடக்கத்திலிருந்தே காணப்படுகிறது. இது எல்லாச் சமுதாயங்களிலும் எல்லாக் காலங்களிலும் இருந்து வருகிறது.

இது, “இயக்கமுள்ள கோட்பாட்டைக் குறிக்கிறது. இது ஒரு போதும் இயங்காதிருப்பதில்லை. சமூகம் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு முன்னேறுகின்றபொழுது அதுவும் கீழான வடிவத்திலிருந்து மேலான வடிவத்துக்கு முன்னேறுகிறது. குடும்பம் “திருமணம், பாலுறவு, சந்ததியினரை உருவாக்குதல் போன்ற முக்கிய செயல்களைச் செய்வதால் குடும்பம் நிறுவனம் எனப்படுகிறது. பிற சமூக நிறுவனங்களான கல்வி, அரசு, சமயம் போன்றவை முதலில் குடும்ப அமைப்பு முறைக்குள்ளேயே தோன்றின! அதோடுமட்டுமல்லாமல், "குலம், கூட்டம்,பெருங்குழு, கிளைச்சாதி, சாதி, சமூகம் என்ற அமைப்பு வரை விரிவு பெறுகிறது.

ஆதலின், குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. அதுவே மனிதனைச் சமூகவயப்படுத்துவதில் முதன்மையான பங்காற்றுகிறது. இப்பணியை அது பிறப்பு முதல் இறப்பு வரை செய்கிறது. வாழுங்காலம் முழுவதும் தொடர்ந்து வேறு எந்த நிறுவனமும் இந்த அளவுக்குச் சமூகவயப்படுத்தும் பணியைச் செய்வதில்லை இத்தகைய பல்வேறு சிறப்புகளுக்குரியது குடும்பம். இது தான் சார்ந்த பணிகளையும் பிற பணிகளையும் நிறைவுசெய்து உலகை மேம்படச்செய்கிறது.திருமண முறையில் இருந்து குடும்பம் தொடங்குகிறது.

தொல்காப்பியத்தில் மணமுறைகள்

சமூகம் ஏற்றுக்கொண்ட இணைவிழைச்சு, இனப்பெருக்கம், பொருளாதாரத்தேடல், உயர்நிலை நோக்கம், நல்லுணர்வு, கல்விப்பெருக்கங்கள் ஆகியன குடும்பத்தின் குறிக்கோள்கள் என்பர்.இதனை நிறைவு செய்ய அடிப்படையாக அமைவது திருமண உறவாகும்.

"வெளிப்பட வரைதல் படாமை வரைதல்"

(தொல். பொரு. 138)

என்று தொல்காப்பியர் கூறும் இருநிலைகளே அக்காலம் முதல் இக்காலம் வரை திருமணமுறைகள் காணப்படுகின்றன.மேலும் தொல்காப்பியர்,

"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டங் காணுங்காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"

(தொல். பொரு. 89)

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிநடுவணைந்திணைக்குரிய மக்களின் திருமணமுறைகளாக எட்டினைச் சுட்டுகிறார். இந்த எட்டின் வகைகளாக பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என உரையாசிரியர்களாளே விளக்கம் தருகின்றனர். ஆகவே, தொல்காப்பியர் காலத்தில் மணமுறைகள் எட்டு என்பது அறியப்படுகிறது.

இதுபோன்று சங்க இலக்கியம் மற்றும் காப்பியங்களிலும் அதற்குப் பின் வந்த இலக்கியங்களிலும் திருமண வழி குடும்ப அமைப்பை எடுத்துரைக்கின்றது. குறிப்பாக சீவக சிந்தாமணியில் சீவகனின் குடும்ப உறவுகளைப் பற்றியும் அதில் சகோதரத்துவத்தை பற்றியும் பின்வருமாறு நாம் காணலாம்

சீவகனின் குடும்பம்

சீவகனின் தந்தை கந்துக்கடன். தாய் சுநந்தை. உடன்பிறந்தோர் நந்தட்டன், நபுலன், விபுலன் போன்றோராவர். இவர்கள் கூட்டுக்குடும்ப வாழ்வில் வாழ்ந்துள்ளனர்.மனைவியரைக் கணவன் பிரிந்த நிலையில் பெற்றோர் ஆறுதல் வழங்குவது குறிப்பிடத்தக்கது. ஒருவர் துயரில் பிறர் ஆறுதல் வழங்க உறவுகள் அமைந்துள்ளனர்.

குடும்பத் தலைமை

ஒரு செயலைக் குழுவாக மேற்கொள்ளும்போது பலரது பங்கு காணப்படுகிறது. இறுப்பினும் இறுதிமுடிவை ஒருவர் மட்டுமே மேற்கொள்வர். அதைப்போலவே ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் தனது விருப்பினைக் கூறும் உரிமையுள்ளது. இதில்இறுதிமுடிவைக் கூறுபவரே குடும்பத்தலைவராவார். அவர் தலைமையின்கீழ் குடும்பம் கட்டுகோப்பாகச் செயல்படும் என்பதை இக் காப்பியதில் காணமுடிகிறது.

சகோதர உறவுகள்

வேண்டிய செல்வத்தைத் தேடிப் பெற இயலும். பகைவரையும் வெல்லமுடியும். நட்பையும் மனைவியையும் பிள்ளைகளையும் மற்ற அனைத்துப் பொருட்களையும் பெற இயலும். பெற இயலாத செல்வம் உடன்பிறப்பாகும் (சீவ. 1760) என்ற பாடலின் வழி உடன்பிறப்பின் முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது.

நந்தட்டன் சீவகனுக்குத் துயர் ஏற்படும்போது மகளிரைப் போல் உதவமுடியாமைக்கு வருந்தினான் என்பதை (சீவ. 1728) இப்பாடலின் வழியும்,இதனால் உடன்பிறந்தோர்க்குத் துன்பம் நேரும்போது பெண்கள் உதவமுடியாத சூழலும் ஆண்கள் துயரிலுள்ள சகோதரனுக்கு உதவுபவர்களாகவும் இருந்துள்ளமை அறிய முடிகின்றது.

சகோதரனுக்காகத் துறவு செல்லல்

சீவகன் துறவினை மேற்கொள்ளும்போது அவனது சகோதரன் நந்தட்டனும் துறவு மேற்கொள்கின்றான் (சீவ. 3132) என்பதை இப்பாடலின் வழி உணரமுடிகிறது.இதைப்போன்று

சிலப்பதிகாரத்திலும் வஞ்சிமாநகரில் சேரலாதனுடன் இளங்கோவடிகள் வீற்றிருந்தார். அவரைக் கண்ட நிமித்திகன் இந்நாட்டையாளும் திருமுகம் உனக்கு உண்டு என்றான். இதனைச் செவிமடுத்த இளங்கோ தன் சகோதரன் நாடாள வேண்டும் எனத் துறவு மேற்கொண்டார் (சிலப். 30: 175-181).

தன் சகோதரன் மீதுள்ள அன்பினால் துறவை மேற்கொள்கின்றனர்.இருகாப்பியங்களும் சகோதர அன்பைக் கூறுகின்றன.

உடன்பிறப்பிற்காக இறத்தல்

கச்சய நாட்டையாண்ட துச்சயன் என்னும் வேந்தன் வீரையும் தாரையும் மணம்புரிந்தன். மதுமயக்கத்தில் தன்நிலை அறியாத வீரை புதியதாகப் பிடித்துவரப்பட்ட யானைமுன் சென்று இறந்தாள். அவள் இறந்த துயரில் தாரை ஒருநிலா முற்றத்திலிருந்து வீழ்ந்து இறந்தாள் (மணி. 12: 46-48). என்று மணிமேகலையில் கூறியதுப் போன்று

சீவகனைக் கட்டியங்காரனின் ஆட்கள் சிறைபிடித்தனர். இதனை அறிந்த நந்தட்டன் இப்பகல் பொழுதில் காண்பது அல்லது இறத்தல் என்ற முடிவில் ஒன்றை மேற்கொள்ள உறுதிகொண்டான். (சீவ. 1745)
உடன்பிறப்புகள் இறந்தால் அவர்களுக்காக இறப்பவர்களாகவும் உள்ளோர் பெரும்பான்மை. ஆகையால், துரோகம் செய்யாத உயர்ந்த அன்பினை மட்டுமே கொண்டுள்ள உடன்பிறப்புகளைக் காப்பியத்தில் காணமுடிகிறது.

மைத்துனன் உறவு

மைத்துனன் என்ற சொல் ஒரு பெண்ணுக்கு அவள் கணவனுடன் பிறந்த ஆணைக் குறிக்கிறது. "மைத்துனன்" (சீவக. 1730: 2) ஒரு ஆணிற்குத் தன் மனைவியுடன் பிறந்த ஆணை குறிக்கிறது. "மைத்துனன்" (மணி.9:15). சீவகசிந்தாமணியிலும் மணிமேகலையிலும் இச்சொல் இடம்பெற்றுள்ளது.

சீவகன் கனகமாலையிடம் நந்தட்டன் உன் மைத்துனன் என அறிமுகம் செய்கிறான். அவள் இவ்விளஞ்சுற்றம் எழுபிறவியிலும் கிடைக்க வேண்டும் என்றாள் என்பதை இப்பாடலின் வழி அறியப்படுகிறது.(சீவ. 1730 : 2-3)

சீவகனைக் கட்டியங்காரனின் காவலர்கள் சிறைப்பிடித்தனர். சீவகன் நிலை அறியாது நந்தட்டன் குணமாலையின் இல்லம் சேர்ந்தான்.

அவனைக் கண்ட அளவிலேயே உணவு சமைக்கப் பணிப்பெண்களிடம் கூறினாள் குணமாலை.

உணவு பரிமாறும்போது நீர்வடியும் கண்களுடன் சீவகனைப் பிரிந்து தனித்து உணவுகொள்ளத் துணிந்த கொடியவரே என்றாள் குணமாலை (சீவ.1744). அவள் கூறியதற்காகச் சிறிதும் வருந்தாது அவளின் துன்பம் கண்டு வருந்தினான் நந்தட்டன். மேலும் குணமாலை கொண்ட அன்பைச் சீவகனிடத்து வெளிப்படுத்துகிறான் நந்தட்டன்.

நந்தட்டன் காந்தருவதத்தையின் இல்லம் சென்றான். அவள் கணவனையிழந்த பெண்கள் அடையும் மாற்றமின்றி இயல்பாகக் காணப்பட்டாள். அதைக்கண்டு இழிசொல்லைக் கூறினான். நந்தட்டனின் மனநிலையை அறிந்த காந்தருவத்தை சீவகனைக் காணும்படிச் செய்தாள் (சீவ. 1747).

மைத்துனர் உறவுகள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் உறவுமுறையாகவும், துன்பத்திற்காக வருந்தும் உறவாகவும் ஒரு பெண்ணிற்கு அமைந்துள்ளமை சான்றுகளாகின்றன. மேலும் உரிமையினையும், மதிப்பும், மரியாதையுடனும் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளும் தன்மையினை அறியலாம். ஆண்கள் தன் மைத்துனரிடத்து இருக்கும் இயல்புக் குடும்ப உறவுகளில் பெரிதும் இடம்பெறவில்லை.

முடிவுரை

குடும்பம் என்பது ஒரு நாட்டின் மிக முக்கியமான சொத்துவாகும் அந்த குடும்பத்தைப் பற்றி நாம் இலக்கியங்கள் மிக அழகாக வெளிப்படுத்தி உள்ளனர் அது மட்டும் அல்லாமல் குடும்ப உறுப்பினர்களை பற்றியும் குடும்ப உறவுகளைப் பற்றியும் எடுத்து இயங்கியதை நாம் கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.

துணைநூற்பட்டியல் :

1.தொல்காப்பியம் முழுவதும் இளம்புரனார் உரை, சைவ சித்தாந்த பதிப்பகம் , திருநெல்வேலி

2. சீவக சிந்தாமணி, பாரி நிலையம் சென்னை

3. சங்க இலக்கியம் உணர்த்தும் மனித உறவுகள் அ.தட்சிணாமூர்த்தி நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை.

மாணிக்கம் நாவல் காட்டும் பெண்ணியம்

ரா.ஸ்டெல்லா தீபா முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
முனைவர் நா. தீபாராணி, உதவிப்பேராசிரியர்& நெறியாளர்,
தமிழ்த்துறை, மொழிகள் புலம், வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117

ஆய்வு சுருக்கம்

இலக்கியங்கள் அன்று முதல் இன்று வரை கதைகளிலும் பாடல்களிலும் கதாபாத்திரங்களிலும் மிக முக்கியமான ஒரு விடயமாக உள்ளது. கதாபாத்திரங்களின் வழி தான் புலவர்களும் எழுத்தாளர்களும் மக்களிடம் பேசுகின்றனர் .அதனால் மிகவும் முக்கியமான ஒரு கதாபாத்திரத்தின் வழி தான் இந்த சமூக சித்திரங்கள் கூறப்படுகின்றன. கதாப்பாத்திரம் என்பது வெறும் கவிஞனின் கற்பனை திறன் மற்றும் கிடையாது அதன் வழி அவன் மக்களிடமும் சமுதாயத்திடமும் பேசிக்கொண்டு இருக்கின்றான் தான் நினைக்கும் கருத்தினை பாத்திரத்தின் மீது ஏற்றி அவன் மிக அழகாக வெளிப்படுத்துகின்றான்.அந்த வகையில் சு. தமிழ்செல்வி தனது நாவல்களில் கதாபாத்திரங்களின் வழி கிராமத்து சிக்கல்களை எடுத்துக் கூறுகின்றனர். இதை இக் கட்டுரை ஆராய்ந்து கூறுகின்றது.

கருவிசொற்கள்: நாவல்,காதாபாத்திரம்,மாணிக்கம்,பெண்கள்.

முன்னுரை:

இனக்குழு சமூகத்தில் பெண் முதன்மையானவளாக தலைமைப் பண்போடு இனத்தை வழிநடத்தினாள். அவளுக்குள் வரையறைகள் ஏதும் திணிக்கப்படாத காலம். பெண்ணின் தாய்மைக்குக் காரணமானவர்கள் யாரென அறிந்து கொள்ள ஆரம்பித்த நிலவுடைமை சமூகத்தில் பெண்ணின் வாழ்க்கை கட்டுப்படுத்தப்பட்டு இன்றளவும் அந்தக் கட்டுப்பாடுகள் தொடர்கின்றன. குடும்பம் சமூகம் தொடங்கி எல்லா நிலைகளிலும் பெண் இரண்டாம் தரமாகப்

பார்க்கப்படுகிறாள். பெண்ணைப் போகப் பொருளாகக் கருதி அவளது அடிப்படை சுதந்திரம் ஒட்டுமொத்தமாக மறுக்கப்பட்டது. பல்வேறு காரணங்களுக்காக பெண்கள் அடிமை நிலையில் விழத்தப்பட்டனர். இதனால் பெண்வீட்டிற்குள்ளேயே அடைந்துகிடக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. பிற்காலங்களில் பெண்கள் கல்வி, கற்றமையாலும், அறிவியல் வளர்ச்சியாலும், அடிமைத்தனம் மறையத் தொடங்கி பெண்ணிய வளர்ச்சி ஏற்படத் தொடங்கியுள்ளது.

சு.தமிழ்ச்செல்வி, வறுமை,இயற்கைசீற்றங்கள், சாதி, குடிப்பழக்கம், ஆண்களின் பொறுப்பற்ற தன்மை, பெண்களே உழைத்து குடும்பத்தை காத்தல் போன்ற கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு தம் புதினங்களைப் படைத்திருந்தாலும். பெண்களை மையமாக வைத்தே தம் புதினங்களைப் படைத்துள்ளார். பெண்களின் பிரச்சனைகளில் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தவர்.பெண் விடுதலைக் கருத்துக்களின் அடிப்படையில் பல பாத்திரங்களை உருவாக்கியுள்ளார்.

அப்பாத்திரங்கள் முதன்மை பாத்திரங்கள், துணைமைப் பாத்திரங்கள் என்ற இரு நிலைகளில் இயங்குகின்றன. அவ்வாறு இயங்கும் பெண்களின் பிரச்சனைகளைப் பல கோணத்திலிருந்து எழுதியுள்ளார். அவர் காட்டும் பெண்களின் பிரச்சனைகள் நடைமுறையில் உள்ளன. பெரும்பாலும் நடுத்தரக் குடும்பத்துப் பெண்களே இவருடையபாத்திரங்கள். இவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சனைகளே இவரது புதினங்களில் மையக்கருத்துக்களாக அமைகின்றன. பொதுவாக இவருடைய புதினங்களை, "பெண்கள் பிரச்சனையை மையமாகக் கொண்டவை, பெண்கள் பிரச்சனையையும் உள்ளடக்கிவை என இரு பிரிவுகளாக வகைப்படுத்தி ஆராய்ந்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது..

1. மாணிக்கம்
2. அளம்
3. கீதாரி
4. கற்றாழை

5. ஆறுகாட்டுத்துறை

6. கண்ணகி

7. பொன்னாச்சரம்

ஆகியவற்றைக் கொள்ளலாம்.

பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண்களின் வாழ்க்கைமுறை, முன்னேற்ற செயல்பாடு, ஏற்படும் தடுமாற்றங்கள் மற்றும் அதிலிருந்து மீண்டுவர எடுக்கும் முயற்சி ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.

ஒரு பெண் பிறந்தது முதல் அவள் வாழ்வில் எதிர்கொள்ளும் மகிழ்ச்சி, துன்பம், அவமானம், பழிச்சொற்கள் ஆகியவற்றைக் கடந்து, இந்த சமுதாயத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள அவள் படும் பாடுகளை எடுத்துரைப்பதே பெண்ணியம்.

"மாணிக்கம்" காட்டும் பெண்ணியம்

"மாணிக்கம்" என்னும் நூலின் வழியாக சு. தமிழ்ச்செல்வி பெண்களின் நிலையை விரிவாகக் காட்டியுள்ளார். ஒரு பெண் எப்படி இருக்கக் கூடாது என்பதையும், ஒரு பெண் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறாள் என்பதையும் எடுத்துக்காட்டும் கருவாக இக்கதை அமைந்துள்ளது.

செல்லாயி என்ற பெண் திருமணத்திற்கு பின் அனுபவிக்கும் துன்பங்களையும், பொறுப்பற்ற கணவனின் செயலால் குடும்பம் சிதைந்து நிலைகுலையும் நிலையையும் கண்முன்னே காட்சிப்படுத்துகிறார்.

அவள் நம்பி வந்த குடும்பத்திலேயே மாமியார் செய்தக்கொடுமைகளும், நாத்தனார்களும் சேர்ந்து அவளைத் துன்புறுத்தும் நிலையும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

கதைக்களமும் படைப்பாக்கமும்

மாணிக்கம்

மாணிக்கம் "ஹோமியோபதி" மருத்துவம் அஞ்சல் மூலம் படித்து மருத்துவமனை நடத்தி வருகிறான். சின்னதம்பி தங்கத்தாச்சி இவர்களின் ஒரே மகன், அவனுக்குத் தேவையானவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து செய்யும் அவனது பெற்றோர். குறிப்பாக தாய் விருப்பப்பட்ட சக்குபாய் என்ற பெண்ணை மட்டும் அவன் திருமணம் செய்துகொள்ள எதிர்ப்பை தெரிவிக்கின்றாள். அதற்கு சாதியின் பெயரைப்பேசவோ, அவர்களை மீறி சக்குபாயைத் திருமணம் செய்து கொள்ளவோ அவனுக்குத் துணிவுமில்லை. சாராயம் குடிக்கக் கற்றுக் கொள்கிறான். அந்தப் போக்கை எப்படியாவது நல்வழிப்படுத்த நினைத்து அவனது தாய் செல்லாயியை திருமணம் முடித்து வைக்கிறாள்

விருப்பம் இல்லாத மணம் கொண்ட கணவனோடு வாழ்ந்த செல்லாயிக்கு மாமியாரின் ஏச்சும், பேச்சும் மேலும் வேதனையைத் தருகிறது. தங்கத்தாச்சியின் சித்தரவதைகளை மாணிக்கத்திடம் சொன்னாலும், அவன் எதுவும் காதில் வாங்க மறுக்கிறான். செல்லாயியிடம் அவன் காதலித்த விஷயத்தையும் அவள் வேறு யாரையும் மணமுடிக்காமல் இவனுக்காகவே காத்துக் கொண்டிருப்பதையும் கூறுகிறான். மாணிக்கத்தை எதிர்த்துப் பேசத் துணிவில்லாத செல்லாயி எந்நேரமும் அழுது தன் வேதனையை மறக்கிறாள்.

செல்லாயி கர்ப்பம் அடைகிறாள் அவளைப் பார்க்க வந்த அளுடைய அக்கா சரசு செல்லாயின் நிலையைக் கண்டு மாணிக்கத்திடம் சொல்லியும் அவனுக்குச் செல்லாயின் மேல் பாசமோ, இரக்கமோ எதுவும் வரவில்லை. மாணிக்கம் என்ன நினைத்தானோ, செல்லாயியிடம் ஒன்றும் சொல்லாமல் அவளை அழைத்துக்கொண்டு ஊர் ஊராகச்சுற்றுகிறான். எங்கு போகிறான் வருகிறான் என்பதை அவளிடம் சொல்ல மாட்டான். மாணிக்கம், நெல் அறுப்பது சைக்கிள் வித்தை காட்டுவது, மருத்துவம் பார்ப்பது. என ஏதாவது வேலை செய்கிறான் பல சமயம் வீட்டிற்கே வராமலிருப்பான் செல்லாயியின் முதல் பிரசவம்

அவளுடைய அக்கா சரசுவின் வீட்டில் நடக்கிறது. சரசுதான் அவளைத் தாயாக கவனித்துக் கொள்கிறாள். செல்லாயியிக்கு முதல் குழந்தை பெண் குழந்தையாகப் பிறக்கிறது.

செல்லாயியிக்கு எப்பொழுதும் தன் கணவன்மீது கோபம் வராது. முதல் குழந்தை பிறந்ததற்கு ஒரு சட்டைத்துணிகூட அவன் வாங்கி வரவில்லை. எனத் தெரிந்தும் கோபம் வரவில்லை. வேலை செய்யும் காசை வீடு, மனை என்று ஏதாவது வாங்கி வைத்திருப்பான் என நினைத்துத் தன் தாலியில் உள்ள குண்டைக் கொடுத்து அப்பன் செய்ய வேண்டிய அரைஞாண் கொடியும் புதுத்துணியும் சீராகவாங்கி வரச்சொல்லி சபைமுன் அவனை கவுரவிக்கிறாள்.

மாணிக்கம் ஊர் ஊராய் சைக்கிள் வித்தைக்காட்டி விளையாடுவதும். குடிப்பதும் எனச் செலவழிக்கிறான். மாணிக்கத்திற்கு அம்மை போட்டு உடல் மெலிந்துபோகிறது. அதனால் அவன் சொந்த ஊருக்கு திரும்பி வருகிறான். தங்கத்தாச்சியிடம் சொல்லாமல் செல்லாயியியை அழைத்துப்போனவன், இப்போது வந்திருப்பதைக் கண்டு பாசம் காட்டாமல் வெறுப்பையே காட்டுகிறாள். அவர்களை மாட்டுக் கொட்டகையில் தங்கச் சொல்கிறாள். சமைப்பதற்கு கூட பாத்திரமோ, பண்டமோ ஒன்றும் தரவில்லை.

மாணிக்கம் மறுபடியும் மருத்துவம் பார்க்கத் தொடங்கினான். அவன் காதலித்த சக்குபாய் இன்னும் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதைக் கேள்வியுற்று, அவளை இரண்டாவதாகத் திருமணம் செய்ய செல்லாயியிடம் சம்மதம் கேட்கிறான். ஒன்றுமே பதில் சொல்லாமல் ஒப்பாரி வைக்கிறாள் செல்லாயி.மாணிக்கம் எங்கு வந்து தன்னை அழைத்துக்கொண்டு போவான் என நினைத்த சக்குபாய் அவன் வராததால் ஏமாற்றம் அடைந்து வீட்டிற்குச் செல்ல தைரியம் அற்றவளாய் தூக்குப்போட்டு இறந்து போகிறாள். அதனால் மாணிக்கம் செல்லாயியின் மீது கோபம் கொண்டு எங்கேயோ போனவன் சில வருடம் கழித்துத்தான் திரும்பி வருகிறான். அந்த நேரத்தில் செல்லாயி

வேறொருவனிடம் தொடர்பு வைத்திருப்பதாகக் கூறிய தங்கத்தாச்சியின் பேச்சைக் கேட்டு செல்லாயியை அடித்து துன்புறுத்துகிறான்.

தங்கத்தாச்சி உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாய் இருந்தபோது அவள் ஆசைப்பட்ட உல்ல மீன் வாங்கப் போனவனுக்கு மீன் பீடித்து விற்கும் ஆசை ஏற்பட்டு மீன்பிடிக்கப் போகிறான். வாணி, மணிநாஞ்சி என்ற மூன்று பிள்ளைகளுக்குப்பிறகு நான்காவதாக ஒரு பெண் குழந்தை பிறக்கிறது. அதன்பின் செல்லாயியின் குடும்பம் ஓரளவு துன்பங்களிலிருந்து விடுபட்டுக் கொண்டிருந்தது.

வாணியை அதே ஊரிலேயே திருமணம் செய்துகொடுக்கின்றனர். கடைசிப் பெண்ணான சின்னது எனச் செல்லமாக வளர்க்கப்படுபவள் விளையாடிக் கொண்டிருக்கும்போது குளத்தில் மூழ்கி எதியாராத விதமாக இறக்கிறாள். குடும்பம் தலைகீழாக மாறத் தொடங்குகிறது. செல்லாயி அவ்வப்போது தன் மகளைப் புதைத்த அனத்து மண்ணை அள்ளிப்பூசி அழுகிறாள். நாஞ்சியும் அவனது விருப்பபடி செல்வி என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். தந்தையுடன் சேர்ந்துமீன் பீடிக்கச்செல்கிறான். நாஞ்சி தான் படித்த படிப்பிற்குத் தகுந்த வேலை தேடிக்கொள்ளாமல் மாணிக்கம் மீன்பிடிக்க வருவது மாணிக்கத்திற்கு வருத்தமளிக்கிறது.

நாஞ்சிக்கு இந்த மீன்பிடிக்கும் தொழிலைவிட்டு வேறு கடை ஏதாவது வைத்துக்கொடுக்க நினைத்த மாணிக்கம் கடலில் மீன் பிடிக்கச்சென்று இறந்த குடும்பத்திற்கு அரசாங்கமே பணம் கொடுக்கும் என்பதால் தனது உயிரை இழக்கத் துணிகிறான். தனது மகனுக்காக யாருக்கும் தெரியாமல் கடலில் விழுகின்றான் தனது முடியாத வயதில் தன் மகனின் குடும்பம் தன்னால் செழிப்படைய தனது உயிரைத் தியாகம் செய்கிறான். அதுவரை சுயநலமாக வாழ்ந்த மாணிக்கம் கடைசியில் தன் குடும்பத்தின் நிலையை மாற்ற முற்படுவதுடன் புதினம் முற்றுப்பெறுகிறது.

மாணிக்கம்

மாணிக்கம் புதிளத்தில் மாணிக்கத்தின் தாய் தங்கத்தாச்சி. மாணிக்கத்தின் மனைவி செல்லாயி, மாணிக்கத்தால் விரும்பப்பட்ட சக்குபாய், மாணிக்கத்தின் நான்காவது மகள் செல்லாயியின் அக்கா சரசு போன்ற பெண் பாத்திரங்கள் கதையின் போக்கையும், கதையின் மையத்தன்மையையும் நிர்ணயிக்கும் பாத்திரங்கள் ஆகும்.

தங்கத்தாச்சி

தங்கத்தாச்சி மாணிக்கத்தின் தாய் தங்கத்தாச்சி சின்னத்தம்பி தம்பதியினரின் குடும்பத்தில் தங்கத்தாச்சி தான் குடும்பத்தலைவர் மதுக்கூரில் வேண்டுமளவு நிலபுலமும் முத்துப்பேட்டையில் சொந்தமாக பெரிய வீடும் இருந்தது. சின்னதம்பி பிள்ளைக்கு, வசதியான வாழ்க்கை கிடைத்தபோதும் தங்கத்தாச்சியின் மனம் தன் பிறந்த ஊரின் மீதும் நன்சொந்தங்கள்மீதும், அந்தமண் மீதும் அவளுக்கிருந்த பற்றுமாறவில்லை. சின்னத்தம்பியுடன் நல்ல விதத்தில்பேசி மதுக்கூரிலிருந்த நிலங்களையும் முத்துப்பேட்டையிலிருந்த வீட்டையும் விற்றுவிட்டு கற்பகநாதர் குளத்தில் வந்து குடியேறிவிட்டான்.

"தான் வைத்ததுதான் சட்டம் அடித்ததுதான் மொட்டையென்று சொல்லுபவள் தங்கத்தாச்சி, சின்னத்தம்பியே கூட தங்கத்தாச்சிக்குப் பயப்படுவார். அவளிடம் எதிர் நின்று யாரும் பேசமாட்டார்கள்" தமிழ்ச்செல்வி மாணிக்கம் பு-175

இத்தகைய ஆளுமை குணம் கொண்ட தங்கத்தாச்சி ஏழு பெண்களுடன் பிறந்த ஒரேயொரு ஆண் பிள்ளையென்று மாணிக்கத்திற்கு மட்டும் சலுகை காட்டுவாள் மாணிக்கம் நாயின் அன்பை முழுமையாய்ப் பெற்றவனாக இருந்தபோதும் அவன் காதலிக்கும் சக்குபாயை திருமணம் செய்துகொள்ள தங்கத்தாச்சி ஒத்துக் கொள்ளவில்லை. சக்குபாய் யார் வீட்டுப்பெண் என்று சாதியைக்காட்டி காதலை மறுத்து விடுகிறாள். மேலும், தன் பிள்ளை தன் பேச்சை மீறக்கூடாது என்பதற்காக அவனுக்கு தங்கள் உறவு ஏதுவுமே

இல்லையென்றும் தன்னுடைய சொத்து எதுவுமே அவனுக்கில்லையென்றும் கண்டிப்புடன் கூறிவிடுகிறாள்.

தாயின் பிடிவாதத்தைக் கண்ட மாணிக்கம். நான் சக்குபாயை மணக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில், வாடகை சைக்கில் எடுத்துக்கொண்டு ஊர் ஊராக கற்றுவது, வீட்டுக்கு வராமலிருப்பது, மது அருந்துவது, சீட்டாடுவது என்று தீய பழக்கத்துக்கு ஆளாகிவிடுகிறான்.

தாய்மையுணர்வு

மாணிக்கத்தின் இந்த நிலையைக் கண்டு வேதனைப்பட்டு அவளுடைய தாய் வீட்டு தெய்வமான மாடஞ்சாமியை அழைத்து பூசை வைத்து அருள் வாக்கு கேட்க, சாமி வந்த கோவிந்து,

அவன் என்னையும் கேக்கமாட்டான் ஒன்னயும் கேக்க மாட்டான், அவாப்போயி அழிச்சிடப் பாக்குறான். வுடாத அவன வுடாத வுட்டயின்னா பெயிடும், எல்லாம் பெயிடும்" க.தமிழ்ச்செல்வி மாணிக்கம் 1-57

என்று கூறிவிடுகிறது. மாணிக்கத்தின் விருப்பப்படி விட்டுவிட்டால் அவன் வாழ்க்கை வீணாகிவிடும் என்று சொல்லவே மாணிக்கத்தின் காதலுக்கு மறுப்பு கூறி உறுதியாய் மறுப்பு கூறி விடுகிறாள் தங்கத்தாச்சி.

தன் ஒரே மகளின் வாழ்க்கை நல்லபடியாய் அமைய வேண்டுமே என்ற எண்ணம் மிகுந்தவளாய் அவனுக்கு நல்ல பெண்ணாய்ப்பார்த்து திருமணம் முடிக்க வேண்டுமென நினைக்கிறாள்.

தன் மகன் தீயப்பழக்கங்களுக்கு அடிமையாகி அவன் வாழ்க்கை வீணாய்ப்போகக் கூடாது. அவனுக்கு ஒரு துணையைத் தேடி வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில், தாயில்லாமல் தன் பாட்டியிடம் வளர்ந்த செல்லாயியை மாணிக்கத்துக்கு பேசி முடிக்கிறாள்.

"காதுக்கு சொருவு தொங்கமாட்டான் மாட்டலு, கழுத்துக்கு ரெட்டவம் சங்கிலிப் போட்டு கட்டிக்கிட்டுப் போறம், ஓங்க பொண்ணக் குடுங்க". க.தமிழ்ச்செல்வி மாணிக்கம் -75

என்று கேட்டு திருமணம் முடிக்கிறாள்..

மாமியார் என்னும் அதிகாரம்

தங்கத்நாச்சித் திருமணம் முடிந்து வந்தப்பின் செல்லாயியின் மீது இருந்த கருணை உணர்வு மாறி விடுகிறது. தன்னிடம் சொல்லாமல் அவர்கள் ஊரைவிட்டு சென்றதால் கோபமடைகிறாள். சக்குபாயைத் திருமணம் செய்ய தன் சம்மதத்தை எதிர்பார்த்து காத்திருந்த ஊரைவிட்டு செல்லப்போகிறோம் என்றோ தனிக்குடித்தனம் பண்னணப் போகிறோம் என்றோ தன்னிடம் மகனும், மருமகளும் சொல்லாமல் சென்றதால் கோபம் கொள்கிறான்.

மகன்ஊர் ஊராகச் சுற்றிவிட்டு மீண்டும் தன்னிடம் வந்து வாழ இடம் கேட்கும் அவர்கள் மீது பரிதாபம் வரவில்லை நங்கத்தாச்சிக்கு மாறாக கோபமே வருகிறது அந்தக் கோபத்தில் அவர்களை வேண்டுமென்றால் மாட்டுக் கொட்டகையில் சேர்க்க மறுத்துவிடுகிறாள். தங்கச் சொல்கிறாள்.

நாம் நேடிக்கட்டிக்கொண்டு வந்த பெண் நம்மளையே மதிக்கவில்லையே என்ற கோபம் செல்லாயியின் மீது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

தன் மகன் செய்யும் தவறுகளையெல்லாம் மன்னிக்கும் தாய் மனம், மருமகள் என்று வகும் போது மன்னிக்க மறுக்கிறது. தன் வீட்டையும், கணவளையும் நிலத்தையும், சொத்து பத்துக்களையும் வைத்து நிர்வாகம் செய்து தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவள்.ஆளுமை, அதிகாரம் செய்தவள் தன் நிலையிலிருந்து மாறவேயில்லை. தன் கடைசி காலத்தில் உடல்நிலை முடியாமல் போன போது கூட பிள்ளையிடம் வரவில்லை. தனியாகவே கிடந்தாள் மாணிக்கமும் செல்லாயியும் தான் இவளுடைய நிலையை கேள்விப்பட்டு வந்து பார்த்தார்கள். தங்கத்தாச்சி கடைசி வரை செல்வச்செழிப்பில் வாழ்ந்து, அதிகாரத்தோடும், ஆளுமையோடும், இருந்து மறைவதாக படைக்கப்பட்டுள்ளாள்.

செல்லாயி

மாணிக்கத்தின் மனைவி தாயில்லாமல் வளர்ந்திருந்தாலும் தான் திருமணமாகி வந்த இடத்தில் கணவனின் பாராமுகத்தையும், வெறுப்பையும் கண்டு துவண்டு விடாமல் மாமியார், நாத்தனார்களின் கொடுமையையும் எதிர்த்துப் போராடி வாழ்கிறாள். தன் கணவன் நேசித்த பெண் தற்கொலை செய்துகொண்டு இறந்து விட்டாள். என்பதை அறிந்து மிகவும் வேதனைப்படுகிறான்.

இல்லற வாழ்க்கையின் கடமைகளிலிருந்து தவறாமல், மாணிக்கம் வீட்டை விட்டு சென்றபோதும், மனம் தளராமல் தன் உழைப்பையே நம்பி வாழ்கிறாள். வறுமையோடு இருந்தபோதும் மாமியாரிடமோ. தன் தந்தை வீட்டிற்க்கோ செல்லவில்லை. அடுத்தவர்களின் வயல்களில் கூலி வேலைசெய்து தன் பிள்ளைகளை காப்பாற்றுகிறாள். பொறுப்பில்லாமல் சுற்றும் மாணிக்கத்திடம் அவள் சண்டை போடுவதில்லை. எப்பொழுதும் கணவனை அவன் வெறுக்கவுமில்லை; மாணிக்கம் குடித்துவிட்டு தன்னை அடிக்கும்போது கூட அவனை குறைகூறாமல் சாராயக்கடை வைத்திருப்பவர்களையே குறைசொல்லுகிறாள். கணவனும் மாமியாரும், தன்மீது சந்தேகம் கொண்டு பேசும் போது மட்டும் இறந்து விடலாம். என்று எண்ணுபவள். அவ்வாறு செய்து விட்டாள் அவர்கள் சொன்னது உண்மை என்றாகிவிடும் என்று அந்த எண்ணத்தை கைவிடுகிறாள். சக்குபாயை மணக்கப் போவதாக மாணிக்கம் கேட்கும் போது அவனை எதிர்த்து ஒப்பாரி வைக்கிறாள். மாணிக்கம் செல்லாததால் சக்குபாய் தூக்கிட்டு இறந்துவிட்டாள் என்றவுடன் அதிர்ச்சியில் நிலை குலைந்து போகிறாள் செல்லாயி

"நம்மலால அவ்வொள போவவுடாமப் பண்ணுனம். பெண்ணோட பாவம் பின்னால சுத்தும் பாவொளே யாங்கொடுமய எங்க கோயி சொல்லுவன் பொண்ணோட பாவம் சும்மா வுடுமா? நானும் ரெண்டு பொண்ணுவள பெத்து வச்சிருக்குறனே. க.தமிழ்ச்செல்வி மாணிக்கம் - 170

என்று புலம்புகிறாள். தன் கண்வளை தன்னுடன் இருந்து பிரித்து இரண்டாவதாய் மணந்து கொள்ள நினைத்தவள் என்ற எண்ணம் கூட இல்லாமல் சக்குபாயின் இறப்பிற்கு தான்தான் முழுக்க காரணம் என்பது போல் எண்ணி வகுத்தப்பட்டாள். தனக்கு போட்டியாக தன் வாழ்க்கையை பகிர்ந்துகொள்ள வந்த பெண் மீதுகூட இரக்கம் காட்டும் பெண்ணாக செல்லாயி பெண் பாத்திரம் அமைகிறது. கணவன் செய்யும் தவறுகளுக்குக்கூட நான் காரணம் என்பது போல் எண்ணிக்கொண்டு வாழும் ஒரு அபலைப் பெண்ணாக அமைகிறது செல்லாயிபார்கிறம்

முடிவுரை.

செல்லாயி என்ற பெண் சிறு வயதிலிருந்து தாயின் அரவணைப்பு இன்றி வளர்ந்து, புதிய குடும்பத்தில் எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து, பிள்ளைகளை வளர்க்க தனியாகப் போராடியவள். அவள் அனுபவித்த வேதனைகள் பெண்ணியத்தின் உண்மையான முகத்தை வெளிப்படுத்துகின்றன. இந்தக் கதையின் நாயகன் மாணிக்கமாக இருந்தாலும், செல்லாயியின் துயர வாழ்க்கையை மையமாகக் கொண்டு கதையை நகர்த்தியுள்ளார் எழுத்தாளர் சு. தமிழ்ச்செல்வி.

துணை நூற்பட்டியல்

1.சு.தமிழ்ச் செல்வி மாணிக்கம், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை

திருத்திய இரண்டாம் பதிப்பு - டிசம்பர் 2022.

2. முனைவர். இரா. பிரேமா பெண்ணியம் -கள நிலையம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

3. ச. முத்துச் சிதம்பரம் பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை முதற் பதிப்பு 2017

ஆண்டாள் பாசுரங்களில் உருக்காட்சிகள்

முனைவர் யு.துர்காதேவி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117

ஆய்வுச்சுருக்கம்

ஆண்டாளின் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகிய பாசுரங்களில் இத்தகைய உருக்காட்சிகள் பரவலாக இடம்பெற்றுள்ளன. இதனால், அவற்றைப் பயிலும் அனைவரின் மனதில் உயிர்ப்பான காட்சிகள் தோன்றி, கவிதை அனுபவம் செறிவடைகிறது. மேலும், இவ்வுருக்காட்சிகள் பக்தி உணர்வின் உச்சிக்குக் கொண்டு சேர்க்கும் வல்லமையையும் உடையதாக அமைகின்றன. ஆண்டாள் பாசுரங்களில் உருக்காட்சிகள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்

உருக்காட்சி, கட்புலம், ஒலி, சுவை, நாற்றப்புல, வெப்பம்.

முன்னுரை

உருக்காட்சி என்பது, கவிஞர் சொற்களின் வழியாக வாசகனின் புலன்களை ஈர்க்கும் வகையில் உருவாக்கும் ஒரு முக்கியமான இலக்கிய உத்தியாகும். புலன்களின் மூலம் படிப்பவரின் உணர்வுகளையும் அறிவையும் தூண்டி எழுச்சியுறச் செய்யும் திறன் இதற்குண்டு. இதனை முன்னிட்டு, கவிதைகளில் உருக்காட்சிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன என அறிஞர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஆங்கிலத் திறனாய்வாளரான பாட்டன், தனது கவிதைத் திறனாய்வு என்ற நூலில், புலன்களை நோக்கி உரையாடும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு உருக்காட்சிகள் பலவகைப்படுகின்றன எனக் கூறுகிறார். அவை செவிப்புல உருக்காட்சிகள், கண்புல உருக்காட்சிகள், சுவைப்புல உருக்காட்சிகள், மணப்புல உருக்காட்சிகள்,

தொடுபுல உருக்காட்சிகள், இயக்கப்புல உருக்காட்சிகள் மற்றும் மரபுவழி உருக்காட்சிகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

சொற்கள் என்பது எண்ணங்களுக்கும் புலனுணர்வுகளுக்கும் இடையிலான குறியீடுகளாக அமைகின்றன. ஒரு கவிதையை வாசிக்கும் போது அதிலுள்ள சொற்களும் சொற்றொடர்களும் வாசகனின் மனக்கண்ணில் பலவிதமான காட்சிகளை உருவாக்குகின்றன. இவ்வாறு உருவாகும் உருக்காட்சிகள், புலன்களின் மட்டத்தில் மட்டுமல்லாமல், கருத்துணர்வின் நிலைக்கும் ஊக்கமளித்து, கவிதை அனுபவத்தை ஆழப்படுத்துகின்றன.

மேலும், சில சொற்கள் வாசகனின் மனதில் ஏற்கனவே பதிந்துள்ள (கட்டுண்ட) காட்சிகளையும், புதிய (விடுதலை) காட்சிகளையும் உருவாக்குகின்றன. இவ்விரு வகை உருக்காட்சிகளும் கவிதையை உணர்ந்து ரசிப்பதற்கு இன்றியமையாத கூறுகளாக விளங்குகின்றன.

கட்புல உருக்காட்சிகள்

பல்வேறு உருக்காட்சிகளில், கண்புலத்தை (காட்சி உணர்வை) ஈர்க்கும் உருக்காட்சிகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. இத்தகைய காட்சியுருக்காட்சிகளே வாசகர்களின் மனதில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதற்குக் காரணமாக, கண்புல உணர்வை ஏந்தும் நரம்பு அமைப்பு மற்ற

புலன்களை விட வலிமையானதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆண்டாள் பாசுரங்களில் கண்புலத்தை ஈர்க்கும் பல உருக்காட்சிகள் காணப்படுகின்றன.

“எழிலுடைய அம்மனைமீர்! என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழில்
எழுகமலப் பூவழகர்…”1

என்ற பாசுரத்தில், திருமாலின் திருமேனி அழகு பல கோணங்களில் சித்தரிக்கப்படுகிறது. இங்கு “இன்னமுதர்” என்பது சுவைப்புல உருக்காட்சியாக அமைந்தாலும், “குழலழகர்”, “வாயழகர்”, “கண்ணழகர்”,

“கமலப்பூவழகர்” போன்றவை அனைத்தும் கண்புல உருக்காட்சிகளாகும். இவ்வாறு பல புலன்கள் இணைந்ததால், இது கலவை உருக்காட்சியாகவும், கற்பனை நயத்துடனும் விளங்குகிறது.

செவிப்புல உருக்காட்சிகள்

செவியால் உணரப்படும் ஒலிகளின் மூலம் மனதை ஈர்க்கும் உருக்காட்சிகள் செவிப்புல உருக்காட்சிகள் ஆகும். ஆண்டாளின் திருப்பாவை பாசுரங்களில் இத்தகைய உருக்காட்சிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

“கீசுகீசு என்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? …
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசைப்படுத்த தயிரரவம் கேட்டிலையோ?” 2

என்ற பாசுரத்தில், பலவிதமான ஒலிக் காட்சிகள் அடுக்காக வருகின்றன. இதில், “கீசு கீசு” எனும் பறவைகளின் குரல், ஆனைச்சாத்தனின் பேச்சொலி, பெண்களின் கைகலக்க ஒலி, தயிர் கடைக்கும் ஓசை, இறைவனைப் பாடும் குரல் இவை அனைத்தும் செவிப்புல உருக்காட்சிகளாகும்.

அதே நேரத்தில், “வாச நறுங்குழல்” என்பது மணப்புல (நாற்றப்புல) உருக்காட்சியையும், “தேசமுடையாய்” என்பது கண்புல உருக்காட்சியையும் உணர்த்துகின்றது. எனவே, இப்பாசுரம் பல புலன்கள் கலந்து அமைந்த கலவை உருக்காட்சியாக விளங்குகிறது.

“புள்ளும் சிலம்பின காண்…
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ”3

என்ற இடத்தில், சங்கின் ஒலி மற்றும் பறவைகளின் கீச்சு செவிப்புல உருக்காட்சிகளாகவும், “வெள்ளை விளிசங்கு” கண்புல உருக்காட்சியாகவும் அமைகிறது.

சுவைப்புல உருக்காட்சிகள்

நாவால் அனுபவிக்கப்படும் சுவையை உணர்த்தும் உருக்காட்சிகள் சுவைப்புல உருக்காட்சிகள் ஆகும். ஆண்டாள் பாசுரங்களில், இறைவனை “அமுது” எனக் குறிக்கும் இடங்களில் இத்தகைய உருக்காட்சிகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

“ஆரா அமுத அனையான் தன்
அமுத வாயில் ஊறிய
நீர் தான் கொணர்ந்து…”4
“ஆண்டவனும் அமுதன்; அவன் வாயில்
ஊறும் உமிழ் நீரும் அமுதம்” 5

என்ற அடிகளில், இறைவன் முடிவில்லா அமுதமாகவும், அவன் வாயில் ஊறும் நீரே அமுதமாகவும் சித்தரிக்கப்படுகிறது. இதன் மூலம், இறைவனை அனுபவிப்பது சுவை உணர்வின் உச்சமாகக் கூறப்படுகிறது. ஆண்டாளின் காதல் உணர்வு இங்கு சுவைப்புல உருக்காட்சியின் வழியாக வெளிப்படுகிறது.

நாற்றப்புல உருக்காட்சிகள்

மணத்தை உணர்த்தும் வகையில் அமைந்துள்ள உருக்காட்சிகள் நாற்றப்புல உருக்காட்சிகள் எனப்படுகின்றன.

“கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?”6

என்ற பாசுரத்தில், ஆண்டாள் திருச்சங்கத்திடம் வினவுவதன் மூலம், கண்ணபிரானின் வாயின் மணத்தையும் சுவையையும் ஒப்பிடுகிறார்.

இங்கு கருப்பூரத்தின் வாசனையும், தாமரைப்பூவின் மணமும் எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு, இறைவனின் தெய்வீக மணம் சித்தரிக்கப்படுகிறது. இதனால், நாற்றப்புலத்துடன் சேர்ந்து சுவைப்புல உருக்காட்சியும் கலந்துள்ளது. மேலும்,

“கத்தம் கமழும் குழலி”7

என்ற அடியிலும் மணத்தை உணர்த்தும் நாற்றப்புல உருக்காட்சி தெளிவாகக் காணப்படுகிறது.

இவ்வாறு, ஆண்டாள் பாசுரங்களில் பல்வேறு புலன்களைத் தூண்டும் உருக்காட்சிகள் நயமுடன் அமைந்து, அனைவரின் மனதில் உயிர்ப்பான அனுபவத்தை உருவாக்குகின்றன.

தொடுபுல (நொப்புல) உருக்காட்சிகள்

தொடுதலின் மூலம் அனுபவிக்கப்படக்கூடிய உணர்வுகளை வெளிப்படுத்தும் உருக்காட்சிகள் தொடுபுல (அல்லது நொப்புல) உருக்காட்சிகள் எனப்படுகின்றன. இவ்வகை உருக்காட்சிகளும் ஆண்டாள் பாசுரங்களில் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

"குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டின் மேல்
மெத்தென்ன பஞ்சசயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா"8

என்ற அடிகளில், காட்சிநயமும் தொடுபுல உணர்வும் இணைந்து வெளிப்படுகின்றன. இங்கு "குத்துவிளக்கு எரிதல்", "கோட்டுக்கால் கட்டில்", "நப்பின்னையின் அணைப்பு" போன்றவை கண்புல உருக்காட்சிகளாக அமைய, "மெத்தென்ற பஞ்சசயனம்" என்பது மென்மையான தொடு உணர்வைத் தரும் தொடுபுல உருக்காட்சியாக அமைகிறது. இவ்வாறு பல புலன்கள் கலந்து அமைந்ததால், இப்பாசுரம் கலவை உருக்காட்சியாகவும், அனுபவ நயத்தை உயர்த்துவதாகவும் விளங்குகிறது. மேலும்,

"செற்றார்க்கு வெப்பங் கொடுக்கும் விமலா"9

என்ற தொடரில் "வெப்பம்" எனும் உணர்வு உடலால் உணரப்படும் தொடுபுல அனுபவத்தை உணர்த்துகிறது. ஆகையால், இது தொடுபுல உருக்காட்சியின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். நாச்சியார் திருமொழியில் இடம்பெறும்,

"காமத்தீயுள் புகுந்து கத்துவப்பட்டு இடைக்கங்குல்…"10

என்ற அடிகளில், ஆண்டாள் தன் காதல் வேதனையை தீயினால் எரியப்படுவது போன்ற அனுபவத்துடன் ஒப்பிட்டு வெளிப்படுத்துகிறார்.

இங்கு “காமத்தீ” என்ற சொல் உடலை எரிக்கும் வெப்பத்தை உணர்த்தும் தொடுபுல உருக்காட்சியாக அமைகிறது. இதன் மூலம், ஆண்டாள் தனது உள்ளார்ந்த காதல் உணர்வை உடல் உணர்வுகளோடு இணைத்து தீவிரமாக வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு, ஆண்டாள் பாசுரங்களில் தொடுபுல உருக்காட்சிகள் உணர்ச்சியின் ஆழத்தையும் அனுபவத்தின் தீவிரத்தையும் வெளிப்படுத்தும் முக்கிய கூறுகளாக விளங்குகின்றன. உருக்காட்சி என்பது, சொற்களின் வழியாகப் புலன்களுக்கு இன்பம் தரும் காட்சிகளை உருவாக்கும் உத்தியாகும். இது அனைவரின் உணர்ச்சியையும் சிந்தனையையும் தூண்டுகின்றது. ஆகவே கவிதைகளில் உருக்காட்சிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. ஆண்டாள், திருப்பாவை. ப.608
2. மேலது. பா.7
3. மேலது. பா.6
4. நா.தி.பி.. பா. 630
5. மேலது. பா.567
6. ஆண்டாள், திருப்பாவை, பா.18
7. மேலது, பா.19
8. மேலது, பா.20
9. நா.தி.பி.. பா.578
10. ஆண்டாள், திருப்பாவை, பா.4

திரையிசைப் பாடல்களில் நிலையாமை

பா கௌசல்யா தேவி, முனைவர்பட்ட ஆய்வாளர்,
முனைவர் யு.துர்கா தேவி உதவிப் பேராசிரியர்& நெறியாளர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை – 117

ஆய்வுச்சுருக்கம்

சிற்றிலக்கியக் கூறுகளில் ஒன்றான முதுகாஞ்சியில் இடம் பெற்றுள்ள மனிதனின் வாழ்க்கை நிலையாமை திரையிசைப் பாடல்களில் எப்படிப் பொருந்தியுள்ளது என்பதை இவ்வாய்வு நமக்கு எடுத்துரைக்கிறது. யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை,உயிர் நிலையாமை, இளமை நிலையாமை போன்ற நிலையாமைத் தத்துவப் பாடல்கள் திரையிசைப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளது. சிற்றிலக்கியங்களில் ஒன்றான முதுகாஞ்சி. இம்முதுகாஞ்சி இலக்கியம் திரையிசைப்பாடல்களில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்

உலகம், வாழ்க்கை , செல்வம், அறம் இளமை

முன்னுரை

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் முக்கூறுகளையும் ஒருங்கே கொண்டவை தமிழ்த் திரைப்படங்கள். நாடகத் தமிழின் அறிவியல் வளர்ச்சி தான் திரைப்படங்கள் எனலாம். இந்தத் திரைப்படங்களின் வெற்றிக்குப் பெரிதும் துணை நிற்பவை அவற்றில் இடம் பெறும் திரையிசைப்பாடல்கள். இவை கதைப்போக்கிற்குத் துணை நிற்பவை; இயக்குநரின் கதைக்கேற்பப் பாடலாசிரியர்களால் இயற்றப்படுபவை. இந்தப் பாடலாசிரியர்கள் தாம் கற்ற இலக்கியங்களைக் கொண்டும் தாம் பெற்ற அனுபவங்களைக் கொண்டும் பாடல்களை இயற்றுகின்ற போது அவை ரசிகர்களின் மனத்தில் நீங்கா

இடம் பிடித்து விடுகின்றன. அது மட்டுமல்ல, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளையும் பேசும் இலக்கியமாகத் திகழ்கின்றன. இந்த நாற்பொருளில் பொருளும் இன்பமும் நிலையில்லாதவை; நிலையில்லாதவற்றை நிலையானதாக மாற்ற, அறம் செய்ய வேண்டும். அப்போது தான் வீடுபேறு கிடைக்கும் என்கிறது

முதுகாஞ்சி

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான இது , முதியோர் இளைஞருக்கு இளமையின் நிலையாமையை எடுத்துக் கூறி அறிவுரை கூறும் பொருளில் அமையப் பெற்றது எனப் “ பிரபந்த தீபிகை” கூறுகிறது.

முதுகாஞ்சியின் முக்கிய நோக்கம் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை ஆகியவற்றை விளக்கி அறம் செய்ய வலியுறுத்துவதே ஆகும். தொல்காப்பியரும் இதனைப் புறத்திணையில் ஒன்றான காஞ்சித் திணையின் ஒரு துறையாகக் கூறியுள்ளார்.

“ கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்” 1

என்பது நூற்பா. அதாவது முன்னோர்கள் வாழ்பவர்களுக்குக் கூறிய அறிவுரை எனத் தொல்காப்பியர் இலக்கணம் கூறுகிறார். பிரபந்த தீபம் என்ற நூல் முதுகாஞ்சி என்பது

“ முதுமையை மொழிதல்” 2

என்கிறது.

” கழறு இளமை ஒரீஇ அறிஞர் இளமையுறு
அறிவின் மாக்கட்கு அறைதல் முதுகாஞ்சி” 3

என இலக்கணம் கூறுகிறது பிரபந்த தீபிகை. இதன்படி, முதுகாஞ்சி என்பது அறம் , பொருள், இன்பம், வீடுபேறு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இளமையிலேயே உணர்த்தி, நல்லறங்களை உலகிற்கு எடுத்துரைப்பதே இதன் நோக்கம் எனலாம்.

திரையிசைப்பாடல்களில் முதுகாஞ்சி

” நில்லாத வற்றை நிலையின என்றுணரும்

புல்லறி வாண்மை கடை”4

என்கிறது வள்ளுவம். நிலையில்லாதவற்றை நிலையானவை என மயங்கி உணரும் புல்லறிவு உடையவராக இருப்பதே வாழ்க்கையின் இழிந்த நிலை என்பது இதன் பொருள். இந்த இழிந்த வாழ்வை வாழாமல் கடைத்தேற வேண்டுமாயின் எவை நிலையில்லாதவை என்பதை நாம் உணர்ந்து செயல்படவேண்டும். இளமை நிலையில்லாதது ; யாக்கை நிலையில்லாதது; உயிர் நிலையில்லாதது; செல்வம் நிலையில்லாதது.

” நீர்க்குமிழிக்கு நிகரென்பர் யாக்கை நில்லாது செல்வம்
பார்க்குமிடத்து அந்த மின்போலும் என்பர்” 5

என்கிறது கந்தரலங்காரம். இந்த உடல் இருக்கிறதே அது நீரில் தோன்றும் குமிழி போன்றது. விரைவில் அழிந்து போகும். செல்வம் நிலையில்லாதது; மின்னல் வெட்டுவ்து போலத் தோன்றி மறையக்கூடியது என்பது இதன் பொருள்.

ஆடியடங்கும் வாழ்க்கையடா

ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிய மனிதன் எவனும் ஒரு நாள் அடங்கித் தான் போவான். பிறகு எது சொந்தம் அவனுக்கு? ஆறடி நிலம் தான். வேறென்ன? நீர்க்குமிழி என்றொரு திரைப்படத்தில் உவமைக் கவிஞர் சுரதா எழுதுகிறார் இப்படி:

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
முதலில் நமக்குக்கெல்லாம் தொட்டிலடா
கண் மூடினால் காலில்லாக் கட்டிலடா

பாடையைக் காலில்லாக் கட்டில் என்கிறார்.என்ன அருமையான உவமை என்று வியந்து போகிறோம். உவமைக் கவிஞரல்லவா? ஆனால் அவரே சொல்கிறார் இது புறநானூறிலிருந்து எடுக்கப்பட்டது என்று.

“கால்கழி கட்டிலிற் கிடப்பித் தூவெள்ளறுவை போர்ப்பித்திலதே” 6

என்பது புறநானூறு. தொடர்கிறது பாடல்.

இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை

இறந்தவன் அல்லவோ திறக்கின்றான்

இறந்து போனபின்னாலும் ஒருவன் செயல் செய்ய முடியும் என்றால் அது இது தான். இருப்பவர் கண்களைத் திறப்பது தான்.

வகுப்பார் அதுபோல் வாழ்வதில்லை

வந்தவர் யாருமே நிலைத்ததில்லை7

இந்த உலகின் சிறப்பே அது தானே?

போனால் போகட்டும் போடா

இழப்பின் உச்சத்தில், விரக்தியின் உச்சத்தில் மரியாதையாவது, மண்ணாவது. போனால் போகட்டும் போடா! என்று தான் தொடங்குகிறது பாடல். திரைப்படம்: பாலும் பழமும். எழுதியவர் கவியரசு கண்ணதாசன்.

" போனால் போகட்டும் போடா!

பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?

போனால் போகட்டும் போடா!"

இந்தப் பூமிக்குச் சிறப்பே நிலைத்து எவனும் இருந்ததில்லை என்பது தானே?

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்

பெருமை உடைத்திவ் வுலகு" 8

என்கிறாரே வள்ளுவர். தொடர்கிறது பாடல். நமக்குப் பிறந்த நாள் தெரியும்; இறக்கப் போகும் நாள்? நல்ல வேளை! தெரியாது. சரி! இறந்த பிறகு எங்கு போகிறோம்? அதுவும் தெரியாது. அழகாகத் தொடர்கிறார் கவிஞர்.

" வந்தது தெரியும் போவது எங்கே?

வாசல் நமக்கே தெரியாது"

இந்த மண்ணில் இறப்பே இல்லையென்றால்? அன்றாடம் பலர் இறந்து கொண்டிருக்கும் போதே ஜனத் தொகை அதிகம் என்று பேசுகிறோம்.

இதில் மரணம் வேறு இல்லையென்றால்? யோசிக்கவே பயமாக உள்ளது.கவிஞரின் வரி பாருங்கள்,

” வந்தவரெல்லாம் தங்கி விட்டால்- இந்த
மண்ணில் நமக்கே இடமேது?”

கவிஞர் சிறந்த வியாபார மரபில் வந்தவர்; இந்த வாழ்க்கையை வியாபாரமாகப் பார்க்கிறார். இதில் வரவு எது? பிறப்பு தான்; செலவு? மரணம் தான் செலவு.

” வாழ்க்கை என்பது வியாபாரம்- வரும்
ஜனனம் என்பது வரவாகும்-அதில்
மரணம் என்பது செலவாகும்.”

சரி! இந்தப் பிறப்பாவது முதலா? என்றால் அதுவும் இல்லை; அதுவும் கடன்; இரவல் வாங்கி வந்தது. கொடுத்தவன் கேட்பானா இல்லையா?என்ன ஒன்று! எப்போது கேட்பான் என்று தெரியாது. ஆனால் கட்டாயம் கேட்பான். இந்த உண்மையைத் தான் பலரும் மறந்து போகின்றனர். என்ன செய்ய? தர முடியாது என்றால் விட்டு விடுவானா? உறவு சொல்லி அழுதால் உயிர் மீண்டும் வந்து விடுமா என்ன? யார் அழுதாலும் அழாவிட்டாலும் போனது போனது தான்.

கூக்குரல் போட்டால் வருமா? வராது. கோர்ட்டுக்குப் போனால் கேஸ் ஜெயிக்குமா? ஜெயிக்கவே ஜெயிக்காது. யாரும் வெளியேறவே முடியாத அந்தக் கோட்டைக்குள் நுழைந்து விட்டால் ? திரும்பவே திரும்பாது.

” இரவல் தந்தவன் கேட்கின்றான் - அதை
இல்லை என்றால் அவன் விடுவானா?
உறவைச் சொல்லி அழுவதனாலே
உயிரை மீண்டும் தருவானா?
கூக்குரலாலே கிடைக்காது- இது
கோர்ட்டுக்குப் போனால் ஜெயிக்காது- அந்தக்
கோட்டையில் நுழைந்தால் திரும்பாது

போனால் போகட்டும் போடா!" 9

கவியரசு கண்ணதாசனின் சிறந்த பாடல்களுள் இதுவும் ஒன்று.

கனவு காணும் வாழ்க்கை

இந்த வாழ்க்கையே ஒரு கனவு. அதில் எதற்கு இன்னொரு கனவு? ஆனால் கனவு காணாமல் இருக்க முடியாதாமே? கவிஞர் இளந்தேவன் இப்படி எழுதுகிறார்:

" போயும் போயும் கனவிலே

போதை கொள்ளும் மனிதனே

நீயும் கூடக் கனவடா!

நினைக்க நேரமில்லையா? 10

நீங்கள் கேட்டவை என்றொரு திரைப்படம். அதில் கவிஞர் வைரமுத்து எழுதுகிறார் இப்படி:

" கனவு காணும் வாழ்க்கை யாவும்

கலைந்து போகும் கோலங்கள்"

கோலங்களை ஏன் சொன்னார் என்றால் வாழ்க்கையைப் போலவே கோலங்களும் நிரந்தரமல்ல. தினம் தினம் புதுக் கோலம். பிறந்த தேதி எப்படி நிச்சயமோ அப்படி இறக்கும் தேதி சர்வ நிச்சயம். அதை நாம் வசதியாக மறந்து விடுகிறோம்.இந்த அற்ப வாழ்க்கையில் தான் எவ்வளவு ஆசைகள்? எவ்வளவு ஆணவங்கள்?, எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்? கவிஞர் தொடர்ந்து எழுதுகிறார்:

" பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி

இருக்கின்றதென்பது மெய் தானே?

ஆசைகள் என்ன ?ஆணவம் என்ன ?

உறவுகள் என்பதும் பொய் தானே?

காயமே இது பொய்யடா! வெறும் காற்றடைத்த பையடா! என்பார்கள். கவிஞரின் பார்வையிலே இந்த உடம்பு வெறும் கனவுகள் வாங்கும் பையாம்.அதில் குறைந்த காலமே இருக்கும் வாலிபம் என்பதும் பொய்யாம். கவிஞரின் வரிகளிலேயே பார்க்கலாம்:

" உடம்பு என்பது உண்மையில் என்ன ?
கனவுகள் வாங்கும் பை தானே?
காலங்கள் மாறும் கோலங்கள் மாறும்
வாலிபம் என்பது பொய் வேஷம்" 11

இந்த உலகம் நிலையற்றது, இதில் வாழ்க்கை மட்டும் எப்படி நிலையானதாக இருக்கமுடியும்? ஆனால் பைத்தியங்கள் பலரும் இந்த வாழ்க்கை நிலைக்கும் என நினைக்கிறார்களே! என்ன சோகம்! இதனைக் கவிஞர் ஆபாவாணன்

" நிலை மாறும் உலகில்
நிலைக்குமென்ற கனவில்
வாழும் மனித ஜாதி" 12

என்று எழுதுகிறார் தம் படமான ஊமை விழிகள் என்ற திரைப்படத்தில்.

ஆடாதடா ஆடாதடா மனிதா

ஆணவத்தில் மிகவும் ஆடும் மனிதர்களைப் பார்த்துக் கவிஞர் வாலி, செந்தூரப்பாண்டி என்ற திரைப்படத்தில்

" ஆடாதடா ஆடாதடா மனிதா ரொம்ப
ஆட்டம் போட்டா அடங்கிடுவ மனிதா!" 13

என்று எழுதுகிறார். கவிஞர் சிநேகன் அதிஅற்புதமான பாடலை மௌனம் பேசியதே என்ற திரைப்படத்தில் தருகிறார்.

"ஆடாத ஆட்டமெல்லாம்
போட்டவங்க மண்ணுக்குள்ள
போன கத உனக்குத் தெரியுமா?

எனத் தொடங்குகிறது பாடல். வரும் போது என்ன கொண்டு வந்தோம்? எதுவுமில்லை. போகும் போது என்ன கொண்டு போகப் போகிறோம்? அதுவும் எதுவுமில்லை. பிறகு எதற்கு இந்த ஆட்டமெல்லாம்? பாடலுக்குள்ளே தொடர்ந்து போகலாம்:

"நீ கொண்டு வந்ததென்ன?
நீ கொண்டு போவதென்ன?

உண்மை என்ன உனக்குப் புரியுமா?

இன்பமெங்கே? இன்பமெங்கே? என்று தேடி அலைகிறோம். இறுதித் தீர்ப்பு நாளிலே இறைவன் முன்னால் நிற்க வேண்டும், நாம் செய்த அனைத்திற்கும் பதில் சொல்லித் தீர வேண்டும் என்பதை மறந்து பாவங்களைச் செய்து குவிக்கின்றோம். இந்தப் பூமி கொஞ்சம் குலுங்கினால் கூட , நம் ஆட்டம் அவ்வளவு தான்.

"நித்தம் கோடி சுகங்கள் தேடி
கண்கள் மூடி அலைகின்றோம்
பாவங்களை மேலும் மேலும்
சேர்த்துக் கொண்டே போகின்றோம்
மனிதன் என்னும் வேடம் போட்டு
மிருகமாக வாழ்கின்றோம்
தீர்ப்பு ஒன்று இருப்பதை மறந்து
தீமைகள் செய்கின்றோம்.
காலம் மீண்டும் திரும்பாதே
பாதை மாறிப் போகாதே
பூமி கொஞ்சம் குலுங்கினாலே
நின்று போகும் ஆட்டமே" 14

எனப் போகிறது பாடல். பண்டைய இலக்கியமான முதுகாஞ்சி திரையிசைப் பாடல்களில் இன்னும் தொடர்கிறது என்பதற்கு வேறென்ன சான்று வேண்டும்?

முடிவுரை

இன்றைய இலக்கியமான திரையிசைப் பாடல்களில் அன்றைய இலக்கியமான முதுகாஞ்சியின் கருத்துகள் இடம் பெற்றிருப்பது பழமையைப் போற்றும் பண்பையும் அறச்சிந்தனைக்கு அழிவில்லை என்பதையும் வலியுறுத்துவதாக உள்ளது.

அடிக்குறிப்பு:

1 தொல்காப்பியம் -பொருள்- புறத்திணை -இளம்பூரணர் உரை பக்கம் 77

2 பிரபந்த தீபம் நூற்பா 89

3 பிரபந்த தீபிகை நூற்பா 30

4 திருக்குறள் எண் 331

5 கந்தரலங்காரம் பாடல் எண் 66

6 புறநானூறு பாடல் எண் 286

7 தமிழ்ப் பாடல் வரிகள்-இணைய தளம்.

8 திருக்குறள் -திருவள்ளுவர்- குறள் எண் 336

9 கவிஞர் கண்ணதாசன் திரையிசைப்பாடல்கள் தொகுதி 1 பக்கம் 339

10 இளந்தேவன் கவிதைகள் , பக்கம் 65

11 ஆயிரம் பாடல்கள்-வைரமுத்து-பக்கம் 158

12 தமிழ்ப் பாடல் வரிகள்-இணைய தளம்.

13 தமிழ்ப் பாடல் வரிகள்-இணைய தளம்.

14 தமிழ்ப் பாடல் வரிகள்-இணைய தளம

திணைக்கோட்பாட்டில் உரிப்பொருள் வளர்ச்சி சமூதாயம்

து. தீபா, முனைவர்ப்பட்ட ஆய்வாளர்,
முனைவர் அ.இருதயராஜ், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

ஆய்வுச்சுருக்கம்

தமிழர் வாழ்வியல் நிலம் சார்ந்தது. அவர்களது வாழ்வும் இயற்கைச் சூழலுடன் பின்னிப் பிணைந்தது. எனவே படைப்பாளி உலகியல் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு, தான் சார்ந்த முதலியவற்றை இயற்கை, சமூகம், வாழ்க்கை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் படைக்கின்றான். நிலமும் முறை பொழுதும் இலக்கியப் படைப்பின் பின்புலமாக அமைகின்றன. எனவே நிலம் சார்ந்த வாழ்வியல் கருத்துக்களை உள்ளடக்கிய திணைக் கோட்பாட்டைப் தமிழ் நவீன இலக்கியங்களின் வழி பகுப்புமுறை ஆய்வு தொகுப்பு முறை ஆய்வு விளக்கமுறை ஆகிய ஆய்வு முறைகளைப் பின்பற்றி விளக்கப்பெறுகின்றன.

திறவு சொல் புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல்,பிரிதல், சமுதாயம்,

முன்னுரை

இலக்கியங்கள் மக்களின் நாகரிக மேம்பாட்டையும், வாழ்வியல் சார்ந்த கொள்கைகளையும் வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. சங்க இலக்கியப் பாடல்கள் புலப்படுத்தும் ஐவகை நில அமைப்புக் கூறுகள், அந்நிலம் சார்ந்தவாழ்வியல் பதிவுகள், ஒழுக்க நெறிப்பாடுகள் அனைத்தையும் திணை என்ற சொல்லால் சங்கப் புலவர்கள் குறித்துள்ளனர். இதன்வழி ஒவ்வொரு திணைக்கும் உரிய மாந்தர்களும் பண்பாட்டு, வாழ்வியல் முறைகளில் தனித்தன்மைப் பெற்று

விளங்கியுள்ளதனை அறியமுடிகின்றது. சங்க இலக்கியங்களில் பதிவான உரிபொருள் தற்கால இலக்கியங்களில் எவ்வாறு பதிவாகியுள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திணை பொருள் விளக்கம்

திணை - என்பது முதற்பொருளான நிலத்தையும், மக்களின் நடவடிக்கைகளையும் குறிக்கும். திணை என்ற சொல் வீடு, நிலம், திண்ணை, இடம்,குடி,குலம்,ஒழுக்கம், பாடல், சூழலமைதி, ஐந்திணை ஆகிய பொருள்களில் வரும். அது நிலத்தைக் குறித்தது என்பதை,

"திணைதோறும் மரிஇய திணை நிலைப் பெயரே"

"திணிமணல் அடைகரை"

"மண்திணிந்த நிலனும்"

என்னும் பாடல் வழி அறியலாம். காலப்போக்கில் திணை என்ற சொல் குலத்தையும் குடியையும் குறித்து வந்தது என்பதை,

"வான் திணைப் புரையோர்"

"இத்திணைப் பிறத்தல்"

"மூத்த விழுத்திணை"

"விழுதிணை"

என்ற பாடல்களின் வரிகள் திணைக்கு வரையறை கொடுக்கப்படுகின்றன.

திணைக்கோட்பாடு

பண்டைத் தமிழருடைய இலக்கிய மரபுகளையும் கோட்பாடுகளையும் அறிந்த தொல்காப்பியர், முதல்பொருள் கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றும் அமையத் தோன்றும் பாடலே திணைப்பாடல் என்பர். இதனை,

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை"

என்ற நூற்பா வழி அறியலாம்.

திணை என்பது முதற்பொருள் என்ற நிலம், பொழுதுகள்; கருப்பொருள்கள், உரிப் பொருள்கள் இணைந்த தன்மையையே குறிக்கிறது. தன் காலத்துத் திணை இலக்கியங்களைக் கருத்தில் கொண்டு தொல்காப்பியர் 'பாடலுட் பயின்று' வந்துள்ள முதல் கரு உரிப்பொருள்களை ஆராய்ந்துப் பார்த்தால் பாடும்போது இவை மூன்றும் ஒன்று மற்றதைவிடச் சிறந்து அமையும் என்பது அவர் கருத்தாக உள்ளது.

ஒரு உணர்வு பற்றிக் குறிப்பிடப்படும் இடத்தில்/பாடலில் வேறொரு உணர்வுக் குரிய கருப்பொருள்களும், பெரும்பொழுது, பொழுதுகளும் வரலாம். இவ்வாறு மாறி வரும் கருப் பொருள், பெரும்பொழுது, சிறுபொழுதுகள் எந்த உணர்வைப் பாடல் சுட்டுகிறதோ அந்தத் திணைக்குரியதாக அவற்றைக் கொள்ள வேண்டும்

உரிப்பொருள்

ஒவ்வொரு திணைக்கும் உரிய பொருளை கூறுவது உரிப்பொருள் எனப்படும். உரிப்பொருள் திணைக்கு உரிய முக்கிய உணர்ச்சியைக் குறிக்கிறது.

புணர்தல்: ஒன்றுசேர்தல்

இருத்தல்: பிரிவைப் பொறுத்து இருத்தல்

ஊடல்: தலைவி தலைவன் மீது கோபம் கொள்ளல்

இரங்கல்: பிரிவு தாங்காது தலைவி வருந்துதல்

பிரிதல்: தலைவன் தலைவியைப் பிரிதல்

ஆகியவைகள் திணைக்குரிய உரிப்பொருள்கள் ஆகும்.

உரிப்பொருள் வளர்ச்சி சமூதாயம்

மனித வாழ்கையில் நிகழ்வுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்தும் களமாக இலக்கியங்கள் விளங்குகின்றன. படைப்பாளி தங்களின் கற்பனைகளை விட மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும், சொந்த அனுபவங்களையும் தமது படைப்புகளில் வெளிப்படுத்துகின்றனர். இன்றைய நவீன அரசியல் போக்குகள்,

அதிகார வர்க்க காலத்தில் சாதி, நிலைமைகள். பெண்களின் பெண்மைப் பலவீனங்கள வாழ்க்கைப் பிரச்சனைகள், இளைய தலைமுறையினரின் தன்மைகள் முதலியவை நவீனகாலப் பாடலில் பாடுபொருளாக அமைக்கப்பட்டுள்ளன.

சமூக பணியில் ஈடுபடுவதற்குத் தங்கள் மனதைத் திறக்கவேண்டும் என்பதைத் தமிழன்பன் தன் கவிதைகளில் கூறியுள்ளார். இதனை,

"சமூக நலத்திற்குச் சுற்றே
உங்கள் இதயச் சன்னலைத்
திறந்து வைப்பீர்"

என்ற கவிதை வழி அறியலாம்

சாதி.

காலங்கள் மாறினாலும் நாகரிகம் வளர்ந்தாலும் இன்றைய கட்டத்திலும் மாறாத நிலையாக இருப்பது, மனிதர்க்கிடையில் காணப்படுகின்ற சாதிப் பிரிவுகளும் அடிமை முறைகளும் ஆகும். நிறத்தால் வெவ்வேறாகக் காணப்பட்டாலும் பிறப்பால் அனைவரும் மனிதர்கள் தான் இவற்றில் உயர்ந்தவர்கள் தாழ்த்தவர்கள் என்பது இல்லை மனித இனத்தால் அனைவரும் ஒன்றாவர். இன்றைய காலக்கட்டங்களின் மனிதர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக கருதப் பெறுவது சாதிகள் என்ற பிரிப்பு முறையே

சாதிகள் மக்களிடையே ஒற்றுமையைக் குலைக்கின்றது. பகைமையை வளர்க்கிறது. பிரிவினைக்கு ஆணி வேராக இருக்கின்றது, அல்லை உண்டாக்கி கொலை,கொள்ளை, கற்பழிப்பு, தீ வைப்பு போன்ற கொடுமையானச் செயல்கள் நிகழக் காரணமாக அமைகின்றது. இச்சாதிக் கொடுமைகள் அகல பல்வேறு புரட்சியாளர்களும் அறிஞர்களும் ◌ால் கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால் இன்றும் முடிவுக்கு வாவில்லை 'உங்களுடைய சமூக அமைப்பை மாற்றினால் ஒழிய நீங்கள் முன்னேறவே முடியாது

மனிதன் சாதி, சமயம், மொழி, இளம், என்று பல்வேறு நிலைகளில் பிரித்தாளப்படுகிறான். இதனால் இன்றனவும் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுவதற்கு இவைகள் பெரும் காரணமாக அமைகின்றன இதில் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் புதைந்து அஞ்சி வாழ்கின்ற நிலையைச் சிற்பி.

வயல் சேற்றுக்குள்
நண்டு போல்
நெருப்பு எரிந்தது.
தாழ்த்தப்பட்டவர் அஞ்சிப்
புதைந்திருந்தனர்

என்ற கவிதையில் உணர்த்துகின்றார். தொடக்கக் காலத்தில் இனக்குழுக்கலாக இருந்தது. அப்போது அவர்களிடையே எவ்வித தீமையும் இல்லை தற்போது காணப்படும் சாதிய பகுப்பானது இடையில் தோற்றுவிக்கப்பட்டு, உயர்பதவியிலிருப்பவர்களால் வளர்ந்து உயர்ந்தது என்பதைச் சிற்பி தன் கவிதையில் கூறியுள்ளார்

“ஆதியில் இல்லாத சாதி
பாதியில் வந்து
பதவியில் உயர்ந்தது"

என்ற கவிதை உணர்த்துகின்றது. தாழ்த்தப்பட்ட இனத்தவன்ல மரியதையுடன் வாழ முடியவில்லை. அவர்கள் துன்புறுத்தப் படுகிறார்கள் என்பதைத் தமிழன்பன.

ஓாடி முன்னே மாறன் நகர்ந்தான்.
நில்லடா பறையா
ரொம்பத் திமிர்தான் உனக்கு..?"

என்று கூறுகின்றார்.

சுரண்டல்

தொழிலாளர்கள் உழைப்பு சுரண்டப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதைத் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

வேர்வை நதிகள்
கண்ணீர்க் கடலில் விழுவது
தடுத்து நிறுத்தப்படும்."

என்ற கவிதை அடிகள் வழி அறியமுடிகின்றன. மேலும், சுரண்டி வாழும் முதலாளிக்கு எதிராகப் போராடித்தான் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பெறவேண்டும் என்பதை,

"அழுத பிள்ளைக்குப்
பால் கிடைத்தது
அந்தக் காலம்!
அடித்த பிள்ளைக்குப்
பால் கிடைப்பது இந்தக் காலம்! எனவே
அழுத்து போதும்!"

என்ற கவிதை அடிகள் வழி அறியமுடிகின்றன.

வறுமை

வறுமை என்பது ஒழுக்கம் நேர்மை ஆகிய அறவழிகளைச் சீர்குலைக்கும் புல்லரிவியாகும். "வறுமை என்பது மனிதனது நிலைப்பட்ட வாழ்வுக்கு வேண்டிய பொருளியல் தேவையாகும். உயிரோடு வாழ்வதற்கு வேண்டியவையிருப்பினும் சமூகத்தின் பெரும்பான்மையானக் கூட்டத்தினர் நியாயமானச் செம்மையான வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டியவையெனக் கருதுவன் இல்லையெனில், அந்நிலையை வறுமை: அதாவது தேவைகள் வற்றிய நிலை எனக் கொள்வதுண்டு" என்று ராங்குமார் கூறுகின்றார்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் சிதைக்கும் வறுமையைப் படைப்பாளிகள் பாடுபொருளாகப் படைத்திருக்கின்றனர். தந்தை இல்லாத வீட்டில் அவர்கள் வீட்டு அவர்கள் வீட்டில் அடுப்பு

எரியவில்லை. மாறாக உள்ள அனைவரின் வயிறும் பாசியால் தினமும் எரிகின்றது. என்பதைச் சிற்பி தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

"அப்பா இல்லாத
ஆநாதைக் குடும்பத்தில்
ஆறு வயிறுகள்
ஒவ்வொரு நாளும்
புற்றி எரிந்தன
அடுப்பு சாம்பல் பூசி
மௌனம் பூத்துக் கிடந்தது"

என்ற கவிதை உணர்த்துகின்றன. உணவின்றி பாசியானல் பாதிமக்கள் இருளில் மறைந்து வாழ்கின்றார்கள் என்பதைச் சிற்பி தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

"பசி குடியிருக்க
அவன் வயிறுண்டு!"

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

தினமும் பாடுபட்டு உழைத்தாலும் அவர்கள் குடும்பநிலை மறவில்லை. அவர்கள் உழைப்பு சுரண்டடப்படுகின்றது. உழைப்பாளியின் குடும்பம் வறுமையில் உள்ளது என்பதைச் சிற்பி
கூறியுள்ளார். இதனை.

"பட்டுப்புடவையில்
அம்மாவைப் பார்த்ததே இல்லை
அப்பா எடுத்துக் கொடுக்க
இல்லையோ என்னவோ"

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

பெண்ணியம்:

பெண்களின் நாட்டின் பெண்களின் முன்னேற்றமே ஒரு நாட்டின் முன்னேற்றத்தைக் காட்டுவதாகும். பெண்கள் உயர்கின்ற பொழுதுதான் சமூகம் உயர்கிறது, படைப்பாளர்கள் தங்களின் படைப்புகளில்

பெண்ணின் உணர்வுகளையும் அவர்களின் பாதிப்புகளையும் பதிவு செய்ய மறுப்பதில்லை வாழ்க்கைப் பிரச்சனைகள் குடும்ப சூழ்நிலைக்காரனாமாகவும் பொருளாதரநிலை காரணமாகவும் திருமண வயது கடந்து திருமணமாகமல் முதிர்கள்ளியாகப் பெண்ணாளவள் வீட்டில் இருக்கின்றாள். என்ற பெண்ணின் உள்ளக் குமறலைத் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

"அணிப வரில்லா மலரென ஆனேன்! நான்
அடைய வரில்லாத் தோப்பென் ஆனேன்!
அனைப்ப வரில்லாச் சேயென ஆனேன்! -நான்
ஆள்ப வரில்லா நிலமென ஆனேன்!"

என்றும்.

"காத்துக் கிடந்த
கன்னிமை கழியாத
வண்ணக் காகித
வசீகரத் தூய்மையை."

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

அரசியல்

தற்போது நாட்டை ஆளும் தலைவர்கள் அனைவரின் ஆட்சிமுறை உழல் நிறைத்துக் காணப்படுகின்றது. நேர்மையான ஆட்சிமுறையைக் காண்பது கடினமானது அவ்வாறு நடக்குமாக என்று தம்புவது வீன் நம்பிக்கை என்பதைத் தமிழன்பன்.

"ஊழல் கலக்காமல்
ஓர் ஆட்சி நடக்குமென
உங்கட்கு நம்பிக்கை உண்டா?"

சுதந்திர நாட்டில் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழவேண்டும். ஆனால் அடித்தட்டில் உள்ள மக்களுக்குக் கிடைக்கவேண்டி சலுகைகளை எல்லாம் வசதிப்படைத்தவர்களும் அரசியல்வாதிகளும் பயன்டுத்திக் கொள்கின்றார்கள். அடித்தட்டு மக்களுக்கு ஒன்றும்

கிடைப்பதில்லை. அவர்கள் வறுமையில் வாடி இருப்பதைத் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை

ஏழையின் சிரிப்பில்

இறைவன் பிறக்கிறான்

ஏழையின் கண்ணீரில்

இறைவன் இறக்கிறான்."

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றது.

இன்றைய நோரதலில் அரசியல் வாதிகள் பணம் கொடுத்து வாக்குரிமையைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதைத் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார் இதனை,

'தேர்தல் 'சுய்வரம்

சுயத்தில்

இல்லை - பணத்தின்

'வரத்தில்'

இருக்கிறது!"

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

இன்றை அரசில் தலைவர்கள் நிலையை அவர்கள் எவ்வாறு ஆட்சிக்கு அவருகிறார்கள் என்பதையும் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

"வாக்குச் சீட்டுகளை

வழிப்பறி செய்வது

கடினமானதல்ல"

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

வேளையற்ற நிலை

இன்றை இளைஞர்கள், பட்டதாரிகள் வேலையற்ற நிலையில் எதிர்த்துப் போராட்டங்களை மேற்கொள்கிறார்கள் என்பதைத் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

"தீப்பந்தங்களைத் தூக்கியபடி உச்சக் குரலில்

'வேலை கொடு எங்களை

வாழவிடு' என்று நகரைக் குலுக்கி

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

கையூட்டு

எங்கும் தற்போது கையூட்டு வாங்காமல் வேலைசெய்வதில்லை. ஆலய வழிப்பாடும் பணம் எதிர்ப்பார்த்தே நிகழ்த்தப்படுகின்றது என்பதைத் தமிழன்பன் தன் விதையில் கூறியுள்ளார். இதனை,

"ஆலயத்திலிருக்கும்

அம்மன்கூட எதைப் பார்க்கிறாள்?

ஆச்சி ஏந்திய தட்டையா?"

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

சுற்று சூழல்

சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள நிலம் நீர், காற்று, வான்வெளி, சூரியன். தாவரங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றையும் மனிதன் உருவாக்கும் ஒருங்கமைப்புகளையும் அவனது வாழ்க்கை நிலை, கலாச்சாரம். தொழில்நுட்ப சமூகப் பொருளாதர சட்ட அமைப்பு, அரசியல் சுகாதார அமைப்பு போன்றவற்றையும் உள்ளடக்கியது ஆகும். மனிதன் வாழ்கின்ற இந்த உலகு தனித்தன்மை வாய்ந்தது. நுண்ணுயிர்கள், தாவரங்கள், விலங்குகள். மனிதர் உட்பட்ட அனைத்து உயினங்களும் வாழ்கின்ற பல்வேறு விதமான வாழிடங்களைச் சுற்றுச் சூழல் என்று அழைக்கிறோம். எனவே உவ்வொரு உயிரினங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புக் கொண்டு வாழ்கின்றது. ஒன்று அழிக்கப்பட்டால் அவற்றைச் சார்ந்துள்ள மற்றொன்றில் மாற்றங்கள் ஏற்படுகின்றது. இதனால் சுற்றுச் சுழல் பாதிக்கப்டுகின்றது. தற்காலத்தில் சீர்க்கெட்டுவரும். சுற்றுச் சூழல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இயற்கை வளங்களில் உள்ளதமானது காடு, “காடு அழித்தால் நாடு அழியும்“ என்பது பழிமொழி.

காலநிலையைச் சீராக வைப்பதற்கும் நிலச்சரிவு, மண் அரிப்பு ஏற்படாதவாற பாதுகாக்கவும் காடுகள் உதவுகின்றது. காடுகள் அழிக்கப்படுவதால் நாட்டில் வறட்சியும் பஞ்சமும் ஏற்பட்டு நாடு அழிகின்றது என்பதைச் சிற்பி தன் கவிதையில் கூறியுள்ளார்.

இதனை,

"தேசங்கள் தோறும்
ஞானங்கள் தந்தவை மரங்கள்
மரங்கள் அழிந்தால்
மானுடம் அழியும்
உணவும் உடையும்
உறையுளும் அழியும்"

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

மனிதனின் செயலால் இயற்கைச் சீறங்கள் ஏற்படுகின்றன. அவற்றை கட்டுப்படுத்த இயற்கை வளங்களையும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்கவேண்டும். அவற்வாறு பாதுகாத்தால் மட்டுமே இயற்கை அழிவிலிருந்து மனிதன... காக்கமுடியும் என்பதைத் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

இயற்கையிடமிருந்து
மனிதனைக் காப்பாற்றுவோம்
அப்படியே மனிதனிடமிருந்தும்
இயற்கையைக்
காப்பாற்றுவோம்!"

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

முடிவுரை

சங்க இலக்கியங்களில் பதிவான உரிபொருள் தற்கால இலக்கியங்களில் அரசியல் போக்குகள், அதிகார வர்க்க காலத்தில் சாதி, நிலைமைகள். பெண்களின் பெண்மைப் பலவீனங்கள வாழ்க்கைப்

பிரச்சனைகள், இளைய தலைமுறையினரின் தன்மைகள் முதலியவை நவீனகாலப் பாடலில் பாடுபொருளாக அமைக்கப்பட்டுள்ளன.

துணைநின்றவை

1. தொல்காப்பியம் பொருளதிகாரம், சுந்தரமூர்த்தி. கு (ப.ஆ), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர். மு.ப. 1985.

2. தமிழன்பன், தமிழன்பன் கவிதைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

3. சிற்பி பாலசுப்பிரமணியன்,சிற்பி கவிதைகள் நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை

சங்க இலக்கியத்தில் ஓரையாடுதல் (விளையாட்டு)

முனைவர் பொ,குபேந்திரன், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.

ஆய்வுச் சுருக்கம் :

பழங்காலத் தமிழன் நாடோடி வாழ்க்கையை விட்டுவிட்டு நிலைத்த வாழ்க்கைக்கு வந்தடைந்த போது தனித்த வாழ்க்கை, குழு வாழ்க்கையைப் புரிந்து கொண்டு செயல்பட்டான். அப்பொழுது அவன் பெற்ற பயிற்சி அவனது வீரத்தைப் புலப்படுத்த வகை செய்தது. வீரத்தோடு மனமகிழ்ச்சியும் இணைய விளையாட்டுக்கள் தோன்றலாயின. மகளிர் விளையாட்டுக்களில் ஓரையாடுதலை விளக்கமுறை ஆய்வு முறையில் விளக்கப்பெறுகின்றன.

திறவுச்சொல் : ஓரை, மகிழ்ச்சி, விளையாட்டு, நீர் விளையாட்டு.

முன்னுரை : விளையாட்டு என்பது சங்க கால மக்களோடு இயங்கி செயல்படக்கூடிய ஒரு உடற்பயிற்சியாக செயல்பட்டது என்பது சங்க இலக்கியத்தை வாசிக்கும் பொழுது புரிந்து கொள்ள முடிகிறது. சங்க காலத்தில் மக்கள் உடல் நலம் பேணுவதற்காக பல்வேறு விளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்துள்ளனர். உடல் நலத்தையும் பாதுகாத்து உள்ளனர். முதியோர்கள் இளையோர்கள் என்று பாராமல் தங்களுக்குக் கிடைக்கும் நேரங்களில் அவர்கள் விளையாடி நேரங்களைச் செலவழித்து உள்ளனர். உடல் நலத்தையும் மனநலத்தையும் செழிப்போடு வைத்துள்ளனர் என்பதற்கு சங்க இலக்கியத்தில் பல சான்றுகள் காணப்படுகின்றன. அதில் ஒரு விளையாட்டு தான் 'ஓரையாடுதல்' விளையாட்டு ஆகும். மகளிர் விளையாட்டுக்களில் ஒன்றான ஓரையாடுதலை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஓரையாடுதல் : கடற்கரைச் சோலையில் சிறுவீடு கட்டுதல்,சிறுசோறு சமைத்தல் போன்றவைகள் மகளிர் (இல்லம் பெண்கள்) ஆடும் ஆட்டங்களாக பண்டைத் தமிழகத்தில் வழங்கி வந்தன. அவற்றுள் ஓரை என்பது கடல் விளையாட்டில் (நீர்விளையாட்டில்) அடங்கும் ஒருவகை விளையாட்டாகும்.

"தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியுஞ்
சிற்றில் இழைந்தும் சிறுசோறு குவைதியும்" - அகம். 110

ஆரவாரத்தாரோடு கடலில் விளையாடுதல்:

பண்டைய விளையாட்டுகள் என்ற தலைப்பில் வித்துவான் கோ.சுப்பிரமணியப் பிள்ளை என்பவர் 'ஓரை' என்பதனைக் குறிக்குங்கால் அது ஒருவகை விளையாட்டு என்று கூறுவர். மேலும் அவர் "அது இன்னது என்று நன்றாக விளக்கப்பட வில்லை. அது பஞ்சாய்ப் பாவை கொண்டு மகளிராடும் விளையாட்டு என்று சிலர் கூறுவர்" என்று கூறியுள்ளார்.நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு,புறநானூறு முதலிய சங்க இலக்கிய நூல்களின் உரையாசிரியர்கள் கூறிச் சென்றதையே அவரும் கூறியுள்ளார்.

'ஓரை' என்பது ஒருவகையான நீர்விளையாட்டாகும். ஓரை விளையாட்டு இன்றும் பெயரில் சற்று திரிபு ஏற்பட்டு 'ஓரி' என்று தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திண்டிவனம் வட்டத்தில் இளம்சிறாரிடையே வழக்கிலுள்ளதை நம்மால் காணமுடிகிறது.

குறுந்தொகையில் ஓரையாடுதல்:

சங்க இலக்கியத்தில் 'நல்ல' என்னும் அடைமொழிப் பெற்றும் இலக்கிய உரையாசிரியர் பலரால் மேற்கோளாகக் கொள்ளப்பட்ட சிறப்புடைய குறுந்தொகையில், தமிழர் பண்பாட்டில் ஒன்றாக இருக்கக் கூடிய விளையாட்டுகளில் ஒன்றான, நீர் நிலைகளில் விளையாடும் விளையாட்டான "ஓரை" பற்றிய குறிப்பும் உள்ளது. அவற்றிலிருந்து ஒருசில பாடல்களைக் காண்போம்.

1.தலைவனின் பிரிவில் ஓரையும் கசத்தல் :

"தாதின் செய்த தண் பனிப் பாவை
காலை வருந்தும் கையாறு ஓம்பு" என,
ஓரை ஆயம் கூறக் கேட்டும்,
இன்ன பண்பின் இனை பெரிது உழக்கும்
நன்னுதல் பசலை நீங்க, அன்ன
நசை ஆகு பண்பின் ஒரு சொல்
இசையாதுகொல்லோ, காதலர் தமக்கே?" – (குறுந்.48)

பூந்தாது சேர்த்து ஒரு பொம்மை செய்து 'பாவை' என வைத்திக்கொண்டு 'ஓரை' விளையாடுவது விளையாட்டுத் தோழிமார் வழக்கம். தோழியர் கூட்டத்தோடு சேர்ந்து காலை நேரத்தில் 'ஓரை' விளையாடுகையில் பூந்தாதுகளால் பாவைச் செய்து விளையாடுவர். அவர்களோடு சேர்ந்து விளையாடிய தலைவியானவள் தலைவனின் பிரிவால் அழுதுக் கொண்டிருந்தாள். "நீ அழுதால் பாவை வருந்தும், ஆதலால் அழாதே" என்று கூறித் தோழியர் தலைவியைத் தேற்றினர். அதனைக் கேட்ட பின்னரும் தலைவி அழுதுக் கொண்டே இருந்தாள். தலைவனைப் பிரிந்து அழும் தலைவியின் நெற்றியில் பசலை நோய் படர்ந்தது. பெண்கள் ஆடும் விளையாட்டுகளில் ஓரை என்ற விளையாட்டு இருந்தது என்பதும், தலைவனைப் பிரிந்துள்ள தலைவிக்கு விளையாட்டும் கசந்ததை இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

2. ஓரையும் நண்டு விளையாட்டும்:

தலைவன் தலைவியிடம் நட்பு கொள்வதற்கு முன்பு நம்பிக்கையான வார்த்தைகளைக் கூறுவான். அவனுன்னைப் பிரியேன், விரைந்து மணம் முடிப்பேன். பிரிவை நீட்டிக்க மாட்டேன் என்று கூறி நட்பு கொள்கிறான்.களவு வாழ்க்கையில் அலர் தோன்றுகிறது. அதனால் தலைவி தலைவனிடம் செல்ல விழையும் போது அவன் வாய்மையற்றவனாக உள்ளான் என்பதை,

"ஆய்வளை ஞெகிழவும் அயர்வு மெய் நிறுப்பவும்
நோய்மலி வருத்தம் அன்னை அறியின்

உளெனோ வாழ் – தோழி! – விளியாது

ஓரை மகளிர் ஓராங்கு ஆட்ட,

ஆய்ந்த அலவன் துன்புறு துனைபரி

துறைவன்சொல்லோ பிற ஆயினவே" – (குறுந்.316)

என்னும் நெய்தல் திணைப் பாடல் எடுத்துரைகின்றது.

3. மெய்தோய் நட்பு :

அடும்புக் கொடியின் அழகிய மலர்களையும் நெய்தல் மலர் மாலைகளையும் சூடி, நீர் ஒழுகும் கூந்தலுடன் கடற்கரையில் விளையாடும் பெண்களுக்கு அஞ்சி, நண்டுகள் போல் கடலுக்குள் ஓடி ஒளிந்துக் கொள்ளும் தலைவனவன். அத்தகைய தலைவனோடு நான் ஒருநாள் சிரித்து விளையாடினேன். அவனோடு உடல் கலந்த நட்பு கொண்டேன். அந்த நட்பு, நான் அவனோடு மீண்டும் விளையாடுவதைத் தடுத்து, என்னை இற்செறிப்பில் (வீட்டுக் காவலில்) ஆழ்த்தி விட்டது. இது மிகவும் வியக்கத்தக்கது. காதலின் ஆழத்தால் மகிழ்ச்சிக்குப் பின் வரும் துயரத்தைத் தலைவி இப்பாடலில் எடுத்துரைக்கின்றாள்.

அடும்பின் ஆய்மலர் விரைஇ நெய்தல்

நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்

ஓரை மகளி ரஞ்சியீர் ஞெண்டு

கடலிற் பரிக்குந் துறைவனொ டொருநாள்

நக்குவிளை யாடலுங் கடிந்தன் றைதே

கம்ம மெய்தோய் நட்பே." - (குறுந்.401)

என்னும் பாடலில் தலைவனோடு தான் மெய் தோய்ந்த நட்பு கொண்ட பின்பு, அவனைப் பிரிந்து வாழ முடியாமல், உடல் வேறுபாடு கண்டு தாய் வீட்டை விட்டு வெளியேறாமல் தடுத்த நிலையில் தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. ஓரை என்னும் இவ்விளையாட்டை நெய்தல் நிலமக்கள் மட்டுமல்லாது பிற நிலத்துவாழ் மக்களும் இவ்வகை விளையாட்டை விளையாடினர் என்பதற்கு பல பாடல்கள் சான்று உள்ளன.

நற்றிணையில் ஓரையாடுதல்: சங்க அகப்பாடல்களில் நல்ல + திணை என்னும் சிறப்புப் பெற்ற நூலான நற்றிணையில் பழந்தமிழரின் அக வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டும் காட்சிகளும் சங்க வரிகளில் மிளிர்கின்றன. அவற்றுள் ஓரை விளையாட்டு பற்றியும் இந்நூல் குறிப்பிடுகிறது. நற்றிணையில் நான்கு பாடல்களில் இவ்விளையாட்டுப் பற்றிய குறிப்பு உள்ளது. (நற்றிணை : 68, 298, 143,155).

"ஓரை ஆடினும் உயங்கும் நின் ஏறி" - (நற்., 60:10)

"விளையாட்டாயமொடு ஓரை யாடாது" - (நற்., 68)

அகநானூறு - புறநானூறு - ஓரையாடுதல் : அகநானூற்றில் மூன்று பாடல்களும் (40, 60,2 9), புறநானூற்றில் ஒரு பாடலிலும் ஓரை விளையாட்டுப் பற்றிய குறிப்பு உள்ளது.

"ஓரை யாயத் தொண்டொடி மகளிர்" - (புறம்.176)

ஆக மொத்தம் பதினொழு பாடல்களில் ஓரை விளையாட்டு பற்றிய செய்திகள் பதிவாகியுள்ளதைக் காண முடிகின்றது.

'ஓரை' என்பது இன்னது என்று விளக்கமாகக் கூறும் பாடல்கள் தமக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் களவு ஊகித்தறிவதற்கு இடம் இருக்கிறது.

"ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாய்" - (நற்.155)

"ஓரை மகளிர்" - (குறுந். 401);

"ஓரை மகளிர்" - (குறுந். 316)

எனவரும் சொற்களைக் கொண்டு ஓரை இளம் பெண்கள் ஆடும் ஆட்டம் என அறிகின்றோம். ஆனால் அவ் விளையாட்டு இன்று இருபாலரிடையே வழங்கி வருகின்றது. "ஒரையும் ஆயமும் கொச்சியும் காண்தொறும்" , "தீர்வார் கண்ணேன்", "ஓரை ஆயமொரு பந்துசிறி தெறிலும்"என்பன போன்ற வரிகள் நமக்கு, தலைவி தோழிகளுடன் சேர்ந்து ஆடிய ஆட்டமாக எடுத்துக்காட்டுகிறது.

"கதிரவன் மேற்கு திசையிலே சென்று மறைதலாலே பொழுது போயிற்று என்பதனை அறிந்து வீட்டிலுள்ளோர் என்ன கூறுவார்களோ?

என்ற அச்சத்தால் நீர் அலைந்த அலசலே கலைந்த கூந்தலைப் பிழிந்தும் பயத்தால் வயிற்றில் அடித்துக்கொண்டும் ஒரு சேரக்கூடி தம்மூர்ச் சென்றனர்" என்று நற்றிணை (பாடலெண். 398) பாடல் நமக்கு அழகாக எடுத்துக் காட்டுகிறது .

நீர் ஆடுபவர் ஒருவரையொருவர் மேல்போலத் தொடர்ந்து விளையாடுபவர் என்பதால் அது நிலத்தில் விளையாடும் ஓடிபிடிக்கும் ஆட்டம் அல்ல என்பருடன் நீரில் ஒளிந்து ஆடும் பட்டடிக்கும் ஆட்டம் என்பதை நாம் அறிகிறோம். ஏனெனில் உடலின் நிழல்போல தொடரும் என்ற உவமை நீர்ன்கண் நிகழும் இவ்வாட்டத்தைக் குறிப்பதற்காக அமையுமேயன்றி நிலந்திற்கல்ல.. மெய்நிழல்போல' என்ற சொற்றொடர். நீரில் ஒருவரையொருவர் மூழ்கி நீந்திச் செல்லும் போது செல்லும் தோற்றம் பொருத்தமாக உள்ளது. இது இன்று காணும் ஓரியாட்டத்தில் நன்றாகக் காணலாம்.அவ் வாட்டம் பட்டடிக்கும் ஆட்டம் என்றும் 'ஓரி' என்றும் கூறுவர்.

நீர் நிலைகளில் இளஞ்சிறுவர் அல்லது சிறுமியர் குளிக்கச் செல்றலுமுன் தங்களுக்குள் பாடலாம் என்று தீர்மானித்த விட்டால் போதும். உடனே எல்லோரும் நீரில் குதிக்கத் தொடங்குவர்.அவ்வாறு குதிப்பதற்குமுன் 'பின்னாலே குதிப்பவன் ஓரி' என்று சொல்லியவாறே குதிப்பர். எவர் பின்னாலே குதிக்கின்றாரோ அதாவது கடைசியாக குதிப்பவர் ஓரியாககக் கருதப்படுவர் ஆவர். அவர் மற்றவரில் எவரை யேனும் பிடிக்க வேண்டும். நீரில் மூழ்கியிருக்கும்போதோ நிலத்தில் இருக்கும் போதோ பட்டடிக்க வேண்டும் என்பதாம்.

நீரில் ஓரியாக இருப்பவர் மற்றவரைப் பிடிக்க முயலும் முயற்சியானது மெய்கிழல் போல' அதாவதுத் தொடர்ந்து பிடிக்க முயற்சிக்கும் காட்சி அமைந்திருக்கும். இவ் விளையாட்டில் ஈடுபட்டவர்க்கு வன்ணப்புற கந்தரத்த னார் உரைஓரையாட்டம் என்பதுடன் இவ் வாட்டம் இன்றும் மறையாது 'ஓரி' என்ற பெயரில் வழங்கிவருகின்றது.

முடிவுரை: இது போன்ற விளையாட்டுக்கள் சங்க கால மக்களுக்கு உடல் வலிமையையும் மனதிற்கு உறுதியையும் தந்துள்ளன. அது மட்டும் அல்லாமல் சங்ககால மக்களிடையே ஒற்றுமையையும் வாழ்க்கையில் மேம்படுவதற்கான வழியையும் இவ்விளையாட்டுகள் ஏற்படுத்தி தந்துள்ளன என்பதைச் சங்க இலக்கியத்தின் மூலம் நம்மால் அறிய முடிகின்றது.

துணை நூற்பட்டியல்

1.குறுந்தொகை முழுவதும், உ.வே.சா., உ.வே.சா.,பதிப்பகம் சென்னை.

2. நற்றிணை, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், அம்பத்தூர், சென்னை.

3. அகநானூறு, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், அம்பத்தூர், சென்னை.

கலிங்கத்துப்பரணியில் தொல்காப்பிய வண்ணம்

பா.சங்கீதா, பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
முனைவர் யு.துர்கா தேவி உதவிப் பேராசிரியர் மற்றும் நெறியாளர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை – 117.

ஆய்வுச்சுருக்கம்

தொல்காப்பியர் வகுத்த பாஅ வண்ணம், தாஅ வண்ணம் தொடங்கி, முடுகு வண்ணம் ஈறாகவுள்ள இருபது வண்ணக்கூறுகள் செயங்கொண்டாரின் கலித்தாழிசைகளில் எங்ஙனம் உருப்பெற்றுள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். குறிப்பாக, தொல்காப்பியச் செய்யுளியல் நெறிமுறைகள் சிதையாமல் பரணி இலக்கியத்தில் பேணப்பட்டுள்ள மரபுத் தொடர்ச்சியையும், போர்க்களக் காட்சிகளைச் செவிப்புலன் வழி உணரச் செய்யும் செயங்கொண்டாரின் ஒலியியல் நுட்பங்களையும் சான்றாதாரங்களுடன் வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் அடிப்படை இலக்காகும்.

திறவுச்சொற்கள்

வண்ணம், எழுத்து, சொல், தொடை, ஓசை, பாஅ தாஅ.

முன்னுரை

"ஒலி மரபினை ஒழுங்குற அமைப்பதே வண்ணம்" என்பது தமிழ் இலக்கண மரபு. தொல்காப்பியச் செய்யுளியலில் குறிப்பிடப்படும் இருபது வகை வண்ணங்கள், ஒரு செய்யுளின் ஓசை நயத்தையும் உணர்ச்சிச் செறிவையும் தீர்மானிக்கும் உயிர்நாடிகளாக விளங்குகின்றன. 'பரணிக்கோர் செயங்கொண்டார்' எனப் போற்றப்படும் கலிங்கத்துப்பரணி, போர்க்களத்தின் வீரத்தையும், சோழர்களின் வரலாற்றையும் பாடுவதோடு மட்டுமல்லாமல், ஒலியியல் நுட்பங்களை முறையாகக் கையாண்ட ஒரு இசைக்கருவூலமாகவும் திகழ்கிறது.

வண்ணம் - விளக்கம்

தமிழ் இலக்கணத்தில் வண்ணம் என்பது செய்யுளின் ஓசை வேறுபாடுகளைக் குறிக்கும். ஒரு செய்யுளைப் படிக்கும்போது அல்லது பாடும்போது ஏற்படும் சந்த வேறுபாடுகளையும், ஓசை நயங்களையுமே 'வண்ணம்' என்கிறோம். இவ்வண்ணம் அழகு, சந்தம், இசை, நிறம், ஓசை நன்மை, சித்திரம், மாலை, சிறப்பு, இனிமை எனப் பல பொருள்களைக் கொண்டது.

"தலைவன் ஒருவனை வாழ்த்திப் புகழுமிடத்தும், சான்றோர் குறிப்புகளை விளக்கிச் சொல்லுமிடத்தும் இசைத்துறைக்கு உரிய வண்ணங்கள் அமையப் பாடுதல் ஏற்றது" என்று தொல்காப்பியம் புறத்திணையியலில்விளக்குகிறது.தொல்காப்பியம் செய்யுளியலில் கூறப்பட்டுள்ள 34 உறுப்புகளில் வண்ணமும் ஒன்று.

வண்ணங்களின் வகைகள்

தொல்காப்பியர், வண்ணங்களின் வகைகளை இருபதாக வகைப்படுத்தியுள்ளதைப் பின்வரும் நூற்பாவின் வாயிலாக அறியலாம்.

"வண்ணந் தாமே நாலைந் தென்ப" (தொல்.513)

அவைதாம்

பாஅ வண்ணம் தாஅ வண்ணம்

வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்

இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்

நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்

சித்திர வண்ணம் நலிபு வண்ணம்

அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்

ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்

எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்

தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்

உருட்டு வண்ணம் முடுகு வண்ணம் என்று

ஆங்கு என மொழிப அறிந்திசினோரே. (தொல்.514)

பாஅ வண்ணம் தொடங்கி முடுகு வண்ணம் ஈறாக இருபது வண்ணங்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். யாப்பருங்கலங்காரிகை வண்ணங்களின் வகைகளை நூறு எனச் சுட்டுகிறது. நச்சினார்க்கினியர் தன் தொல்காப்பிய உரையில் வண்ணம் குறித்து விளக்கும்போது, "அவை நூறும் பலவுமாக வேறுபடக் கொள்ளினும் இவ்விருபதின்கண்ணே யடங்கும்; 'வேறு சந்த வேற்றுமை செய்யா' என்றற்கு, அது நுண்ணுணர்வுடையோர்க்குப் புலனாம் என்று உணர்க" என்று குறிப்பிட்டுள்ளார்.

வண்ணங்களின் பகுப்பு

தொல்காப்பியர் கூறியிருக்கும் இவ்விருபது வண்ணங்களை, 'எழுத்து, சொல், தொடை, ஒசை, நடை' என ஐவகையாகப் பாகுபடுத்தலாம் எனத் தமிழண்ணல் குறிப்பிட்டுள்ளார். அவை,

எழுத்து அடிப்படையில் வண்ணம் (7)

வல்லிசை வண்ணம்,மெல்லிசை வண்ணம்,இயைபு வண்ணம்,நெடுஞ்சீர் வண்ணம்,குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம்.

சொல் அல்லது சீர் அடிப்படையில் வண்ணம் (3)

பாஅ வண்ணம், எண் வண்ணம்,ஏந்தல் வண்ணம்

தொடை அடிப்படையில் வண்ணம் (2)

தாஅ வண்ணம்,அளபெடை வண்ணம்

ஓசை அடிப்படையில் வண்ணம் (6)

ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம் ,அகைப்பு வண்ணம்,தூங்கல் வண்ணம், உருட்டு வண்ணம்,முடுகு வண்ணம்.

நடை அல்லது வடிவ அடிப்படையில் வண்ணம் (2)

அகப்பாடல் வண்ணம்,புறப்பாடல் வண்ணம்.

பாஅ வண்ணம்

தொல்காப்பியர் குறிப்பிடும் இருபது வண்ணங்களில் முதன்மையான வண்ணம் பாஅ வண்ணம் ஆகும். பாஅவண்ணம் சொற்சீர் அடியாகி நூலின்கண் பயின்று வரும்.

"பாஅ வண்ணம்

சொற்சீர்த்து ஆகி, நூற்பால் பயிலும்" (தொல். 515)

செய்யுளில் வரும் சொற்கள் எல்லாம் சீரான அளவில் அமைந்து வருதல். இத்தகைய நடை பெரும்பாலும் நூற்பா எனப்படும் இலக்கணச் சூத்திரங்களில் பயின்று வரும்.

பரிசில் சுமந்தன கவிகள்

பகடு சுமந்தன திறைகள்

அரசு சுமந்தன இறைகள்

அவனி சுமந்தன புயமும் (கலி.272)

கலையினொடும் கலைவாணர் கவியினொடும்

இசையினொடும் காதல்மாதர்

முலையினொடும் மனுநீதி முறையினொடும் (கலிங். 277)

என்னும் கலிங்கத்துப்பரணியின் பாடலடிகளில் சொற்சீரடியாய் பாஅ வண்ணம் பயின்று வந்துள்ளது.

தாஅ வண்ணம்

இடையிட்டு வந்த எதுகை தாஅ வண்ணமாகும். முதல் அடியில் உள்ள எதுகை, அடுத்த அடியில் வராமல், மூன்றாவது அடியில் அல்லது இடையிட்டு வரும் அடிகளில் அமையும் என்பதை பின்வரும் நூற்பாவின் மூலமாக அறியலாம்.

தாஅ வண்ணம்

இடையிட்டு வந்த எதுகைத்து ஆகும் (தொல்.516)

'தாஅ' என்பது 'தாவிச் செல்லும்' (இடைவிட்டு) எனப் பொருள்படும். தாவிவரும் துள்ளலோசையும் தாஅ வண்ணம் எனப்படும்.

அலகில் வெற்றியு முரிமையு மிவையென

அவய வத்தினி லெழுதிய வறிகுறி

அவையெ னப்பல வடு நிரை யுடையவர்

அடிபு றக்கிடி லமரர்த முலகொடிவ்

வுலகு கைப்படு மெனினும தொழிபவர்

உடல் நமக்கொரு சுமையென முனிபவர்

உயிரை விற்றுறு புகழ்கொள வுழல்பவர்

ஒருவ ரொப்பவர் படைஞர்கண் மிடையவே

(கலிங்.353)

என்ற இப்பாடலில் 1, 3 ஆகிய பாடல் அடிகளில் அலகில், வுலகு என்னும் சொற்களில் இரண்டாவது எழுத்தாகிய ”ல” ஒத்துள்ளதைக் காணலாம். இவ்வாறு இடையிட்டு வந்தால் தாஅ வண்ணம் ஆகும்.

வல்லிசை வண்ணம்

வல்லெழுத்துகள் மிகுந்து வருதல் வல்லிசை வண்ணம் ஆகும். இதனைத் தொல்காப்பியர்,

வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே (தொல்.517)

என்னும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்

தொழில்காட்டப் புவன வாழ்க்கைச்

செயல்வண்ணம் நிலைநிறுத்த மலைமகளைப்

புணர்ந்தவனைச் சிந்தை செய்வாம். (கலிங்.1)

என்ற இப்பாடலில் வல்லிசை வண்ணம் (க, ச, ட, த, ப,ற) பயின்று வருதலைக் காணலாம்.

மெல்லிசை வண்ணம்

செய்யுளில் மெல்லின எழுத்துகள் மிகுதியாகப் பயின்று வருதலையே மெல்லிசை வண்ணம் எனத் தொல்காப்பியர் வரையறுக்கிறார். இக்கருத்தை

மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே (தொல்.518)

என்னும் நூற்பாவிலிருந்து அறிய முடிகின்றது.

எனத டங்க இனி வளவ துங்கனருள்

எனம கிழ்ந்திரவு கனவிடைத்

தனத டங்கண்மிசை நகந நடந்தகுறி

தடவு வீர்கடைகள் திறமினோ (கலிங்.26)

பொருங்கண் வேலிளைஞர் மார்பி னூடுருவு
புண்கள் தீரஇரு கொங்கையின்
கருங்கண் வேதுபட ஒற்றி மென்கைகொடு
கட்டுமாதர் கடை திறமினோ (கலிங்.56)

என்ற பாடலடிகளில் மெல்லினங்கள் பயின்று வந்துள்ளதை அறிய முடிகின்றது.

இயைபு வண்ணம்

செய்யுளில் இடையின எழுத்துகள் மிகதியாகப் பயின்று வருவது இயைபு வண்ணமாகும் . வல்லின ஓசைக்கும் மெல்லின ஓசைக்கும் இடைப்பட்டு ஒலிப்பது இடையினமாகும். இதனை,

இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே
(தொல்.519)

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் பதிவு செய்துள்ளார்.

கலிங்கத்துப்பரணியில் ,

முறுவல் மாலையொடு தா மாலைமுக
மலரின் மீதும்முலை முகிழினும்
சிறுநி லாவும் அதினமிகுதி லாவும்என
வருந லீர்கடைகள் திறமினோ (கலிங்.49)

என்னும் பாடலடிகளில் இயைபு வண்ணம் பயின்று வருவதைக் காணலாம்.

அளபெடை வண்ணம்

ஓர் எழுத்து தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து நீண்டு ஒலித்தல் அளபெடை ஆகும். ஒற்றெழுத்துகள் (ம், ன், ய், ல், ண், ந்) அளபெடுத்து ஒலித்தலை ஒற்றளபெடை என்பர். உயிர் எழுத்துகள் எல்லாம் அளபெடுத்து ஒலித்தல் உயிரளபெடை ஆகும். செய்யுளில் அளபெடை எழுத்துகள் பயின்று வருதல் அளபெடை வண்ணமாகும். இதனை

அளபெடை வண்ணம் அளபெடை பயிலும் (தொல்.520)

என்னும் தொல்காப்பிய நூற்பா வாயிலாக அறிய முடிகின்றது.

ஆளைச் சீறுக விற்றுப யன்பொரூஉம்

அக் குளத்தில்அ ரசரர்சி ரஞ்சொரி

மூளைச் சேற்றில்வ ழுக்கிவி ழுந்திட

மொழிபெ யர்ந்தொரு கான்முட மானவும் (கலிங்.145)

என்ற கலங்கத்துப்பரணிப் பாடலடிகளில் உயிர்நெட்டெழுத்து (ரூ(ஊஉ) அளபெடுப்பதைக் காண முடிகின்றது.

நெடுஞ்சீர் வண்ணம்

பாடலில் உயிர்நெடில் எழுத்துகளும், உயிர்மெய் நெடில் எழுத்துகளும் மிகுதியாகப் பயின்று வருவது நெடுஞ்சீர் வண்ணமாகும். தொல்காப்பியர் நெடுஞ்சீர் வண்ணம் பற்றி பின்வரும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்

(தொல்.521)

கலிங்கத்துப் பரணியில் ,

தேவாசுரம் ராமாயணம் மாபாரம் உளவென்று

ஓவாஉரை ஓயும்படி உளதப்பொரு களமே (கலிங்.472)

என்ற பாடலில் நெடுஞ்சீர் வண்ணம் பயின்று வருதலை அறிய முடிகின்றது.

குறுஞ்சீர் வண்ணம்

பாடலில் உயிர்க்குறில் எழுத்துகளும், உயிர்மெய்க் குறில் எழுத்துகளும் மிகுதியாகப் பயின்று வருவது குறுஞ்சீர் வண்ணமாகும். தொல்காப்பியர் குறுஞ்சீர் வண்ணம் பற்றி பின்வரும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும் (தொல்.522)

கலிங்கத்துப் பரணியில் ,

காலக்கள மதுகண்டருள் இறைவீகடி தெனவே

ஆலக்கள முடையான்மகிழ அமுதக்களம் அணுகி

(கலிங்.473)

என்ற பாடலில் குறுஞ்சீர் வண்ணம் பயின்று வருதலை அறிய முடிகின்றது.

சித்திர வண்ணம்

பாடலில் நெட்டெழுத்துகளும், குற்றெழுத்துகளும் சேர்ந்து வருதல் சித்திர வண்ணம் ஆகும். இதனை,

நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே (தொல்.523)

என்னும் நூற்பாவில் பதிவு செய்துள்ளார்.

கலிங்கத்துப்பரணியில்,

முள்ளாறும் கல்லாறும் தென்னர் ஓட
முன்னொருநாள் வாளபயன் முனிந்தபோரின்
வெள்ளாறும் கோட்டாறும் புகையான்மூட
வெந்தவனம் இந்தவனம் ஒக்கில்ஒக்கும்(கலிங்.95)

என்னும் பாடலடிகளில் சித்திர வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

நலிபு வண்ணம்

செய்யுளில் ஆய்த எழுத்துப் பயின்று வருதல் நலிபு வண்ணம் ஆகும். இதனை,

நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும் (தொல்.524)

என்னும் நூற்பா வழி பதிவு செய்துள்ளார்.

கலிங்கத்துப்பரணியில்,

இருப்புக்க வந்தத்தின் மீதேற
லும்சூரர் எஃகம்பு தைக்க இறகைப்(கலிங்.489)
குறைத்த லைத்துணி கொல்லன் எஃகெறி
கூடம் ஒத்தமை காண்மினோ(கலிங்.497)

என்னும் பாடலடிகளில் நலிபு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

அகப்பாட்டு வண்ணம்

ஒரு செய்யுளின் பொருள் முடிவு பெறாதது போலத் தோன்றி, பின்னர் முழுமையாக முடிந்து நிற்பது "அகப்பாட்டு வண்ணம்" ஆகும். பாடலின் இறுதி அடி, ஏகாரத்துடன் முடியாமல், பாடலின் இடையிலுள்ள அடிகளைப் போன்றே ஓசையுடன் வருவது இதன் சிறப்பாகும். இதனை,

முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே(தொல்.525)

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

கலிங்கத்துப்பரணியில்,

கானரணும் மலையரணும் கடலரணும்
சூழ்கிடந்த கலிங்கர் பூமி
தானரண முடைத்தென்று கருதாது
வருவதும் தண்டு போலும் (கலிங்.377)

என்னும் பாடலடிகளில் அகப்பாட்டு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

புறப்பாட்டு வண்ணம்

ஒரு செய்யுளின் பொருள் முடிந்தது போலத் தோன்றி, பின்னர் பொருள் முழுமையாக முடியாமல் தொக்கி நிற்பது "புறப்பாட்டு வண்ணம்" ஆகும். இதனை,

முடிந்தது போன்று முடியாத தாகும் (தொல்.526)

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். கலிங்கத்துப்பரணியில்,

என்றிவையு ரைத்தலுமே னக்கெதி
ருரைக்க இமை யோர்களுந நடுங்கு வர்புயக்
குன்றிவைசெ ருத்தொழில் பெறாதுநெடு
நாண்மெலிவு கொண்டபடி கண்டு மிலையோ
(கலிங்.390)

என்னும் பாடலடிகளில் புறப்பாட்டு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

ஒழுகு வண்ணம்

ஒரு செய்யுளில் பயின்று வரும் ஓசையானது ஓடைநீர் ஒழுகிச் செல்வது போல் அமைவது ஒழுகு வண்ணமாகும். இதனை

ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும் (தொல்.527)

என்னும் நூற்பா வழி விளக்குகிறார் தொல்காப்பியர்.

கலிங்கத்துப்பரணியில்,

எடுமெடு மெடுமென வெடுத்ததோர்
இகலொலி கடலொலி இகக்கவே
விடுவிடு விடுபரி கரிக்குழாம்
விடும்விடும் மெனுமொலி மினைக்கவே

(கலிங்.404)

என்னும் பாடலடிகளில் ஒழுகு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

எண்ணு வண்ணம்செய்யுளில் எண்ணுப் பெயர்கள் அல்லது எண்ணும் பொருளில் வரும் சொற்கள் பயின்று வருதல் எண்ணு வண்ணம் ஆகும். எண் பயின்று வருதல் எண்ணு வண்ணம் என்பதனை,

எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும் (தொல்.529)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் மொழிந்துள்ளார்.

கலிங்கத்துப்பரணியில்,

உகநான்கும் பொருள்நான்கும் உபநிடதம் ஒரு நான்கும்
முக நான்கும் படைத்துடைய முதல்வனையாம் பரவுதுமே

(கலிங்.5)

நிலநான்கும் திசைநான்கும் நெடுங்கடல்கள் ஒரு நான்கும்
குல நான்கும் காத்தளிக்கும் குலதீபன் வாழ்கவென்றே

(கலிங்.6)

என்னும் பாடலடிகளில் எண்ணு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

அகைப்பு வண்ணம்

செய்யுளில் குறில் எழுத்துகள் மற்றும் நெடில் எழுத்துகள் இரண்டும் மாறி மாறி அமைந்து ஓர் ஒழுங்கின்றி ஓசை அறுத்தறுத்து பயின்றுவருவது அகைப்பு வண்ணமாகும் இதனை,

அகைப்பு வண்ணம் அறுத்தறுத்து ஒழுகும்
(தொல்.530)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் பதிவு செய்துள்ளார்.
கலிங்கத்துப்பரணியில்,

வேழநிரை என்றமலை யெங்குமிடை
கின்ற அயில் வென்ற அப யன்ற னருளால்
வாழஅப யம்புகுது சேரனொடு
கூடமலை நாடடைய வந்த தெனவே (கலிங்.297)

என்னும் பாடலடிகளில் அகைப்பு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

ஏந்தல் வண்ணம்

செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் வந்து பொருள் சிறந்து நிற்பது ஏந்தல் வண்ணம் ஆகும். இதனை,

ஏந்தல் வண்ணம்
சொல்லிய சொல்லில் சொல்லியது சிறக்கும்
(தொல்.532)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் பதிவு செய்துள்ளார்.
கலிங்கத்துப்பரணியில்,

பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே எங்கே என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்
(கலிங்.484)

என்னும் பாடலடிகளில் ஏந்தல் வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

உருட்டு வண்ணம்

செய்யுளில் குறிலிணை எழுத்துகள் இணைந்து வந்து உருட்டும் ஓசை பெற்று வருவது உருட்டு வண்ணம் ஆகும். இதனை,

உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்

(தொல்.533)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

கலிங்கத்துப்பரணியில்,

பகடி டந்துகொள்ப சுங்குருதி இன்று தலைவீ
பலிகொள் என்றகுரல் எண்டிசைபி ளந்துமிசைவான்
முகடி டந்துரும் எறிந்தெனமு ழங்க உடனே
மொகுமொ கென்றெலிமி குந்தமரு கங்கள் பலவே

(கலிங்.114)

என்னும் பாடலடிகளில் உருட்டு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

முடுகு வண்ணம்

செய்யுளில் நான்கு சீர்களுக்கு மேல் குறிலிணைச் சொற்கள் பயின்று வருதல் முடுகு வண்ணம் ஆகும். இதனை,

முடுகு வண்ணம் முடிவுஅறியாமல்
அடியிறந்து ஒழுகி அதனோர் அற்றே (தொல்.534)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

கலிங்கத்துப்பரணியில்,

துவர்நி றக்களிற்று உதிய ரேவலின்
சுரிகை போர்முகத்து உருவி நேரெதிர்த்து
அவர் நிணத்தொடுஅக் குருதி நீர்குழைத்து
அவர்க ருந்தலைச் சுவர டுக்கியே

(கலிங்.99)

என்னும் பாடலடிகளில் முடுகு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

முடிவுரை

கலிங்கத்துப்பரணியில் தொல்காப்பிய வண்ணங்கள் குறித்த இந்த ஆய்வு, பழம்பெரும் இலக்கண நெறிமுறைகள் பிற்கால இலக்கிய வகைமைக்குள் எவ்வாறு பொருந்தியுள்ளன என்பதை உறதிப்படுத்துகிறது. தொல்காப்பியர் வகுத்த இருபது வண்ணங்களில் ஒரூஉ வண்ணம் மற்றும் தூங்கல் வண்ணம் நீங்கலாக ஏனைய பதினெட்டு வண்ணங்களும் கலிங்கத்துப்பரணியில் பயின்று வந்துள்ளதை இவ்வாய்வு மெய்ப்பிக்கிறது.

துணைநூற் பட்டியல்

1) இளம்பூரணர், (உ.ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1967.

2) புலவர் பி.ரா. நடராசன் - கலிங்கத்துப்பரணி மூலமும் உரையும், திருமகள் நிலையம், சென்னை -17, 2017.

3) அமிதசாகரர்- யாப்பருங்கலக் காரிகை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 28, 1940.

4) சோம.இளவரசு - இலக்கண வரலாறு மெய்யப்பன் பதிப்பகம்,2023.

5) இளங்குமரன் - இரா, மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, 2020

வள்ளலார் காட்டும் அரசியல் அறங்கள்

திருமதி. S. அனுராதா, முனைவர்பட்ட ஆய்வாளர்,
முனைவர் பொ,குபேந்திரன், உதவிப் பேராசிரியர்& நெறியாளர்.
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.

ஆய்வுச் சுருக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் முதலாளித்துவச் சிந்தனைகள் உலக மக்களை இன்னலுக்குள்ளாக்கியிருந்தச் சூழலில் பாமரமக்களுக்கு வழ்வியல் அறங்களை போதித்தவர் வள்ளலார். அவரின் அறச்சிந்தனைகளை பகுப்புமுறை, விளக்கமுறை ஆய்வுக்கொண்டு விளக்கப்டுகின்றன.

திறவுச் சொற்கள்: பசித்திரு, தனித்திரு, விழித்திரு

முன்னுரை:

கருணைக்கடல் வள்ளல் பெருமான் சுத்த சன்மார்க சங்கத்தின் வாயிலாக பக்தர்களுக்கு மகத்தான மூன்று மந்திரங்களை உபதேசித்து உள்ளார். இதனை மானிடர்கள் கை கொண்டு ஒழுகினால் நல் ஆற்றலுடனும், அறிவுடனும் இருக்க முடியும். திரு என்றால் தெய்வத்தன்மை பொருந்திய மரியாதைக்குரிய என்று பொருள் படும். ஒருவன் உயரிய நிலைக்கு அதாவது இறைநிலை அடைய வேண்டுமானால் திரு என்னும் நிலையை அடையவேண்டும் என்றால் பசித்திரு, தனித்திரு, விழித்திரு, இன்னம் வாசகத்தில் முதல் எழுத்துக்களை சேர்க்க கிடைப்பது 'பதவி" உயர்ந்த இ்றிலை பதவி என்பதால் திரு என்னும் அடைமொழி சேர்ந்து பசித்திரு, தனித்திரு, விழித்திரு, என்றாயிற்று. வள்ளலார் அருளிய உபதேசக்குறிப்புகளை பின்பற்றி வாழ்க்கையை மேம்படுத்துவது குறித்து இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

பசித்திரு:-

நாம் பசியில்லாமல் இருக்க வேண்டும் என்பது தானே இவரது விருப்பம் பசியில்லா வீடு தேசம் உருவாக்க வேண்டும் என்பது தானே கனவாக இருந்தது பின் ஏன் இவர் பசித்திரு என்றார். பசியில் இருவகையான பசி இருக்கிறது அவற்றுள் ஒன்று உடலில் ஏற்படக்கூடிய வயிற்றுப்பசி மற்றொன்று நமது ஆன்மாவிற்கு ஏற்படுகின்ற ஆன்மபசி என்பதாகும். இவ்விரண்டனுள் முதலில் உடலில் ஏற்படக்கூடிய பசி குறித்துக் காண்போம்.

1.உடலில் ஏற்படக்கூடிய பசி:-

ஏழை பணக்காரர் யாராக இருந்தாலும் உடலில் ஏற்படும் ஓர் நிகழ்வு ‘பசி” இவர் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு பேதமின்றி பசி என்று வந்தவுடன் வாங்கி உண்பதென்பதை நாம் இங்கு காண முடியும். அந்த பசியை ஓர் விதமான நோய் என்று குறிப்பிடுகின்றார். இந்த பசி என்றும் நோயின் அளவறிந்து நம் உணவு உண்ண வேண்டும் இதை நம் வள்ளலார் பல இடங்களில் குறிப்பிடுகின்றார். பசிக்காமல் உணவு உண்ணக் கூடாது, அளவோடு உணவினை உண்ணவேண்டும். உடல் கேட்கும் அளவு மட்டுமே நாம் உணவு உண்ண வேண்டும் ஓர் உணவு செறித்தபிறகு தான் நாம் அடுத்த உணவை உண்ண வேண்டும். பசி உணர்ந்து உண்ணும்

போது தான் ஓர் மந்தமில்லாத தன்மை நமக்கு ஏற்படும் அதுமட்டும் இன்றி தூக்கம் சோம்பல் முதலிய நோய்களும் நம்மை தாக்காமல் தற்காத்துக் கொள்ள முடியும். நமக்கு சன்மார்க்க நெறியை காட்டிய ஓர் அற்புதமான மகான் வடலூர் இராலிங்க வள்ளலார் ஆவார். இந்த ஒரு ஞானி ஏதோ பலநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் அல்ல. ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்னமே வாழ்ந்தவர் இவர். ஏழ்மைக்கும் இறைவனை அடைவதற்கும் எந்தவிதமான தடையும் இல்லை என்று வாழ்ந்து காட்டியவர் நம் வள்ளலார். இந்த உலகமக்களுக்கு ஜீவகாருண்யம் என்பதனையும் மரணமில்லா பெருவாழ்வு என்னும் ஓர் உயரிய வாழ்க்கையையும் தர வேண்டும் என்பதற்காக தம் வாழ்நாள்

முழுவதையும் செலவிட்டார் என்ற சொல்லலாம் அவர் நமக்கு அருளிய தாரக மந்திர சொற்கள் பல இருந்தாலும் அவற்றுள் சில

'அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

என்றும் இந்த ஒர் மந்திரம் வாழ்க்கையில் மனிதர்கள் கடைபிடிக்க வேண்டிய உயர்ந்த நெறிகளுள் ஒன்றான அன்பு கருணை போன்ற ஒழுக்க நெறிகளை முன்னிருத்தி சொல்லப்பட்டுள்ளன. ஒரு மனிதன் தூய்மை உடையவனாக ஆக்குவதற்கு அன்பினால் தான் முடியும். இவர் நமக்கு தந்த முக்கியமான சொற்களுள் சில தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்னும் மந்திர சொற்கள் மூலம் அவர் நமக்கு சொல்லும் வாழ்வியல் நெறிகளை பற்றி இக்கட்டுரையில் விரிவாக பார்ப்போம்.

2.ஆன்மபசி:-

ஆன்மாவானது பல பிறவிகள் எடுத்து துன்பப்பட்டு துன்பப்பட்டு நிறைவு இல்லாமல் மேலும் மேலும் இம்மனித பிறவி எடுக்கிறது. அந்த பசிக்கு நம்

தீனிபோட வேண்டும். ஆன்மபசிக்கு எப்படி நிறைவு தரும் (அமுது) கொடுப்பது என்றால் மனதை ஒழுக்கநெறியில் இறைநெறியில் செலுத்தவும் ஆன்மபசிக்கு உணவு அளிக்கவும் எத்தனையேயா ஞானப்பாக்கள் நம் இலக்கியங்களில் மண்டிக்கிடக்கின்றன.

ஆன்மபசிக்கு உணவாவது இறைஅருளை நாடிச் செல்வது, தேவாரம், திருவாசகம் போன்ற வாசகங்களைப் படிப்பது, அடியார்களுக்கு தொண்டு செய்வது,

இறைவனுக்கு தொண்டு செய்வது ஆலயங்களுக்குசென்று உடலாலும் உள்ளத்தாலும் சேவை செய்வது இவை அனைத்தும் நம் ஆன்ம பசியை போக்குவதற்கு உண்டான செயல்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். வாழ்நாள் முழுவதும் நம்வயிற்று பசியோடு மட்டுமே வாழக்கூடாது ஆன்மபசியோடும் வாழவேண்டும் அந்த ஆன்மபசியோடும் வாழ்தல் வேண்டும் அவ்வாறு வரும் ஆன்மபசியை

நாம் போக்கி கொண்டு மரணமில்லாது பெருவாழ்வு வாழலாம் எனவே தான் வள்ளலார் பசித்திரு என்று குறிப்பிட்டுள்ளார்.

நான் பசித்த போதெல்லாம்
தான் பசித்ததாகி
நல்லுணவு கொடுத்தென்னைச்
செல்வம் உறவளர்த்தே
ஊன்பசித்த இளைப்பொன்றும்
தோன்றாத வகையை
வள்ளியததன் அமுதெனக்கிங்
கவந்தளித்த ஒளியே

-உடல் பசியை ஒரு பொருட்டாக நினைக்காததால் தான் அவரது உள்ளம் ஞான ஒளியை கண்டது. பரம்; பொருளை உணர்ந்தது.

தனித்திரு

எல்லோம் கூடிவாழ்தலை வலியுறுத்தி இருக்கும் போது இவர் மட்டும் ஏன் தனித்திரு என்று உபதேசித்து உள்ளார். தனிமை என்பது இரண்டாக பார்க்கப்படுகிறது அவற்றுள் ஒன்று உடலை தனிமை படுத்தி வைத்துக் கொள்ளுதல் மற்றொன்று மனதை தனிமை படுத்தி வைத்துக் கொள்ளுதல் என்று இரண்டு வித தனிமைகளை பற்றி இங்கு காண்கிறோம்.

1.உடலை தனிமைபடுத்துக் கொள்வது:-

உடலை எப்படி தனிமைபடுத்துக் கொள்வது என்றால் தியானம். தியானம் அல்லது யோகம் இதன் மூலம் நம் உடலை தனிமைபடுத்தி நமது என்ன அலைகளை தூய்மைபடுத்து மனதை தூய்மைபடுத்தி வைத்துக் கொள்வதினால் மரணமில்லா பெருவாழ்வானது நமக்கு வாய்கப் பெறும் என்று வள்ளல் பெருமானார் குறிப்பிடுகிறார்.

‘உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே’

என்னும் திருமூலரின் வரிகளுக்கு ஏற்ப உடலை நன்முறையில் பேணிகாப்பதன் மூலம் உயிர் என்னும் ஆன்மாவை அடைய முடியும். தீயபழக்கங்களை மது உண்டல், புலால்

உண்ணுதல், போதை பொருட்கள் மற்றும் அதிகப்படியான தேவையற்ற அளவுக்கு உணவு கொடுத்து உடலை அழிக்காமல் பாதுகாத்தல்.

2.உள்ளத்தை தனிமைபடுத்துதல்:-

'தாமரை இலை தண்ணீர்போல" பந்தம், பாசம், சொந்தம் என்னும் எல்லாவற்றோடும் ஒன்றி பிணைந்து இல்லாமல் சற்று பற்றற்று இருந்தேமே ஆனால் அடுத்த பிறவி என்பதற்கான வித்து அங்கு இல்லாமல் போய்விடும். மரணமில்லா பெருவாழ்வினை அங்கு அடைய முடியும். வாழும் போதே நம் இன்பமும் அடைய முடியும்.

இவை இரண்டுமே விழிப்பு நிலையில் எப்போது இருக்கும் என்றால் நாம் தெளிவுடன் இருக்கும் போது தான். நம் மனம் நம் விழிப்பு நிலையில் இருந்தால் தான் நம்புலன்கள் நம் கட்டுப்பாட்டில் இருக்கும். மனமது தூங்கிவிட்டால் புலன் தன்வழியே வேலைசெய்ய ஆரம்பித்து விடும் கோபம், ஆசை பொறாமை போன்ற குணங்கள் நம்மை ஆட்கொள்ளும். அவ்வாறு நிகழும்போது நம்மனது விழித்திருந்தால் மனமானது இதுதவறு என்று நம்மை கட்டுப்படுத்தினால் நாம்

அடக்கத்துடன் இருக்க முடியும். மணமானது தூங்கி இருந்தால் சில தீய குணங்களால் ஆட்கொள்ளப்பட்டு அல்லல்படுவோம். எனவே விழிப்புநிலை என்பது அவசியமாகிறது.

'தூங்குகற் என்கிறாய் தூங்குவனோ எனது
துரைவரும் ஒர்தருணத்தில் தூக்கமுந்தான் வருமோ
ஈங்கினிநான் தனித்திருக்க வேண்டுவதா தலினால்
என்னுடைத் தூக்கம்எனலாம் நின்னுடையதாக்கி
எங்கலறப் புறத்தேபோய்த் தூங்குகந்தோழி
என்னிரு கண்மணி அணையார்எனை அணைந்த உடனே

ஓங்குறவே நான் அவரைக் கவந்தவரும் நானும்
ஓன்றானபின்னர் உளை எழுப்புகின்றேன் உவந்தே

வள்ளல் பெருமானார் வாழ்விலேயே அவர் சொல்வது ‘பாதிஇரவில் எழுந்து அருளி பாவியேனை எழுப்பி என வள்ளல் பெருமானார் வாழ்கையிலேயே கடவுள் அவரை எழுப்பி ஞானத்தை அடைய வழிதிருத்தம் என்று குறிப்பிட்டுள்ளார். அதனால் இறைவனை அடைய வேண்டுமானால் எப்போதும் அகக்கண் விழிப்பு நிலை வேண்டும் என்று சான்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர் மனதை ஒருமுகப்படுத்தி ஆண்டவினிடத்தில் மனதை லயம் வைத்து ஆன்மசத்தி பெருகின்ற ஆற்றலை அளிப்பதே தனித்திரு என்பதன் பொருள். மனமானது தனித்து இல்லாவிடில் புற

இன்பங்களில் நாட்டம் கொண்டு மண்ணாசை, பெண்ணாசை ஆகியவற்றில் மதிமயங்கி அலைபாயும் என்கிறார் சும்மா இல்லாத மனம் மயங்கி அலைபாய்வதை வள்ளல் பெருமான் குறிப்பிடும் பாடல்வரிகள்

‘மயங்குபுத்தி என்னும் உலக வழக்காளிப்பயலே
வழித்துறைய் தென்றறியாய் வகைசிறிதும் அறியாய்
உயங்கிவிசா ரித்திடவே ஒடுகின்றாய் உணரும்
உளவறியாய் வீணுழைப்பிங் குழைப்பதில் என்பயனொ
வயங்கும்மனம் அடங்கியவா நடங்குகஞ் இலையேல்
மடிந்திடுவேன் கணத்தில் உனை வாய்மை இதுகண்டாய்
இயங்க என்னை அறியாயோ யார்ன என என்றணினையோ
எல்லாஞ்செய் வல்லவனுக் கிணிய பிள்ளை நானே

மனம் சும்மா இருப்பது இயலாத காரியம் தான், இருந்தாலும் அதனை அடக்கியாளும் திறன் பெற்றால் நற்பயிர்களை பெறமுடியும்.

விழித்திரு

‘பசித்திரு, தனித்திரு” என்று உபதேசித்த வள்ளல் பெருமானார் அடுத்தது விழித்திரு என்கிறார். விழித்திரு என்றால் தூங்காமல் கண்விழித்திரு என்;று பொருளல்ல. மனித வாழ்விற்கு தூக்கம்

இன்றியமையாதது தான். ஆனால் அளவுக்கு அதிகமாக தூங்கி சோம்பல் உண்டாகி அதனால் நோய் ஏற்படும் அதனால் அளவும் தூங்குதல் அவசியம் என்று குறிப்பிடுகிறார். இவற்றுள் இரண்டு வகை தூக்கம் உண்டு உடல் தூங்குகின்ற தூக்கம் மற்றொன்று மனது தூங்குகிற தூக்கம் என்று இரண்டு வகை உண்டு.

பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்ற இந்த மூன்று மந்திரத்தையம் வாழ்க்கையில் கடைபிடிக்க ஆரம்பித்தால் சாதாரணமான மனித நிலையில் இருந்து உயரிய ஞான நிலையை அடைவார் என்பது நிச்சயமான உண்மை.

முடிவுரை:-

'பசித்திரு தனித்திரு விழித்திரு எனும் வாக்கு ஆன்மீக ஞானத்திற்கு மட்டுமில்லாது சாதாரண மனிதர்களுக்கும் நன்மை அளிப்பதாகும்.

'மூவகைச் சித்தியின்
முடிபுகள் முழுவதும்
ஆ(ம்) வகை எனக்கு அருள்
அருட்பெருஞ் ஜோதி

கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி - என்ற மூவகை
சக்திகளையும், அவற்றின் சூழ்நிலைப் பேறுகளையும் முழுவதுமாக அளித்த அருட்பேரொளி.

துணைநூல்கள்

1. திருவருட்பா, திருவருட்பிரகாச வள்ளலார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை- 17

2. வள்ளலார் ஓர் அறிமுகம், குருசாமி. மா.பா, மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை, 1977.

3. வள்ளலார் வாழ்க்கை வரலாறு, பட்டத்தி மைந்தன், கௌரா பதிப்பகம், சென்னை. 2018

பாத அழுத்த சிகிச்சையின் வழியில் சிறுநீரகக் கற்களை அகற்றுதல்

முனைவர் அ.இருதயராஜ், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

ஆய்வுச்சுருக்கம்

மனிதன் அறிவியல் துறையில் முன்னேறியுள்ள இன்றைய காலகட்டத்தில் இயற்கையிலிருந்து விலகியே வாழ்வதால் நோய்கள் பெருகிக் காணப்படுகின்றன. இன்றைய சூழ்நிலையில் ஆரோக்கியம் பெறுதல் என்பது அறிதான உன்றாக உள்ளது. அவ்வகையில் எளியமுறையில் நலமளிக்குமுறையான நுண்ணழுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு சிறுநீரகக் கற்களை எவ்வாறு அகற்றுவது என்பதைச் செய்முறை ஆய்வு முறையில் விளக்கப்பெறுகின்றது.

திறவுச்சொற்கள் நிறுநீரகம், நிறுநீரககுழல் , நிறுநீரகபை

முன்னுரை

பண்டைய மக்களின் வாழ்வியல் இயற்கையோடு இணைந்ததாக அமைந்திருந்தன. அவர்கள் உடல் அமைப்பு இயற்கையைச் சார்ந்ததாக விளங்கியது. உடல் நலம் பெற உடலில் நுண்ணழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டார்கள். குருதியின் அமில-கார நிலையைப் சீர்ப்படுத்தி, கழிவுகளை வெளியேற்றி முழு உடலைச் சீர்நிலையில் செயல்பட வைப்பதில் சிறுநீரகம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இச்சிறுநீரகத்தில் உண்டாகும் கற்களை எவ்வாறு நுண்ணழுத்த முறையில் அகற்றுவது என்பதே இவ்வாய்வாகும்.

சிறுநீரகக் கற்கள் ஏற்படகாரணம்

சிறுநீர்த்தேக்கம், சிறுநீரின் அடர்த்தி அதிகரித்தல், நீண்ட நாள் உடல் அசைவின்றி படுக்கையிலேயே இருத்தல், உடல் செயல்பாடு குறைந்த வாழ்க்கை முறை, நீரற்ற நிலை(Deydration), வளர்சிதை மாற்றப் பிரச்சனைகள், இரத்தத்தில் கால்சியத்தின் அளவு அதிகரித்தல், உணவில் பியூரின் ஆக்சலேட் கால்சியம் மற்றும் விலங்குப் புரதங்களின் அளவு அதிகமாக இருத்தல் ஆகியவற்றின் காரணத்தால் சிறுநீரகப் பாதையில், சிறுநீரகத்தில் கற்கள் ஏற்படுகின்றன.

சிறுநீரகக் கற்கள் உள்ளதற்கான அறிகுறிகள்

இதனால் சிறுநீரகம் மற்றும் சிறுநீரகப்பாதையில் வலி, இடுப்புப் பகுதியில் ஆழ்ந்த தீவிரக் கடுமையான வலி, இடுப்பின் பக்கங்கள் மற்றும் தொடை அல்லது பிறப்புறுப்புப் பகுதியில் கீழ்நோக்கி வலி பரவுதல், குமட்டல், வாந்தி, உடல் வெளுத்துக் காணப்படுதல் (Pallor), இரத்த அழுத்தம் மற்றும் நாடித்துடிப்பு அதிகரித்தல், அடிக்கடி சிறுநீர் கழிக்கும் தன்மை, சிறுநீரில் இரத்தம் காணப்படுதல், காய்ச்சல் மற்றும் குளிர்காய்ச்சல். இரத்தத்தில் யூரியா. கிரியேட்டனின், யூரிக் அமிலங்கள் மற்றும் பொட்டாசியம் கூடுதலாக இருத்தல் போன்ற நோய்கள் கணப்படுகின்றன.

சிறுநீரகக் கற்களைக் கண்டறிதல்

உடலின் உள்ளுறுப்புகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக உடலின் வெளித்தோற்றம் விளங்கியதைத் தமிழர்கள் அறிந்து வாழ்ந்தார்கள். உடலில் அமைப்பு, நிறம், உடலில் ஏற்படும் மணம், உடல் தோற்றத்தின் தன்மை ஆகியவற்றைின் அடிப்படையில் நோய்களின் பாதிப்பையும் நிலையினையும் கண்டறிந்தனர்.

சிறுநீரகப் பாதையில் கற்கள் எங்கு எவ்வாறு காணப்படுகின்றது என்பதை கையின் கட்டைவிரல் நுனிப்பகுதிக்கொண்டு தடவிப்பார்த்து கண்டறியவேண்டும். கற்கள் பெரிதாக இருப்பின் எவ்வடிவத்தில் அமைந்துள்ளது என்பதையும் கண்டறியவேண்டும்.

சிகிச்சைக்கான புள்ளிகள்

சிறுநீரகம் , சிறுநீரக் குழல், சிறுநீர்ப் பை, ஆகிய புள்ளிகளில் சிகிச்சை அளிக்கவேண்டும்

பாதத்தில் சிகிச்சை அளிக்கும் இடம்

கலிபோர்னியாவின் ரிஃப்ளெக்சாலஜி சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் உலக ரிஃப்ளெக்சாலஜி அறக்கட்டளையின் துணைத் தலைவராகவும் அமெரிக்காவின் ரிஃப்ளெக்சாலஜி சங்கத்தின் இயக்குநர்கள் குழுவில் பணியாற்றுகின்ற. ரிஃப்ளெக்சாலஜியில் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமும் மருத்துவப் பயிற்சியின் பின்னணியும் கொண்ட ஸ்டீஃபனி சபௌஞ்சியன் (Stefanie Sabounchian) படத்தில் உள்ளவாறு குறிப்பிட்டுள்ளார்.



நிரப்பு மருத்துவத் துறையில் 35 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள டெனிஸ், 60,000 க்கும் மேற்பட்ட சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளதாக மதிப்பிடுகிறார். அனைத்து வகையான மசாஜ், ஆஸ்டியோபதி, அரோமாதெரபி, ரிஃப்ளெக்சாலஜி, இந்திய தலை மசாஜ், கிரானியோ-சாக்ரல் சிகிச்சை மற்றும் பிற சிகிச்சைகளில் அவர் விரிவாகப் பயிற்சி பெற்று ஒரு திறமையான பயிற்சியாளராகவும், 1988-2017 வரை அவர் தனது சொந்த நிரப்பு மருத்துவக் கல்லூரியின் முதல்வராகவும் இருந்த டெனிஸ் வவெல்லோ பிரவுன் ரிஃப்ளெக்சாலஜிக்கான புள்ளிகளைப் படம் 4, 5, 6, 7 உள்ளவாறு குறிப்பிடுகின்றார்.



ஐக்கிய நாடுகளில் இருந்து கொண்டு 24 மொழிகளில் ரிஃப்ளெக்சாலஜி வெளியிட்ட, மினசோட்டா பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியில் நடத்தப்பட்ட ஒரு எஃப்.எம்.ஆர்.ஐ ரிஃப்ளெக்சாலஜி ஆராய்ச்சி திட்டத்தில் நரம்பியல் விஞ்ஞானிகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்ற பார்பரா மற்றும் கெவின் குன்ஸ் ஆகியோர் ரிஃப்ளெக்சாலஜிக்கான புள்ளிகளைப் படத்தில் உள்ளவாறு குறிப்பிடுகின்றார்கள்.



உடற்கூறியல் உடலியல் மற்றும் நோயியல் அத்துடன் ரிஃப்ளெக்சாலஜி (reflexology) போன்ற ஆரோக்கியம் மற்றும் நலம் சார்ந்த துறைகளில் நிபுணத்துவம் பெற்ற அமெரிக்காவைச் சேர்ந்த ரூத் ஹல் உடலைச் சமநிலைப்படுத்தி தன்னைத்தானே குணப்படுத்த ஊக்குவிக்கும் ஒரு மென்மையான, ஊடுருவாத சிகிச்சைக்கான புள்ளிகளை புள்ளிகளைப் படத்தில் உள்ளவாறு குறித்துள்ளார்.



மேற்கண்டவற்றின் அடிப்படையிலும் சுமர் ஐம்பது ஆண்டுகள் சிகிச்சை அளித்தலின் விளைவாகவும் உடல்நலக்குறைவுள்ளவர்களின் பாதங்கள் வெளிப்படுத்திய வெளிப்பாடுகளின் அடிப்படையிலும் பாதங்கள் உடலின் இயக்க உறுப்புகளுக்கான புள்ளிகளை அடையாளம் காண முடிகின்றன.



சிறுநீரகங்கள் இரத்தத்தை வடிகட்டி, கழிவுகளை அகற்றி உடலின் திரவ சமநிலையைக் கட்டுபடுத்தி அதன் மூலம் எலக்ரோலைட்டுகளின் அளவை பாராமரிக்கின்றன. உடலின் உள் சூழலைச் சீராகவும் வசதியாகவும் வைத்திருக்கும். இவ்வுறுப்புக்கான புள்ளி பாதத்தின் உள்புற மையத்தில் அட்ரினல் சுரப்பிக்கான புள்ளியின் கீழ் படம் 3 உள்ளவாறு இரு பாதங்களிலும் அமைந்துள்ளது என்பது சிகிச்சை அளித்தலின் விளைவால் கிடைக்கப்பெற்றது.



சிறுநீர்க் குழாய் மேல் பகுதி வயிற்றுப் பகுதியிலும், கீழ் பாதி இடுப்புப் பகுதியிலும் அமைந்துள்ளது. சிறுநீர் குழாய் சுமார் 20 முதல் 30 செ.மீட்டர் நீளம் இருக்கும். சிறுநீர் குழாய் 3-லிருந்து 4 மி.மீ அகலம் கொண்டது. இவ்வுறுப்புக்கான புள்ளி பாதத்தின் உட்புறத்தின் மையத்தில் சிறு நீரகப் புள்ளியிலிருந்து தொடர்ந்து குழல் போன்ற அமைப்பில் இடது பாதத்தில் இடது புறமாகவும் வலது பாதத்தில் வலது புறமாக வளைந்து படம். 4 உள்ளவாறு இரு பாதங்களிலும் அமைந்துள்ளது என்பது சிகிச்சை அளித்தலின் விளைவால் கிடைக்கப்பெற்றது.



சிறுநீரகப் பை என்பது ஒரு வெற்றுத் தசை உறுப்பு ஆகும். இது சிறுநீரகங்களில் இருந்து சிறுநீரைப் பெற்றுச் சேமித்து சிறுநீர் கழிக்கும் பொழுது சிறுநீர் பையின் தசைகள் அழுத்தப்பட்டுச் சிறுநீரை வெளியேற்றுகிறது. இவ்வுறுப்புக்கான புள்ளி பாதத்தில் உள்புறப் பக்கவாட்டில், குதிகாலின் சற்று மேலே மூட்டுப் பகுதியின் அருகில் குவிந்த பகுதியில் படம். 5 உள்ளவாறு இரு பாதங்களிலும்

அமைந்துள்ளது என்பது சிகிச்சை அளித்தலின் விளைவால் கிடைக்கப்பெற்றது.

பாதத்தில் சிகிச்சை அளிக்கு முறைகள்

சிறுநீரகம் தொடர்பான நோய்களுக்கு மேலே கூறப்பட்ட சிகிச்சைக்கான புள்ளிகளில் சிகிச்சை அளிக்கும் முறைகள். சிறுநீரகப் பாதையில் எப்பகுதில் கற்துகள்கள் தேங்கியுள்ளன என்பதையும் எவ்வடிவத்தில் உள்ளது என்பதையும் கண்டறியவேண்டும். கற்கள் பெரியதாக இருப்பின் அவற்றை சிகிச்சைக்கான கருவிக்கொண்டு 100 விழுக்காடு அழுத்தம் கொடுத்து அவற்றை துகள்களாக மாற்றவேண்டும். உடைத்து துகள்களாக மாற்றியபின் படம் 1மற்றும் 2 உள்ளவாறு சிறுநீரகம்,

படம்1 சிறுநீரகம்



படம் 2 சிறுநீர்ப்பை

சிறுநீரகக் குழலுக்கான புள்ளியில் 75விழுக்காடு அழுத்தம் கொடுத்து மேலிருந்து கீழ்நோக்கியவாறு சிகிச்சை அளிக்கவேண்டும்.பின்னர்2 லிட்டர் தண்ணீர் அருந்தவேண்டும்.

முடிவுரை

சிறுநீரகத்திற்கான புள்ளியில் 75விழுக்காடு அழுத்தம் கொடுத்து மேலிருந்து கீழ்நோக்கியவாறு சிகிச்சை அளித்தால் நிறைவான விளைவுகள் கிடைக்கப்பெறுகின்றன என்பது ஆய்வில் கிடைக்கப்பெற்ற

முடிவாகும். இரு கால்களிலும் சமமான அழுத்தம், ஹார்மோன்களைச் சமநிலைப்படுத்த உதவும்.

சிறுநீரகக் குழலுக்கான புள்ளியில் 75விழுக்காடு அழுத்தம் கொடுத்து மேலிருந்து கீழ்நோக்கியவாறு சிகிச்சை அளித்தால் நிறைவான விளைவுகள் கிடைக்கப்பெறுகின்றது. இரு கால்களிலும் சமமான அழுத்தம், ஹார்மோன்களைச் சமநிலைப்படுத்த உதவும்.

சிறுநீர்ப்பைக்கான புள்ளியில் 100விழுக்காடு அழுத்தம் கொடுத்து வலது காலில் வலதுபுறம் நோக்கியவாறும் இடதுகாலில் இடதுபுறம் நோக்கியவாறும் சிகிச்சை அளித்தால் நிறைவான விளைவுகள் கிடைக்கப்பெறுகின்றது. இரு கால்களிலும் சமமான அழுத்தம், ஹார்மோன்களைச் சமநிலைப்படுத்த உதவும்.

துணைநூற் பட்டியல்

1. Stefanie Sabounchian, Press Here Reflexology- For Beginners,
2. Denise Whichello Brown, The Reflexology Healing Handbook, Quantum Publishing Ltd. The Old Brewery, 6 Blundell Street, London N7 9BH
3. Kevin andBarbara Kunz, Hand Foot Reflexology, 1230 Avenue of the Americas New York, New York 10020
4. Ruth Hull, The Complete Guide to Reflexology, ealing Arts Press, One Park Street, Rochester, Vermont 05767
5. Barbara& Kevin Kunz, complete reflexology for life1230 Avenue of the Americas New York, New York 10020
6. Mildred Carter, Healing yourself With Foot Reflexology,

பாரதிதாசனும் திராவிட இயக்கக் கொள்கைகளும்

முனைவர் ச.பிரியா, உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

முன்னுரை:

தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முதலாக 1920 – ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற இயக்கமாக திராவிட இயக்கம் உருவானது .இந்திய விடுதலைக்குப் பின்னர் , தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு அடுத்தப்படியாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் திராவிட இயக்கம்தான். இவ்வலிமை வாய்ந்த இயக்கத்தின் தலைவர்கள், காங்கிரசுத் தலைவர்களை விட பெரிய அளவில் பேராற்றலுடன் எழுத்தையும் பேச்சையும் தங்கள் இயக்கத்தின் பெருங்கருவியாகப் பயன்படுத்திக் கொண்டனர்.தமிழ் மொழி வளர்ச்சியிலும் தமிழ் இதழியல் வரலாற்றிலும் வளர்ச்சியிலும் திராவிட இயக்கத்திற்கு பெரும்பங்குண்டு.திராவிட இயக்கத் தலைவர்களின் ஏடுகளும் மேடைகளும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பெரும்பாங்காற்றின என்றால் அது மிகையாகாது.

திராவிட இயக்கம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாது, தமிழ் நாட்டில் அன்றைய காலகட்டத்தில் நிலவியிருந்த பல வன்கொடுமைகளை எதிர்த்துப் போராடி தமிழ்ச் சமூகத்தினைப் பிராமணர் பிடியிலிருந்தும் , மூடபழக்க வழக்கங்களிலிருந்தும் விடுவிக்க மிகுந்த அளவில் போராடியது; இவ்வியக்கத்தின் தலைவர்கள் பெரும்பாலும் இதழ் ஆசிரியர்களாகவும், எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் , தம்முடைய இயக்கம் சார்ந்த கொள்கைகளைக் கதை, கவிதை, நாடகம்,கட்டுரை, சிறுகதை, நாவல் , தொடர்கதை என பல வடிவங்களில் எழுதி வெளியிட்டனர்.

ஆய்வு நோக்கம் :

சமூக மறுமலர்ச்சியில் திராவிட இயக்கத்தின் பங்கு மிகப் பெரிது. இவ்வியக்கத்தின் ஆணி வேராக விளங்கிய சிந்தனையாளர்களில் பாவேந்தர் பாரதிதாசனின் பணியும் போற்றுதற்குரியது. பாரதிதாசனின் கவிதைகளில் திராவிட இயக்கக் கொள்கைகள் பரவி இருப்பதை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

திராவிட இயக்கக் கொள்கைகள் – சமூக மறுமலர்ச்சி: தமிழ்ச் சமூக வரலாற்றில் விளிம்புநிலை மக்களுக்காகப் போராடி அவர்கள் வாழ்வு மலரவும், தமிழகத்தில் புரையோடிக் கிடந்த சில களைகளை நீக்கிச் சமூக மறுமலர்ச்சிக்கு வழிகோலிய தன்மையினையும் திராவிட இயக்கத்தின் கொள்கைகளாகக் காண முடிகின்றது. அவற்றுள் பார்ப்பணிய எதிர்ப்பு, இந்தி ஆதிக்க எதிர்ப்பு, சாதி - மத எதிர்ப்பு, வடமொழி எதிர்ப்பு, வர்ணாசிர தர்ம எதிர்ப்பு,போலி அரசியல், பொய்யான மூட பழக்க வழக்கங்கள்,தேவதாசி முறை எதிர்ப்பு ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

கைம்பெண் மறுமணம், கலப்புமணம் ஆதரிப்பு , பெண்ணுரிமை, பெண்களுக்கு கல்வியுரிமை, சொத்துரிமை, ஆண் பெண் சமத்துவம் , தமிழ் மொழி முன்னேற்றம் , தன்மானக் கொள்கைகள் , சுய மரியாதைத் திருமணம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தது.மேலும் ஒவ்வொரு துறைச் சார்ந்த அறிஞர்கள் எழுதிய பொருளியல், தத்துவம், அறிவியல் , அரசியல், இலக்கியம், குடும்பக் கட்டுப்பாடு கருத்துகளைப் பொதுமக்களிடையே கொண்டு சேர்ப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் : பாரதிதாசன் தமிழின் உயர்வுக்கும் தமிழரின் வாழ்விற்கும் பாடியவர்; மக்களுக்காக எளிய தமிழில் மாண்புறு கவிதைகள் படைத்தவர்; பாரதிதாசன் கவிதைப் பரம்பரையைத் தோற்றுவித்தவர்; திராவிட இயக்கப் பெண் சிந்தனையாளர்களில் குறிப்பிடத்தக்கவரான குஞ்சிதம் குருசாமி அம்மையாரே, இவரை தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தியவர்; இவர் தன் மகளுக்காகப் ‘பெண்

பிள்ளைத் தாலாட்டைப்'' பாடச் செய்தவர்.அதனால் ''ஆண் பிள்ளைத் தாலாட்டும்'' மலர்ந்தது. இவரே 1933- இல் பாரதிதாசன் கவிதைகளையெல்லாம் ஒன்று திரட்டி ''பாரதிதாசன் கவிதைகள்'' என்னும் முதல் தொகுப்பை வெளியிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறே பல கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் திராவிட இயக்கம் வளர்த்தது.

பகுத்தறிவுச் சிந்தனைகள்:

திராவிட இயக்கத்தின் முக்கியக் கொள்கையாக இருந்தது பகுத்தறிவுச் சிந்தனைகளே யாகும். பகுத்தறிவு என்பது அறிவுக்குப் பொருந்தாத கருத்துகளை விலக்கி, அறிவுக்கு உகந்த கருத்துகளை ஏற்றுக் கொள்ளுதலை நாம் பகுத்தறிவு என்கிறோம்.அதாவது யார் என்ன கருத்து உரைத்தாலும் அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் ஏன்? எதற்கு? என கேள்வி கேட்டு விடைப் பெற வேண்டுமென்கிறது.

பாரதிதாசன் தமது பாடல்களில் பகுத்தறிவுக்கு முதன்மை அளித்தவர். இந்த பகுத்தறிவுக் கொள்கைக்குத் தடையாய் இருப்பவை மூடப்பழக்க வழக்கங்களும், சாதி , மதச் சடங்குகளும் என்பதை உணர்ந்த பாரதிதாசன் அவற்றை உருவாக்கிய பார்ப்பனர்களையும் அடியோடு கடுமையாக எதிர்த்தார்.''பச்சை விளக்காகும் – தம்பி உன் பகுத்தறிவு'' என்கிறார். இளைஞர்கள் தொடர்ந்து செயல்பட வேண்டுமானால் தடையில்லாத பச்சை விளக்காக உலகம் இருக்க வேண்டுமென்கிறார்.

சாதியும் சதியும் :

பகுத்தறிவுக்கு எதிரானதாக சாதியையும், மதத்தையும் வளர்த்தால் எந்த நாடும் செழிப்படையாது . பகுத்தறிவுக்குப் பொருந்தாத இந்தச் சாதிப் பிரிவை, ஆரியர்கள் தம்மை உயர்த்திக் கொள்ளச் செய்த சதி என்பதை, ''சாதிப் பிரிவு செய்தனர் ; தம்மை உயர்த்துவதற்கே ; நீதிகள் சொன்னாரடி - சகியே ; நீதிகள் சொன்னாரடி '' (பாரதிதாசன் கவிதைகள் : சமத்துவப் பாட்டு) என்னும் கவிதை வரிகளில் தாங்கள் வகுத்த சாதிப்பிரிவுகளுக்கேற்ப அவர்கள் நீதியையும்

வகுத்துக் கொண்டதைக் கடுமையாகச் சாடுகின்றார். சாதியால் தீண்டாமை என்னும் பேய் உருவாக்கப்பட்டதை,

'' தீண்டாமை என்னும் ஒரு பேய் – இந்தத்
தேசத்தில் மாத்திரமே திரியாக் கண்டோம் – எனில்
ஈண்டு பிற நாட்டில் இருப்போர் – செவிக்கு
ஏறியதும் இச்செயலைக் காறி உமிழ்வார்" –

[ஞாயமற்ற மறியல்]

உலக நாடுகள் எதிலும் இல்லாத இந்த சாதிப்பிரிவினைப் பிற நாட்டினர் கேள்விப் பட்டாலும் காறி உமிழ்ந்து விடுவர் என சாதிப் பிரிவினால் ஏற்படும் கொடுமையையும் சமூகச் சீர்கேடுகளையும் சாடுகின்றார்.

சாதி, மதங்களால் மனிதரில் வேற்றுமை நிலவுவதும் பிரித்தாளும் சூழ்ச்சி நடைப்பெறுவதையும் வன்மையாகக் கண்டிக்கிறார் ''உலகினில் சாதிகள் இல்லை – என் உள்ளத்தில் வேற்றுமை இல்லை'' (பாரதிதாசன் கவிதைகள் : காதல் பாடல் – அவள் அடங்காச் சிரிப்பு) என்றும் '' மதம் வளர்ந்தால் படுபாழாம் நாடு''என்றும் ''மதம் என்னும் சூளையிலே தமிழ் நட்டால் முளையாது'' என்பதால் இந்து மதம் என்னும் பார்ப்பனியதிக்கத்தால் வடமொழியும் சமஸ்கிருதமும் வந்து ஆதிக்கம் பெறுமே யல்லாது தமிழ் தழைக்காது. ஆகவே பார்ப்பனிக் கொள்கைகளையும் சமஸ்கிருதத்தையும் ஒழிக்க வேண்டுமென அறைக்கூவல் விடுப்பதையும் அறியலாம்.

பார்ப்பனியத்திற்கு எதிரான கண்டனம்: திராவிட இயக்கம் தொடங்கப்பட்டதன் முக்கிய நோக்கம் பார்ப்பனியத்தினை எதிர்ப்பதே என" 01-06-1917 – இல் வெளியான திராவிடன் இதழின் முதல் பக்கத்தில் வெளிவந்திருப்பதை அ.மா.சாமி அவர்களும் தம்முடைய நூலில் எடுத்துக்காட்டி இருப்பார்.(தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி, அ.மா.சாமி, ப.247) காரணம் அக்காலத்தில் பிராமணர்களே அனைத்து துறைகளிலும் அரசாங்கப் பணிகளிலும் ஆட்சிப் பொறுப்பிலும் இடம் பெற்றிருந்ததே இதற்கு முதன்மைக் காரணமாக அமைகின்றது.

''பணிமனை ஆட்சி பட்டம் யாவும் பார்ப்பா னுக்கே என்று புகன்ற உணரச் செய்தான்''. (பாரதிதாசன் கவிதைகள்- பிரிவு தீது). முடியாட்சி காலத்திலும் சரி , குடியாட்சி காலத்திலும் சரி பார்ப்பணர்களே முதன்மைப் பெறுவதிலுள்ள சதியைப் பாவேந்தர் கடுமையாகச் சாடுகின்றார்.

''யாமிட்ட சோறுகறி எப்படி என்று நாட்டு மன்னனைக் கேட்டனர் பார்ப்பனர். மேலும் மன்னன் விளம்புவான்; 'தாழ்ந்தவர் தம்மில் ஒன்று சேர்ந்தனர்; உயர்ந்தவர் நாமும் ஒன்று சேர்ந்தோம்'' என்றான் பார்ப்பனர். இப்படி விடுவதும் ஏற்றதல்ல ; தாழ்ந்தவர் போக்கைத் தடுக்க வேண்டும் ; மனுநூல் நாட்டில் வழங்க வேண்டும் ; அதற்குப் பார்ப்பனர் காப்பாற்றப் படுதல் வேண்டும் ; ஆள்வோர் பார்ப்பனர் சொற்படி ஆள வேண்டும்.'' (பாரதிதாசன் கவிதைகள் - கடல்மேற் குழிகள்). ஏனெனில், விளைப்பொருள் விற்கவும்,வளவயல் உழவும்,குளச் சேறு எடுக்கவும், இரும்பு அடிக்கவும்,கரும்பு நடவும் , உப்புக் காய்ச்சவும், தப்பு அடிக்கவும், சுவர் எழுப்பவும், உவர் மண் எடுக்கவும், பருப்புப் புடைக்கவும், செருப்புத் தைக்கவும், மாடு மேய்க்கவும், ஆடு காக்கவும், வழிகள் அமைக்கவும், கழிவடை சுமக்கவும், திருவடி தொழுது நம் பெருமை காக்கவும் , வரும்படி நமக்கு வைத்து வணங்கவும் , நாலாம் வகுப்பு நமக்கு வேண்டுமே'' என்றனர் .

பார்ப்பனர்கள் தங்களின் நிலையை உயர்த்திக் கொள்ள செய்த சதியே சாதி, மதம், சடங்கு, நால்வருண பாகுபாடு என்ற முறைகேடுகள் நிகழக் காரணமாய் இருந்தன என்பதைச் சுட்டிக்காட்டி பார்ப்பனர்களை எதிர்ப்பதை அறிய முடிகின்றது. இதனைத் தான் திராவிட இயக்கம் வருணாசிரம எதிர்ப்பு என்றது.

திராவிடனும் ஆரியனும் : கேரள நாடு என்றும் ஆந்திர நாடு என்றும் பிரிப்பது கூடாது. இவையெல்லாம் சேர்ந்ததே நம் திராவிட நாடு . அவர்கள் பேசும் மொழிகள் திராவிட மொழிகள் என்பதை, ''கேரளம் ஆந்திரம் சேர்ந்த மொழிகள் திராவிடம் ஆகும் அண்ணே!" (பாரதிதாசன்

கவிதைகள் – பிரிவு தீது) என்று எடுத்துரைப்பதோடு , இவ்வாறு பிரிப்பதெல்லாம் ஆரியர் சூழ்ச்சி என்றும் இவையெல்லாம் நெடுங்காலம் நீடிக்காது; இவர்களை முறியடித்து திராவிடனே நாட்டை ஆளுவான் என்பதை,

'' தன்னினம் மாய்க்கும் தறுதலை யாச்சி சற்றும் நிலைக்காது ; மாளும்.

இந்நிலம் திராவிடம் ஆண்டோர் இறந்த நாள் வரலாறு காண்க ;

திராவிடர்க் கின்னல் செய்துதன் நன்மை தேடினான் எனிலவன் நாய்தான்".-

- (பாரதிதாசன் கவிதைகள்: இனி எங்கள் ஆட்சி)

என்னும் பாடல் வரிகள், திராவிடனை வீழ்த்திய ஆரியனின் குள்ள நரித்தனத்தை எச்சிலுக்குக் காத்திருக்கும் நாயோடு ஒப்பிட்டுரைக்கிறது.

கைம்பெண் கொடுமை :

பெண்கள் இளம் பருவத்தை அடைவதற்கு முன்பாகவே அவர்களுக்கு பாலிய விவாகம் செய்து வைத்து அவர்களைச் சிறு வயதிலேயே கைம்பெண்ணாக்கும் வன்கொடுமையைத் திராவிட இயக்கம் கடுமையாக எதிர்த்தது. கைம்பெண்களின் கொடுமை நிலையினை அறிந்த பாவேந்தர் , அப்பெண்களின் வயதினையும் உணர்வினையும் மதிக்காத ஆணுலகத்தைக் கடுமையாகச் சாடுகின்றார்.

'' அழகிய பெண்கள் – நமக்கோ
அழுகிய பழத்தோல்
கைம்மை எனக்கூறி – அப்பெரும்
கையினிற் கூர்வேலால்
நம்மினப் பெண் குலத்தின் – இதய
நடுவிற் பாய்ச்சுகின்றோம்- பெண்களின்
சிந்தியை வாட்டுகின்றோம்.
மாண்டவர் மாண்ட பின்னர் – அவனின்
மனைவியின் உள்ளத்தை

ஆண்டையார் காண்பதில்லை – ஐயகோ,

அடிமைப் பெண்கதியே. -(கைம்பெண் கொடுமை)

என்னும் கவிதை வரிகள் அன்றையச் சூழலிலிருந்த கைம்பெண்களின் கொடுமையினை எடுத்துரைக்கின்றன. குழந்தை மணத்தின் கொடுமையை,

"ஏழு வயதே எழிற்கருங் கண்மலர்
கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு,
தாவாச் சிறுமான் , மோவா அரும்பு,
தாலி அறுத்துத் தந்தையின் வீட்டில்
இந்தச் சிறுமி யிருந்திடு கின்றாள்".–

என்னும் பாடலில் திருமணமாகி தாலி அறுத்து கைம்மை நிலையில் தனித்து நின்ற பெண்ணின் நிலை சிறுமி என்ற போது மனம் கணக்கிறது. இளமையான அழகிய பெண்ணுக்கு தள்ளாடும் கிழவனை மணமுடித்து வைக்கும் மூடத் திருமணத்தையும் வன்மையாகக் கண்டிக்கிறார்.

"மண்ணாய்ப் போக, மண்ணாய்ப் போக,
மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப் போக,
சமூகச் சட்டமே, சமூக வழக்கமே''- (மேலது)

என்னும் கவிதை வரிகளில் , மூடத் திருமணத்தை எதிர்த்து, இழிவான சமூகச் சீர்கேடுகளை எதிர்த்துப் பெண்களுக்காகக் குரல் கொடுக்கின்றார். இவ்வாறாக தமிழ்ச் சமூகத்தில் ஊடுருவிக் கிடந்த பழைய மூடப்பழக்க வழக்கங்களுக்கும், பெண்களுக்கான கொடுமைகளுக்கும் தம் பாடல் வாயிலாகவும், இதழ்கள் வாயிலாகவும் புரட்சிக்கரமான கருத்துகளைச் சமூகத்தில் விதைத்தவர் பாவேந்தர் பாரதிதாசன். இவர் தம் கவிதைகள் இன்புறுத்தும் நோக்கத்தை மட்டுமே கொள்ளாமல், சமூகத்தின் எழுச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அறிவுறுத்தும் கவிதைகளையும் அளிக்கும் நோக்கில் படைக்கப் பட்டுள்ளன. புரட்சிக்கவிஞரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடி

முடித்த நாம் அவரின் அறுபத்திரண்டாவது நினைவு நாளையும் கொண்டாடும் நிலையில் உள்ளோம்.

தமிழர்களாகிய நாம் தமிழறிஞர்களின் பிறந்த நாளையும் நினைவு நாளையும் கொண்டாடி மகிழ்ந்தால் மட்டும் போதாது. அவர்களின் கொள்கைகளையும் பகுத்தறிவுச் சிந்தனைகளையும் உளமாற ஏற்று, நடைமுறையில் பகுத்தறிவுச் சிந்தனையோடும், பெண்களைப் போற்றும் மாமனிதர்களாகவும், நாட்டுப் பற்றும் தாய்மொழிப் பற்றுடையவராகவும் விளங்க வேண்டும். அடிப்படையில் சிலைகளாக நின்றவர் வார்த்தைகளெல்லாம் மனதில் கல்லில் பதித்த சொல்லாக நிலைப்பெற்றால் தான் இச்சமூகம் மேன்மேலும் சீர்பெறும்.! வளம் பெறும்! இதுவே பாரதிதாசனைப் படிப்பதின் முழுமைப் பலனையும் தரும். இதுவே இக்கட்டுரையின் நோக்கத்தை நிறைவுச் செய்யும்.

முடிவுரை:

பாரதிதாசனின் படைப்புலகை ஒரு கட்டுரைக்குள் அடக்கி விட முடியாது. திராவிட இயக்கத்தின் அடிப்படையான ஒரு சில கருத்துகளை மட்டும் எடுத்துக் கொண்டு இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.திராவிட இயக்கம் இல்லையேல் பெண்ணினம் கல்வியறிவு பெற்றும் தன்மானத்தோடும் சுய மரியாதையோடும் வாழ்ந்திருப்பது கனவாகி போயிருக்கும். திராவிட இயக்கம் சமூக மறுமலர்ச்சிக்கு பெரும் பாங்காற்றியுள்ளது போற்றி வணங்கத்தக்

துணை நூற்பட்டியல் :

1. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை. ஏழாம் பதிப்பு- 2010.

2. தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி, அ.மா. சாமி, தமிழர் பதிப்பகம், 1987, சென்னை

திருப்பாவை பாசுரங்களில் வெளிப்படும் இறைச்சிந்தனை

சு. பத்மா முனைவர் பட்ட ஆய்வாளர்,
முனைவர் யு.துர்கா தேவி உதவிப் பேராசிரியர் மற்றும் நெறியாளர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை – 117

ஆய்வுச்சுருக்கம்

தேக நலத்தில் சிரத்தையுடைய சாதாரண மனிதர்களை விடவும் ஆத்ம சொரூபம் அறிந்த ரிஷிகள் பல மடங்கு உயர்ந்தவர்கள். ரிஷிகளை விட ஆழ்வார்கள் பன்மடங்கு உயர்ந்தவர்கள். மற்றைய ஆழ்வார்களை விடப் பெரியாழ்வார் எத்தனையோ மடங்கு உயர்ந்தவர். இந்த பெரியாழ்வாரை விட ஸ்ரீ ஆண்டாள் அனேக மடங்கு உயர்ந்தவள்" என்கிறார் திவ்ய பிரபந்த வியாக்கியான சக்கரவர்த்தியான பெரிய வச்சான் பிள்ளை. சூடிக்கொடுத்த சுடர்கொடியாம் ஆண்டாளின் பெருமையை இவ்வாறு கூறுகிறார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் பெற்றெடுத்த சூடிக்கொடுத்த சுடர்கொடியாம் கோதை ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை பாடல்களில் வெளிப்படும் இறை சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும் குறிப்பாக பாவை நோன்பு நோற்பதால் ஏற்படும் ஆன்ம சித்தியை பற்றியும், மார்கழி மாத சிறப்பு பற்றியும், நீராடல் பற்றியும், துயிலெழுதல் பற்றியும், கண்ணனின் கருணையை பற்றியும் கூறுவதே, இவ்வாய்வின் இலக்காகும்.

திறவுச்சொற்கள்

இறைச் சிந்தனை, மார்கழி மாத சிறப்பு, விரதம், ஆன்மசித்தி, இறைவன், பாவை நோன்பு.

முன்னுரை

பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளையாம் ஆண்டாள் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர். இவர் ஒருவரே பெண் ஆழ்வார். இவர் எழுதிய திருப்பாவை 30 பாடல்களை கொண்டதும் நாச்சியார் திருமொழி 143 பாடல்களை கொண்டதுமாக அமைந்துள்ளது. இவர் பாடிய பாடல்களை பாசுரங்கள் என்பர். பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடல்களை நாலாயிர திவ்ய பிரபந்தங்கள் என்பர். இதில் நாச்சியார் பாடிய திருப்பாவைக்கு மட்டுமே அதிக சிறப்புடையது ஏனெனில் ஒவ்வொரு வருடத்திலும் மார்கழி மாதத்தில் எல்லா வைணவ தளங்களிலும் இத்திருப்பாவை அனைத்து தரப்பு மக்களாலும் அதிகாலையில் பாடப்படுகின்றது என்றால் அதற்கு மிகையாகாது. எல்லா பெருமாள் கோவில்களிலும் நாச்சியாருக்கு தனி சன்னதி அமைத்திருப்பது தனிச்சிறப்பாகும். "மாதங்களில் நான் மார்கழி" என்கிறார் கண்ணபிரமாத்மா. இந்த மார்கழி மாதத்தில்தான் ஆண்டாள் பாவை நோன்பிருந்து இறைவனை அடைந்தாள். அவ்வாறு இறைவனை அடைய நோன்பெடுத்த அவள் ஒவ்வொரு நாளும் பாடியதே திருப்பாவை. பாவை நோன்பு என்பது பல பெண்கள் இணைந்து நடத்தும் கூட்டு வழிபாடாக அமைகிறது.

ஆண்டாளின் திருப்பாவை முப்பது பாசுரங்களைக் கொண்டது. அவற்றில் முதல் ஐந்து பாசுரங்கள் கண்ணனை அறிமுகப்படுத்துவதாகவும், விரதம் மேற்கொள்ளும் நீயதிகளை பற்றி கூறுவதாகவும், இறைவனை வாழ்த்தி சரணாகதி அடைவதாகவும், தாங்கள் நீராட மழை வேண்டி

மழைக்கடவுளுக்கு கட்டளையிடுவதாகவும், கண்ணனின் குலத்திற்கு பெருமை சேர்ப்பதாகவும் அமைந்துள்ளது.

அடுத்த ஆறு முதல் பதினைந்து பாடல்கள் கோதை நாச்சியார் தன் தோழியர் ஒவ்வொருவர் வீட்டு வாயிலிலும் சென்று தோழியரை துயில் எழுப்பும் விதமாக அமைந்துள்ளது. இப்பாசுரங்களில் கண்ணனின் பெருமைகளையும், பராக்கிரமங்களையும், அவர் எடுத்த அவதாரங்கள்

பற்றியும், கம்சன் அனுப்பிய அரக்கர்களை வீழ்த்தியவற்றைப் பற்றியும் தெளிவாக பேசப்படுகிறது. இந்த துயில் எழுப்புதல் என்பது வெறும் தூக்கத்திலிருந்து எழுப்புவது மட்டுமல்ல மாய இருளில் இருக்கும் அக இருளை போக்குவதும் ஆகும்.

இது மெய்ஞான சித்தியை தருவதாகவும் இந்த துயில் எழுப்புதல் பாடல்கள் அமைந்துள்ளன. பதினாறாவது பாடல் கண்ணனின் வீட்டு வாயிலில் காவல் காக்கும் காவலனை எழுப்புவதாகவும், 17வது பாடல் கண்ணனின் பெற்றோரையும் இல்லத்தாரையும் எழுப்புதல் போலவும் பதினெட்டாவது பாடல் முதல் 29 ஆவது பாடல் வரை நப்பின்னையை எழுப்பி தன் கணவனான கண்ணனை தன்னோடு அனுப்பி வைக்க வேண்டும் என்று நட்பினையை கேட்டு அழைத்தல் போலவும், இறைவனைப் போற்றுதல் போலவும் அமைந்துள்ளது.

இறுதியான 30 ஆவது பாடலில் திருப்பாவையை பாடுவதினால் நோன்பின் பலனாக அடையும் சிறப்பினையும், நன்மைகளையும் பற்றி பேசுகிறது. இதில் உள்ள இறைச் சிந்தனைகளை பற்றி பேசுவதே ஆய்வின் நோக்கமாகும்.

மார்கழி மாத சிறப்பு

"மாதங்களில் நான் மார்கழி" என்கிறார் மாதவன். அதனால் பன்னிரு மாதங்களில் மார்கழி மாதம் சிறந்ததாக கருதப்படுகின்றது. மார்கழி மாதம் வைணவர்களால் வைணவ மாதம் என போற்றப்படுகிறது. இதனாலேயே நாலாயிர திவ்ய பிரபந்தங்களை அரங்கநாதர் கோவிலில் இராபத்து பகல் 10 என்று நாட்களை பிரித்து 4000 பாடல்களையும் பாடி இன்றைக்கும் இறைவனை மகிழ்விக்கின்றனர்.

நோன்பிருந்து இறைவனை சரணாகதி அடைவதற்கும், இறைவன் அகமகிழ்ந்து தன் கருணையை வெளிப்படுத்துவதற்கும், அடியவர்கள் அதனை பெறுவதற்கும் மார்கழி சிறப்புடைய மாதமாக அமைகிறது. எனவே, தான் பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளையாம்

சூடிக்கொடுத்த சுடர்கொடியாம் ஆண்டாள் என்கிற கோதை அரங்க நாதனை தன் கணவனாக அடைய மார்கழி நோன்பினை நோற்கிறாள். இந் நோன்பினை கடைபிடிப்பதால் ஏற்படும் பரமானந்தத்தை தான் மட்டும் அடைந்தால் போதாது, தன்னை சார்ந்துள்ள அனைவரும் அடைய வேண்டி இப் பிரார்த்தனையை கூட்டு பிரார்த்தனையாக செய்ய விரும்புகின்றாள்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்,
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர் வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்

[திருப்பாவை பா.1]

முப்பிறவியில் செய்த புண்ணியத்தின் பயனாய் இப்பிறவியில் கண்ணன் பிறந்த அதே ஆயக்குளத்தில் செல்வச் சிறப்புடன் பிறந்துள்ளீர்கள். இப்பிறவி பயன் யாதெனில் கண்ணனை பற்றி பக்தி செய்து ஞானம் பெற்று சரணாகதி அடைவதே என்கிறாள்.

ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்,
கார்மேனிச்செங் கண்கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரென்பாவாய

[திருப்பாவை பா.1]

யசோதையின் இளஞ்சிங்கம், கார் மேனியுடையவன் செங்கதிர் போன்ற பிரகாசமான முகத்தை உடைய நாராயணன் நமக்கு பறை தர காத்திருக்கின்றான். அவனின் புகழ் பாடி பரவசம் அடைய வருவீர்களாக என ஆண்டாள் அழைக்கிறாள்.

மார்கழி நீராடல் மற்றும் விரத நியமங்கள்

ஒரு விரதம் மேற்கொள்ளும் போது அதற்கான விதிகளையும் சரியான முறையில் பின்பற்றுவதும் ஆண்டாள் பக்தியின் சிறப்பியல்பாகவே உள்ளன.

வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ? பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி,
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி,
மையிட் டெழுதோம், மலரிட்டு நாம்முடியோம்,
செய்யா தன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்,
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி,
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.

[திருப்பாவை பா.2]

வையத்து வாழ்வீர்காள் என்று விளித்த காரணத்தினால் அவர்கள் குறிக்கோளுடைய வாழ்க்கையை வாழ்பவர்கள் என்று பெறப்பட்டது. மேலும் நாமும் நம் பாவைக்கு செய்யும் கிரிசைகள் கேளீரோ என்று அடுத்து மொழிகிறார்கள். இந்த பாடலில் பாவை நோன்பு மேற்கொள்வதற்குரிய அனுஷ்டான முறைகள், நியமங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

பரந்தாமனின் மலர் அணைய திருவடிகளை பரவி பாடுவதையே முதன்மை விதியாக முக்கிய விதியாக கொள்கிறார்கள். இரண்டாவது விதியாக வைகறை நேரத்தில் எழுந்து பணி நீராடி புறத்தூய்மையும் செய்து கொள்கிறார்கள். பரமனடி பாடிய அதனால் அகத்தூய்மையும் நாற்காலே நீராடியதனால் புறத்தூய்மையும் அமைகின்றன. மூன்றாவதாக தகுதி உள்ள பெரியவர்களுக்கு துறவிகளுக்கு அவர்களுடைய தேவை அறிந்து கொடுக்க வேண்டிய அவற்றை கொடுக்கிறார்கள்.

பிச்சை என்று வரும் இல்லாதோர்க்கு வறியவருக்கு இயன்ற வரையில் எடுத்து வழங்குகிறார்கள் பெண்கள் சில விலக்குகளையும் மேற்கொள்கிறார்கள் அவர்கள் நெய்யுண்ணோம் பாலுண்ணோம் என்கிறார்கள். மேலும் கண்ணுக்கு மை தீட்டி, கூந்தலுக்குப் பூச்சூட்டியும்

தங்களை அலங்காரம் செய்து கொள்வதில்லை என்று முடிவெடுத்து கொள்கிறார்கள்.

நெய் உண்பதில்லை பால் குடிப்பதில்லை கண்ணுக்கு மை எழுதுவதில்லை கூந்தலுக்கு பூச்சூடி கொள்வதில்லை என்பன எல்லாம் அவர்கள் மேற்கொண்ட தீர்மானங்கள் ஆகும். சிற்பம் செய்ய முற்படுபவர்கள் இவற்றையெல்லாம் உயிர் செய்கிறார்கள். பிழைக்கும் வழியை அறிந்து கொள்கிறார்கள். இதிலும் இறை சிந்தனை அடங்கியுள்ளதை காண்கிறோம்.

ஆன்மசித்தி

தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலை பற்றி
வங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்
[திருப்பாவை பா.3]

ஆயர்பாடியில் உள்ள பசுக்கள் வள்ளல் பெரும் பசுக்கள் ஆகும். ஒரு பசுவே பல குடங்கள் நிறைய பால் சுரக்கின்ற வெண்மை மிக்க பெரும் பசுக்களாய் திகழ்கின்றன. பசுவின் பாலை கறக்கும் இடையர்களும் அனுபவப்பட்டவர்கள் பசுக்களிலேயே இருந்து பக்குவமாக பால் கறக்கிறார்கள். பொருத்த காம்புகளில் இருந்து பால் இருக்கின்றன. பீறிட்டடிக்கின்றது. குடங்கள் நிரம்பி வழிகின்றன.

இங்கே ஓர் தத்துவ கருத்தும் தொக்கி நிற்கிறது. பசுக்களின் மடியை கரப்பது போல ஞான ஆசிரியரின் அடியை பற்றிக்கொண்டு ஞானப்பால் கறக்க முயல் பவனே சீடன் என்பது பெறப்படுகின்றது. எனவே வள்ளல் பெரும் பசுக்கள் ஞானத்தை வழங்கும் நல்ல ஆசிரியர்களாக கொள்ளலாம் பசுக்கள் பாலால் குடம் நிறைந்தது போல ஆசிரியனும் ஞானத்தால் சீடனின் மனதை நிரூபிக்க வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து
தாழாதே சாரங்க முதைத்த சரமழை போல்,

வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் என்பாவாய்

[திருப்பாவை பா.4]

கண்ணன் தன் தலைவனாக இறைவனாக தன் ஆன்ம நிலையிலேயே நினைத்து பார்த்து நாம் அவரை அடைவதற்கான வழியை நமக்கு சொல்லித் தருகிறது. இந்த உலக இன்பங்களை அனுபவிப்பதற்காக ஆண்டாள் இறைவனை கேட்கவில்லை. இதனை திடமாக மனதில் நிறுத்தி யாரொருவர் இந்த பாசுரங்களை கேட்கிறாரோ அவருக்கு இது புரியும். எனவே நப்பின்னையிடம் அவர் கூறுகிறார்.கண்ணன் உனக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. அவர் எங்களுக்கும் நாயகர். எனவே கண்ணனை நீ எழுப்பி அனுப்பு என்று கூறுகிறார். மிக அழகாக இந்த நோக்கத்தை பதிவு செய்து காட்டியிருக்கிறார். ஆண்டாள் நாச்சியார் இதில் ஆன்ம சித்தி வெளிப்படுகிறது.

மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய்.

[திருப்பாவை பா.19]

இறைவனது கருணை என்பது ஒருவனுக்கு மட்டும் சேர்ந்தது அல்ல எல்லோருக்கும் உரியது என்பதை இதில் பதிவு செய்கிறார் ஆண்டாள். கண்ணனை அடைய வேண்டும் என்று விரும்பினால் தான் காதலிப்பதை கனவில் மனைவியிடத்திலேயே போய் தெரிவிக்கிறாளே இது என்ன நியாயம்? காதல் செய்வது, கல்யாணம் செய்வது, விரும்புகிறேன் என்று சொல்வது இவை அனைத்துமே கிருஷ்ண பிரேமை என்ற விஷயத்திற்குள் அடக்கம். இந்த உலகில் கண்ணன் மீது நாம் வைக்கக்கூடிய அந்த அன்பு என்பதை தான் அதிகமான காதல் என்றும் கண்ணனை தன்னை ஆட்கொள்ளும் விதத்தை தான் தன்னை மணந்து

கொள்ளக்கூடிய தலைவனாக ஏற்றுக் கொள்ளக்கூடிய தன்மையாக ஆண்டாள் நாச்சியார் நமக்கு காட்டுகிறார்.

நம் மனித வாழ்வை போல கண்டிப்பாக இல்லை ஆண்டாள் நாச்சியார் நினைத்தார் என்பது இல்லை அவள் முழுக்க முழுக்க பேரானந்த பெருமாளை பெற வேண்டும் என்பதை தான் இப்பாசுரத்தில் கூறுகின்றாள். இதனையே இறை சிந்தனை என்கிறோம்.

துயில் எழுப்புதல்

ஆறாவது திருப்பாசுரத்திலிருந்து 15ஆம் பாசுரம் வரை முன்னமே துயில் எழாதவர்களை சென்று எழுப்புதல் போன்ற பாசுரங்களாக அமைந்துள்ளனர். இப்பாசுரங்களில் கண்ணனை கொல்வதற்கான கமிசனால் ஏவப்பட்ட பூதனை, பகாசூரன், கேசி, குவளையா பீடம் என்ற யானை, சகடாசுரன், வட்சாசுரன் கவிதாசுரன் போன்ற அரக்கர்களை கொன்று குவித்தான் கண்ணன் என்றும் அதேபோல நாம் மனதில் உள்ள கன்மம் மாயை அனைத்தையும் அகற்றி ஆனந்த பெருவாழ்வை வழங்கும் சக்தி கண்ணன் ஒருவனுக்கு ஆனது எனவும் இத்துயி லெழுப்புதல் பாசுரங்களில் கூறப்படுகின்றது.

கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் வழியாவோ
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற் போல்
அங்கணிரண்டுங் கொண் டெங்கள் மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய் ..

[திருப்பாவை பா.22]

அற்பமான விஷயங்களை இறைவனிடம் யாசிப்பதை விடுத்து ஆன்மாவினுக்குரிய பெரிய விஷயங்களை இறைவனிடம் கேட்டு அணுகினால் வபரானந்த பெருவாழ்வு இம்மையிலும் மறுமையிலும் அடையாளம் என்ற இறை சிந்தனை இங்கு பெறப்படுகின்றது.

முடிவுரை

மனித வாழ்க்கையை செம்மைய அடைய இறைவழிபாடு இன்றியமையாததாகும் இதற்கான அடிப்படை தூண்டுகோல் மனமே ஆகும். மனத்தின் செயல்கள் புறமணச் செயல்களாகவும் அகமன செயல்களாகவும் இருவகை படுகின்றன. இறைவனை ஐம்புலன்களால் முழுமையாக உணர இயலாது. ஆகவே இயற்கையே தன் உடலாக கொண்டு அவன் வெளிப்படுத்துகின்றான் என கருதப்படுகின்றது இதனால் இயற்கையின் வழியாக இறைவனை உணர்ந்து வழிபடுதல் உயர்ந்த வழிபாட்டு முறையாகும். இதன் அடிப்படையில் ஆண்டாள் கூறும் வழிபாட்டு முறைகள் பின்வருமாறு விளங்குகின்றன. குல வேறுபாடுகளை மீறிஞானத்தை ஏற்றுக் கொள்வது நோன்பின் மூலம் உடலும் மனமும் தூய்மை அடைவது இறைவன் மீது காதல் நிலையை உருவாக்குவது இறைவன் இயற்கை வழிபாட்டை மூலம் பிறவி பயனை அடைவது ஆகியவை இறை சிந்தனையின் இயல்பாக கொள்ளப்படுகிறது.

துணைநூற் பட்டியல்

1. டாக்டர் சி.பாலசுப்பிரமணியன் – திருப்பாவை விளக்கம்,
பாரிநிலையம்,184,பிரகாசம் சாலை, சென்னை -600108.

செல்லாதபணம் நாவல் உணர்த்தும் பாத்திரங்களின் இயல்புகள்

தா.பார்வதி முனைவர் பட்ட ஆய்வாளர்,
முனைவர் யு.துர்கா தேவி உதவிப் பேராசிரியர் மற்றும் நெறியாளர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை – 117

ஆய்வுச் சுருக்கம்

நல்ல அழகுடைய பொறியியல் படிப்பை முடித்தவுடன் கையில் வேலை கிடைக்கும் என்ற நிலையில் தன்னைவிட கல்வி, பொருளாதாரம், ஜாதி அனைத்திலும் குறைவாக உள்ள பர்மா அகதியான ஆட்டோக்கார ரவையைத் தவிர வேறு யாரையும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று பிடிவாதமாக நிற்கிறாள்.குடும்பத்தில் உள்ள யாருடைய சமாதானத்தையும் ஏற்காததால் வேறு வழியின்றி ரவியை அவளுக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர் ரேவதியின் குடும்பம்.

ஏழு ஆண்டுகள் கழித்து ரேவதி தீக்குளித்து விட்டாள் என்ற செய்தி ரவி அவளது தாய்க்குக் கைப்பேசி மூலம் தெரிவிக்கிறான். இது தற்கொலையா? கொலையா? அல்லது எதிர்பாராமல் நடந்த விபத்தா? இதற்கு காரணம் யார்? என்பது போன்ற பாத்திரங்களின் பல்வேறு அனுதாபங்களை இந்நாவல் விவரிக்கிறது. பாத்திரங்களின் பொருளாதாரம், சமூக தகுதிக்கு ஏற்ப அவர்களின் இயல்புகளும், உரையாடல்களும் அமைகின்றன. செல்லாதபணம் நாவல் உணர்த்தும் பாத்திரங்களின் இயல்புகள் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

திறவுச்சொற்கள்

பாத்திரங்கள் - இயல்பு - ரேவதி -அமராவதி -ரவி நடேசன், முருகன்- பணம் - ஜாதி.

முன்னுரை

தலித்துகளின் வாழ்வை அவர்களது துயரங்களையும், எதிர்நீச்சலையும் மிகை படுத்தாமல், உணர்ச்சிப் பெருக்கின்றி இயல்பாக தனது படைப்புகளில் முன்வைப்பவர் இமையம். “என் எழுத்தின் நோக்கம் மனித வாழ்வின் அத்தனை மேன்மைகளையும், இழிவுகளையும், இயற்கையின் முன் தோற்றுப் போகும் கணங்களையும், வாழ்வின் பெற்றுத் தன்மையும் புரிந்து கொள்வதற்கான முயற்சியே.”(கோவேறு கழுதைகள்) இமையம் தலித் அல்லாத ஒரு குடும்பத்தின் துன்பத்தை மையமாக வைத்து “செல்லாத பணம்” என்ற நாவலைப் படைத்துள்ளார் 2018 ஆம் ஆண்டு வெளிவந்து, 2020 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றது.

ரேவதி

சிறு வயது முதலே நல்ல படிப்பு,ஒழுக்கம் என்று வளர்ந்தவள் ரேவதி. “காலேஜில் படித்து விட்டு வரும் வரை தங்கம் என்று பெயர் எடுத்த பெண்ணுக்கு வீட்டில் தங்கி இருந்த சில மாதங்களில் ஏன் புத்தி தடுமாறி போயிற்று”(செ. ப. 15)

என்று தாய் கூறுவதன் மூலம் அவள் ரவி மீது காதல் வயப்பட்டதை உணர முடிகிறது.தனது தந்தை, தாய், அண்ணன், தோழி எனப்பலரும் ரவி உனக்கு எந்த வகையில் பொருத்தமானவர்? என்ற கேள்விகளைத் தொடுக்க அதற்கான காரணத்தை சொல்லத் தெரியாத அவள் தீக்குளித்து மருத்துவமனையில் இருக்கும்போது அவனை ஏன் பிடித்ததற்கான காரணத்தை சொல்கிறாள்.

“நெஞ்சிலயும் ரெண்டு கையிலயும் பச்ச குத்திக்கிட்டு வந்து காட்டுனது.பாக்குறப்பலாம் ‘நீ என்னெக் கல்யாணம் கட்டிக்கலன்னா செத்திடுவன்’னு சொல்லிக் கைய பிளேடால கிழிச்சிக்கிட்டது.’ஐயோ பாவம்’ன்னு நெனச்சேன். (செ. ப. 57) ரவி வீட்டின் வறுமையையும், குடி நோயாலும் ரேவதிக்கு ஒரு நாள் கூட நிம்மதியான தூக்கம் வரவில்லை. தான் வேலைக்குச் சென்று சம்பாதித்தால் வீட்டின் வறுமை நிலைக்

குறையும் என்று நினைக்கிறாள். 'வேலைக்கு அனுப்பாதடா. வேலக்கி போனா மதிக்க மாட்டா.பொட்டச்சி பணம் சம்பாரிச்ச ஆம்பளய எப்படி மதிப்பா?' (செ. ப. 158). ரவியின் சந்தேகப் புத்தியாலும், தன் தாயின் தூண்டுதலாலும் ரேவதி வேலைக்கு செல்வதை தடுக்கிறான்.

ரவியின் ஆட்டோவுக்கு டியூ கட்டுவதற்காக பணத்திற்கு தன் தாய் வீட்டிற்குச் சென்று பண உதவி பெறுவதும், இதை தன் தந்தையும்,அண்ணனும் கண்டும் காணாமல் இருப்பது, இதற்கு இடையில் ரேவதி இரண்டு பிள்ளைகளுக்கும் அவளது தாய்பிரசவம் பார்த்து அனுப்புவது, ரவி குடிநோயால் சித்திரவதை அனுபவிப்பது போன்று இப்படியே நாட்கள் நகர்கின்றன. பின்னர் ஒருநாள் தீக்குளித்து மருத்துவமனையில் கிடக்கும் போது அவள் தன் தாயிடம். "நடந்ததெல்லாம் ஆக்சிடண்டு. விட்டுத்தள்ளு. யாரயும் குத்தம் சொல்லாத. யாரையும் திட்டாதே. நான் வீட்டுக்கு வந்ததும் வேலக்கிப் போவணும். அவ்வளவுதான். அதுதான் எனக்கு இப்ப ஆச." (செ. ப. 59)

குடும்பத்தினருடைய பாசத்தைப் புரிந்து கொள்ளாமல் தனது முடிவால் குடும்பத்தை துன்பத்துக்கு ஆளாக்கி விட்டோம் என்ற குற்ற உணர்ச்சியால் இவ்வாறு சொல்லும் ரேவதி இறக்கும் வரை ரவி மீது எந்த குற்றச்சாட்டை முன் வைக்கவில்லை.

ரேவதியின் குடும்பத்தினரும், அவர்களது உறவினர்களும், ரவி தான் ரேவதியைத் தீயிட்டுக் கொளுத்திருக்க வேண்டும் என்று நம்புகிறார்கள். ஆனால் ரவியோ அவளே எரித்துக் கொண்டால் என்கிறான். ஆனால் ரேவதியோ காவல்துறை என்னிடம் வாக்குமூலம் கொடுக்கும் பொழுது,

" மூன்று மணிக்கு நான் சமைத்துக் கொண்டிருந்தேன். அடுப்பில் குழம்பு கொதித்துக் கொண்டிருந்தது. நான் குழம்பைக்கிண்டி விட்டுக் கொண்டிருந்தேன். உப்பு பாட்டிலை எடுப்பதற்காக திரும்பிய போது தண்ணீர் மேடையிலிருந்த மண்ணெண்ணெய் கேன் சாய்ந்து குழம்பிலும்,அடுப்பிலும் கொட்டியதும் தீப்பிடித்துக் கொண்டது.என்

கணவர் ஓடி வந்து என் மீது தண்ணீரை ஊற்றித் தீயை அணைத்தார்.நானும் கொளுத்திக் கொள்ளவில்லை. என் கணவரும் என்னைக் கொளுத்தவில்லை. தீ விபத்து எதிர்பாராத விதமாக நடந்தது. இதற்கு யாரும் காரணம் இல்லை. வாக்குமூலம் என் மனசாட்சியின் படி தான் கொடுத்தேன். யாரும் என்னை க்கட்டாயப்படுத்தவில்லை இப்படிக்கு"W/O ரவி, (செ. ப. 93)

ரேவதி திருமண வாழ்க்கையின் மீது ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக தான் இறக்கும் நிலையிலும் கூட தனது கணவனையோ, கணவன் குடும்பத்தினரையோ, பார்க்காமல் தனது தந்தை, தாயும்,அண்ணனையும் காண விரும்புகிறாள்.

அமராவதி

அமராவதியே ரேவதியின் அம்மா இந்நாவல் முழுக்க ரேவதியின் மனநிலையையும், வலிகளையும் வெளிப்படுத்துகிறார் என்று கூறலாம். தன்மகள் அவள் தகுதிக்கும் குறைவான போக்கிரியை காதலிக்கிறாள் என்று ஆத்திரப்படுவதும், ரவியின் வீட்டிற்குச் சென்று அவளது அக்கா பிரியங்காவிடம், " ஒன்னெ இந்த மாதிரி ஒரு பொறுக்கி பய வந்து ராவும் பகலும் தொந்தரவு செஞ்சா நீ என்ன செய்வா?." (செ. ப. 14) என்று கேட்டாள். ரேவதி குடும்பத்தை விட்டு ஓடிப்போய் திருமணம் செய்து கொள்வாளா? இல்லை என்றால் வேறு திருமணம் செய்து வைத்தால் தன் உயிரை மாய்த்துக் கொள்வாளா? என்று தினந்தோறும் தன் மகளின் துயர நிலையைக் கண்டு கணவன் மற்றும் மகனிடம் ரவியை அவளுக்கு திருமணம் செய்து வைக்கும்படி கேட்கிறாள். அவர்களும் எதையாவது செய் என்று சொல்ல திருமணம் நடைபெறுகிறது.

"கல்யாணம் நடந்த எட்டாவது மாதத்தில் அடித்து போட்டு விட்டான். நினைவு இல்லாமல் ரோட்டில் கிடக்கிறாள் என்று தெரிந்தவர்கள் சொன்னதால் அமராவதி போனாள். நினைவில்லாமல் கிடந்தவளை அழைத்துக் கொண்டு போய் மருத்துவமனையில் சேர்த்தாள்.குடித்துவிட்டு வந்த ரவி "எம்பொண்டாட்டிய ஆஸ்பத்திரியில

சேக்குறதுக்கு நீ யாரு.?" (செ. ப. 94) என்று கேட்டுச் சண்டைக்கு வந்தான். மருத்துவமனையில் சேர்த்து வைத்தியம் பார்த்து வீட்டுக்கு அனுப்பிய பிறகுதான் அமராவதி இடம் ரேவதி போனில் பேச ஆரம்பித்தாள்.ரேவதிக்கு பணம்,பொருள் என்று கொடுக்க ஆரம்பித்தாள். அவள் கொடுப்பதில் பாதி நடேசனுக்கு தெரியும், பாதி தெரியாது.நடேசனிடம் பொய் சொல்ல ஆரம்பித்தாள்.

ரேவதிக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லும் போது நடேசனும், முருகனும் 'எந்த எழவாவது எடு' என்று சொல்லிப் பணத்தைத் தூக்கி எறிவார்கள். வீம்பு பிடித்தால் காரியம் நடக்காதே என்று தூக்கி வீசிய பணத்தை பொறுக்கி எடுப்பாள்,தன்னுடைய மகளின் தேவைக்காக. இதற்கிடையில் அவள் கருத்தரித்த நாள் முதலே செலவு யாரு பார்ப்பது? என்று ரேவதி அடித்தான். இதைக் கேள்விப்பட்ட தாய் அமராவதி தன் மகளை மருத்துவமனையில் சேர்த்து இரண்டு குழந்தைகள் பிறந்து பிரசவம் பார்த்து தாய் வீட்டில் பத்து நாட்கள் தங்க வைத்து வீட்டிற்கு அனுப்பும் போது ஆளுக்கு ஒரு பவுன் நகைப் போடுகிறாள். ரவி அந்த நகைகளும் விற்றுவிட்டு ஆட்டோவில் டியூ கட்டுவதற்காக அமராவதி உதவியை நாடுகிறாள் ரேவதி." எந்த கருமாதியா இருந்தாலும், நீயே பாத்துக்க. நீயே செஞ்சிக்க. எங்கிட்ட கொண்டு வராத."(செ. ப.10)என்று நடேசனும், முருகனும் ஒதுங்கிப் போனார்கள்.ஒரு நாளும் ரேவதி தன்னுடைய பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வந்ததில்லை, ரவியும் வருவதில்லை, ரேவதி மட்டும்தான் அவள் வீட்டிற்கு செல்வாள்.

ரவி தனது சந்தேகப் புத்தியால் தான் ரேவதியை வேலைக்கு அனுப்பவில்லை. குடிக்காதே என்று சொன்னால் அடிப்பதும், நெறயா கத புஸ்தகம் படிப்பா. அவளுக்குன்னு அவ செஞ்சிக்கிற செலவு புஸ்தகம் வாங்குறது தான்.'குடும்பம் நடத்த வந்தியா, புக்கு படிக்க வந்தியா'ன்னு கேட்டு அடிப்பான். (செ. ப. 49) ஒரு பெண் கல்வி, சமூகம், பொருளாதாரம் என்று ஓங்கி உயர்ந்து நின்றாலும் தன் கணவன் என்ற

ஒரே அதிகாரத்தைக் கொண்டு அந்த பெண்ணிற்கு மனதிலும், உணர்விலும் வன்முறையை செயல்படுத்துகிறான் என்பது புரிகிறது.

ரேவதி தீக்குளித்து விட்டாள் என்ற செய்தி வரும்போது அமராவதி ரவிதான் ரேவதியை தீயிட்டு கொளுத்தி இருக்க இருப்பான் என்று நிச்சயமாக நம்புகிறாள்.

"அவன அவ விட மாட்டாங்க.பட்ட அடியும் ஒதயும் மறந்திடுமா? மூஞ்சிலியே காரித்துப்பனது, ஒங்கப்பனும், ஒங்கண்ணனும் புடுங்கிவானான்னு கேட்டது,குடிச்சிப்புட்டு நிதானமில்லாம வந்து 'வாயில சோத்த வையிடி'ன்னு எத்தனை முறை சொல்லியிருக்கான். வாயிலிருந்து சோத்த அப்படியே முகத்திலே துப்பிருக்கான். அடி ஒத வாங்கிக்கிட்டு எங்க போறதின்னு தெரியாம கோயில்லப் போயி ஒக்காந்து அழுதுட்டு வந்தாளே? பத்து நாளக்கு முன்னால நடந்த சண்டையிலே அடியயும் ஒதயும் வாங்கிக்கிட்டு, போறதுக்கு எடமில்லாம பஸ்ஸ்டாண்டு வர ரெண்டு தடவ சும்மாவே நடந்து போயிட்டு வந்தாளே அத மறந்திடுவாளா?"(செ. ப.22)

என நடந்த கொடுமைகளை ரேவதி நீதிபதியிடமும், காவலர்களிடமும் சொல்லி ரவியை சிக்க வைப்பாள் என்று அமராவதி சொல்கிறாள். இதைப்பற்றி நடேசனிடமோ,முருகனிடமோ சொன்னதில்லை என்று புலம்புகிறாள் அமராவதி.

ரேவதி தீக்குளித்ததற்கு யாரும் காரணமில்லை இது எதிர்பாராமல் நடந்த விபத்து என்று வாக்கமூலம் கொடுத்ததை ஏற்றுக் கொள்ள முடியாமல் அமராவதி பேசும் வார்த்தைகள்,"இந்த நெலமயிலும் என்னெத் தலைகுனிய வச்சிட்டா. சாவட்டும். அவ சீக்கிரம் சாவறதுதான் நல்லது. ஆறு, ஏழு வருஷமாவா ஒருத்தி பெத்த தாயெக் கொல நடுங்க வைப்பா? என்னெப் போல புள்ள பெத்தவங்க ஒலகத்துல யாரும் இல்லெ. இந்த நெலமயிலயும் அவளுக்குப் புருசன் ஆச போவல பாரு.ரோட்டு பொறுக்கிக்கே இம்மாம் விஷம் காட்டிட்டா." (செ. ப. 95)

அவள் பட்ட துன்பங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று புலம்புகிறாள். தீயில் வெந்துவிட்ட தன் மகள் ரேவதியை நினைத்து தன்னிலை மறந்து இருந்தவள் தான் அமராவதி. "ஆறு வருஷமா அவகிட்ட பேசல .'சாப்பிட்டியா?'ன்னு கேக்கல. 'நல்லாயிருக்கியா?'ன்னு கேக்கல, 'நான் பாத்துக்கிறேன் கவலப்படாம இரு'னு சொல்லல. மொத்தமா மூணு, நாலு லட்சத்தக் கொடுத்திருந்தா ரெண்டு மூணு ஆட்டோவ வாங்கி ஓட்டியிருப்பான். பணம் இல்லன்னு சண்டை வந்திருக்காது. நான் அவளப் பத்தி பேச்ச எடுத்தப்பலாம் என் வாய மூடிக்கிட்டேன்.இப்ப எம்பொண்ணு செத்திருவாப் போல இருக்கே?" (செ. ப. 155)

என்று ரேவதி இந்த நிலைமைக்கு தனது கணவனும், மகனும் ஒரு காரணம் என்று கூறுகிறாள் அமராவதி.

ரேவதி உடலை பிணவறையில் இருந்து கொண்டு வந்து அமரர் ஊரில் ஏற்றும் போது அமராவதி,

"தூங்கிட்டியா அம்மா? தூங்கு. இனி ஒனக்கு எந்த தொந்தரவும் இல்ல. தப்பு செஞ்சிட்டோமேன்னு இனி நீ அழுவமாட்ட. எந்த நாயும் இனி ஒன்னை அடிக்க முடியாது.ஒதைக்க முடியாது. இனி அடிக்கு பயந்துக்கிட்டு எதுத்த வீடு, பக்கத்து வீடுன்னு நீ ஓடி ஒளிய வேண்டியதில்ல. அம்மாவுக்கு தெரிஞ்சிடுமோன்னு எதயும் நீ மனசில போட்டு மறக்க வேண்டியதில்ல. 'எங்கம்மாகிட்ட சொல்லிடாதிங்க'ன்னு யாருகிட்டேயும் கெஞ்ச வேண்டியதில்லை." (செ. ப. 214)

அமராவதி தன் மகளுக்காக இறுதி வார்த்தையைச் சொல்கிறாள். பெண்ணாகப் பிறந்து தன் விருப்பப்படி செய்து கொண்ட திருமணத்தில் குடிகார கணவனும், கௌரவம் என்று பிரச்சனைகளைக் கண்டு ஒதுங்கி நடக்கும் அப்பா, அண்ணன் இதற்கிடையில் சிக்கி தவிக்கும் அம்மா என யாருக்கும் பயந்து ஒதுங்கி இனி ரேவதி வாழ வேண்டியதில்லை,என்னும் வார்த்தைகள் பெண்கள் உடலாலும், மனதாலும் சித்திரவதை

செய்துக்கொண்டிருக்கும் ஆணினன் சமூகத்திற்கு ஏற்படும் பேரிழப்பாகும்.

" இப்ப என் நெஞ்சு கடலப் போல குதிக்கல. நெருப்பப்போல எரியல. நீ தூங்கிட்டல்ல. அதனாலதான் என் நெஞ்சு அடங்கிப்போச்சி. ஒடம்பு குளந்து போச்சி. நான் எதுவும் செய்யல. என்னால எதுவும் செய்ய முடியல". (செ. ப. 215) இந்நாவலில் ரவி, நடேசன் முருகன் என அனைவரும் தன்னைவிட தன் குடும்ப கௌரவம் முக்கியமானது என்று கருதுகிறார்கள். இது ஒரு தாயின் மயான அமைதியை உணர்த்துகிறது. அமராவதிக்கு மானத்தை விட தன் மகள் ரேவதி தான் முக்கியம் என்று கருதியவள்.

ரவி

குடிகாரன், வம்புக்கு நிற்பவன், பெண்களை ஒரு பொருளாக மட்டுமே கருதுபவன் என்று இந்நாவல் முழுவதும் இவனது பாத்திரம் பேசப்படுகிறது. ரவியின் அக்கா அவனை விட இரண்டு வயது மூத்தவள் அவளுக்கு திருமணம் செய்து வைக்காமல் அவன் திருமணம் செய்து கொள்கிறான்.அவள் தாய் கோகிலா கூட ரவியை ஒழுக்கக்கேடானவன் என்று கூறுகிறாள். தனது அக்காவையோ, ஐந்து வயது மகளே நீங்கள் யாரையாவது காதலித்தால் கொன்று விடுவேன் என்று எச்சரிக்கிறான். ரவி ஆண் காதலித்து திருமணம் செய்தால் சரி என்று அதுவே தன் வீட்டுப் பெண் காதலித்தால் தவறு என்று சொல்வது ஆணின் ஆதிக்கத்தைக் காட்டுகிறது. ஒரு ஆணாக இருந்து தன்னுடைய குடும்பத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யாமல், அதிகாரம் செலுத்துபவனாக விரும்புகிறான் என்பதை இந் நாவல் சுட்டிக்காட்டுகிறது.

ரேவதி தீக்குளித்து ஜிப்மர் மருத்துவமனையில் சேர்த்து பிறகு தன் நண்பருடன் இருக்கும் ரவி காவல்துறை தன்னைத் தேடுகிறதா? என்று கண்காணித்துக் கொண்டே

“தாலி கட்டிக்கிட்டு வந்த ஒரு மாசத்திலியே என்னிக்கா இருந்தாலும் ஒன்னெ ஒரு நாளக்கி ஜெயிலுக்கு அனுப்பாம இருக்க மாட்டன்னு சொல்லிக்கிட்டேயிருந்தா அந்த முண்டச்சி. சொன்ன மாரியே இன்னிக்கே செஞ்சிடுவா போல இருக்கு.”(செ. ப. 89)

அவன் இவ்வாறு கூறுவதன் மூலம் ரேவதி செல்வாக்கு மிகுந்த குடும்பத்தையும், உறவினர்களையும், தூக்கி எறிந்து விட்டு வந்தவளை, அவள் எரிந்து வெந்து கிடக்கும் நிலையிலும், ரவி பற்றி எந்த குறையும் சொல்லாத நிலையிலும் அவன் இவ்வாறு குற்றம் சொல்கிறான். ஆணாதிக்க நோயும், குடிநோயும் சேர்த்து ஒருவனை எப்படி மாற்றுகிறது என்பதற்கு சான்றாக விளங்குகிறான் ரவி.

“சண்டையெல்லாம் அன்னிக்கு நடக்கல. நாலு நாளக்கி முன்னால அவங்கம்மா ஆட்டோவுக்கு டியூ கட்ட நாப்பதாயிரம் கொடுத்தாங்க. அதுல ஐநூறு எடுத்துக்கிட்டு சரக்கு சாப்பிட்டு வந்துட்டேன்.’எங்கம்மா டீயூ கட்டத்தானே பணம் கொடுத்தாங்க. அதுலயிருந்து எடுத்துக்கிட்டுப் போயி எதுக்கு குடிச்ச? நீ இதே மாதிரி செஞ்சிக்கிட்டேயிருந்தா நான் செத்திடுவன்’னு சொன்னா. நான் வெளயாட்டுக்கு ‘சரி. செத்துப்போ’ ன்னு சொல்லிட்டேன். கொஞ்ச நேரம் கூட இருக்காதுக்ஷ எல்லாம் முடிஞ்சுப் போச்சி” (செ. ப. 159)

என்று அழுதான். இது ரவிக்கும், ரேவதியின் அண்ணி அருண்மொழிக்கும் இடையில் நடந்த வாக்குவாதத்தில் ரவி கூறியது. ஆனால் அவன் காவல்துறையினரிடம் எழுதிக் கொடுக்கும் போது எதிர்பாராமல் நடந்த சம்பவம் என்று வழக்கறிஞரின் உதவியோடு எழுதித்தருகிறான்.

அருண்மொழிக்கும், ரவிக்கும் இடையே நடக்கும் வாக்குவாதத்தில் ரேவதி குடும்பத்தைக் குற்றம் சாட்டி தன் பக்கம் இருக்கும் நியாயத்தை எடுத்துக்காட்டி விளக்குகிறான்.

“நீங்க எல்லாரும் பெரிய படிப்பு படிச்சவங்க. பெரிய வேலயில இருக்கிறவங்க. பணம் உள்ளவங்க. எல்லாம் இருக்கு ஒங்ககிட்ட. ஆனா

பெரிய மனசு மட்டும் இல்ல.” “எங்கிட்ட பேசுனா என்ன, என்னெ அந்த வீட்ல விட்டா என்னா? எம் புள்ளைங்கிட்ட பேசுனா என்ன? இது தான் அவளுக்கு வருத்தமா இருந்துச்சி. அதனால தான் எல்லாரயும் நான் திட்டுவேன். அதனால்தான் எனக்கும் அவளுக்கும் தெனம் தெனம் சண்ட நடக்கும். நான் சல்லிப் பயதான் இல்லன்னு சொல்லல. சல்லிப் பய சல்லிப் பயலாத்தான் இருப்பான். ஆனா, பெரிய மனுசன் பெரிய மனுசனா இருக்கணுமா இல்லியா?”(செ. ப. 161)

“ நான் தெனம் அவ ஒடம்புல தான் அடிச்சேன் நீங்க மனசுல அடிச்சிங்க”

“ எங்கிட்ட பணம் இல்ல. ஒங்ககிட்ட இருந்துச்சி. அதனால நீங்க எம்மாம் அசிங்கப்படுத்தினாலும் ரேவதி ஒங்ககிட்ட வந்துகிட்டிருந்தா. பணத்தாலதான் அவ அசிங்கப்பட்டா. அவளுக்கு இனிமே அந்த அசிங்கம் இல்ல. இனிமே அவளுக்கு ஆட்டோக்காரன் பொண்டாட்டிங்கிற பேரு இல்ல,அசிங்கம் இல்ல.” (செ. ப. 163)

என்று ரேவதி குடும்பத்தாரின் தவறுகளை தன்னுடைய புத்திசாலித்தனத்தால் சுட்டிக்காட்டுகிறான்.

நடேசன்,முருகன்

ரேவதியின் தந்தையான நடேசனுக்கு ரேவதியின் காதல் தெரிய வந்ததும் அவளுக்கு இது வேண்டாம் என்று எடுத்து சொல்லியும், தனது மனைவியின் மூலமாக காதலுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதும் நடக்கிறது.

ரேவதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது நடேசன் மருத்துவரிடம் கைப்பையில் வைத்திருந்த பணக்கட்டுகளை மேசை மீது வைத்தார்.

“அட்மிஷன் ஆன உடனே ஒடம்பு சரியாகுமா?கொடுக்கிற மருந்தும் மாத்திரயும் வேல செய்யுறதுக்கு ஒரு டைம் வேணாமா?” என்று சொன்ன மருத்துவர் மேசை மீது இருந்த பணம், நகைகளைப் பார்த்த பிறகு என்ன தோன்றியதோ தளர்வான குரலில், “இந்த நிமிஷத்திலே இதுக்கெல்லாம் எந்த அர்த்தமும் இல்ல. இப்ப இந்தப் பணம் செல்லாது.”(செ. ப. 61)

என்று சொல்லிவிட்டு வெளியே சென்றுவிட்டார்.

அமராவதி தன் மகள் ரேவதி இப்படி ஆனதற்கு தன் கணவன் நடேசன் ஒரு காரணம் என்று குற்றம் சாட்டுகிறாள் அமராவதி. அதைக்கேட்டு கடைசியில் நடேசன் சொன்ன வார்த்தைகள்

“நான் கேட்டா. கண்டிச்சா நம்ப பொண்ணப் போட்டு அடிப்பான். ஓதைப்பான்னுதான் கேக்கல போலீசுக்கும் போவல. நான் இத்தினி வருசமா ஒதுங்கிப் போனதுக்குக் காரணம் எம்பொண்ணு தொந்தரவு இல்லாம இருக்கணும், உசுரோட இருக்கணும்தான். நான் ஒண்ணுச் சொல்ல, அவன் ஒண்ணுச் சொல்ல பேச்சு முத்திப்போயி அசிங்கமாயிட்டா, ஒங்கிட்ட பேசறதும் நின்னு போயிடும். நீ கொடுக்கிற காசும் இல்லன்னா இன்னும் கஷ்டப்படுவான்னு தான் விலகிப் போனேன். எனக்கும் அவனுக்கும் சண்டையாயிட்டா நம்ப அப்பாவ அசிங்கப் படுத்திட்டானேன்னு அவ பெரிய சண்டையாப் போட்டு, அதனால அவன் அதிகமாக அடிப்பானேன்னு ஒதுங்கிப் போனேன்.” (செ. ப. 66)

என்று சொன்ன நடேசனுக்கு அதற்கு மேல் பேச முடியவில்லை. கண்களில் கண்ணீர் நிறைந்து விட்டது. தலையை கவிழ்த்துக் கொண்டார்.

முருகன் தன் தங்கை ரேவதி ஏன் வாக்குமூலத்தை மாற்றி கொடுத்தால் என்பதை கேட்டே தீரவேண்டும் தீர்க்கமான மனநிலையில் இருந்தான். ஆனால் தன் தங்கை ரேவதியை பார்த்ததும் அவளது நிலையை எண்ணி கதறுகிறான்.

“அவளைப் பார்த்த நொடியே கருகிப் போய்விட்டான். அதற்காக அவளிடம் கோபப்பட முடியவில்லை. பேச முயன்றான். வாய் திறக்கவில்லை.பேச்சு வரவில்லை. அழுகை தான் வந்தது.”(செ. ப. 111)

ரேவதியின் இறுதி ஊர்வலம் அமைதியாக நடைபெற வேண்டும் என்பதற்காக ரவி வீட்டிற்கு ரேவதி உடலை கொண்டு செல்ல அனுமதிக்கிறான். உறவினர்கள் ரவி மீது ஏன் புகார் கொடுக்கவில்லை?

என்று கேள்விகளுக்கு பதில் சொல்லும் மனநிலையோ முருகனுக்கும், நடேசனுக்கும் இல்லாமல் இருந்தது.

முடிவுரை

செல்லாத பணம் வாசிப்பவர்களுக்கு தீக்குளித்து தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் வராது.அவர்களின் குடும்பம் படும் துன்பங்களும், மருத்துவமனை,காவல்துறை நடைமுறைகள், நோயாளிகளை பார்க்க வரும் பார்வையாளர்களின் அர்த்தமற்ற கேள்விகள், மருத்துவர், செவிலியர்களின் சிக்கல்கள் ஆகியவற்றை உணர்த்துகிறது, தன் ஆசிரியருக்கு உதவுவதற்காக கட்சி வேறுபாடின்றி ஒன்றிணையும் அரசியல்வாதிகள் போன்றோர் எவ்வித பிரதிபலனும் பாராமல் ரேவதி குடும்பத்திற்கு உதவி செய்யக்கூடிய மனநிலையை எடுத்துக்காட்டுகிறது. இமையத்தின் புனைவுகள் கதாபாத்திரங்களின் உரையாடல்கள், அவர்களின் எண்ணத்தின் ஓட்டங்கள், எழுத்தாளனின் வர்ணனை என்று மொழியாடல்களின் அமைந்துள்ளது.ஆண்மைய சமூகமாக தொடர்ந்துக் கொண்டிருக்கும் நம் சமூகத்தில் பெண்களின் நிலை, உணர்வுகள், வலிகள் பற்றிய ஆவணமாக இந்த நாவல் சமூகத்தை பிரதிபலிக்கிறது என்பதை கட்டுரை மூலம் அறியலாம்.

துணைநூற் பட்டியல்

இமையம் - செல்லாத பணம் - கிரியா பதிப்பகம், சென்னை 2018.